தாயின் சந்தோஷம்



என் குழந்தையின் ஈரல் குலைகட்டி வியாதி சோஸ்தப்படுத்த முடியாதளவு முற்றியிருக்கிறது என்றும், குணப்படுவது கஷ்ட மென்றும், எல்லோராலும் கருதப்பட்டது. ஆனால் ஜம்மியின் லிவர் க்யூரினால் என் குழந்தை காப்பாற்றப்பட்டதிற்கு அவருக்கு என் மனமார்ந்த வந்தனம். ஈரல் குலைகட்டிக்கு நாமதிக்காமல்

ஜம்மியின் லிவர் க்யூர்

உபயோகியுங்கள்.

ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ்,
மைலாபூர் — மதறாஸ்.
சப் ஆபீஸ்: கும்பகோணம்.
பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பேங்களூர், திருச்சினப்பள்ளி, விஜயநகரம்.

இறும்

லைசென்ஸ் தேவையில்லை

ஆடோமாடிக் ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும பயமுறுத்த ஆடோமாடிக ரிபீடர் எவ்விதத் தொந்தரவுமின்றி 6 முறை சுடலாம். உண்மை ரிவால்வரைபபோல் சப்தம் கேட்கும். சுடும்பொழுது நெருப்பு தெரியும. தீங்கான விலங்குகள் பறவைகளை விரட்ட உபயோகமானது, அசரத்திறகுஒவ்வொரு வீட்டிலும இருக்கவேண்டும. லைசென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/4/-35 ரவைகள் இலவசம. நெ. 8888 ரூ. 5/8/- 45 ரவை இலவசம. நெ. 9999 ரூ. 6/12/- 55 ரவை இலவசம. அதிகப்படி 400 ரவை ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. -/12/- ஆயில் ரூ. 1/12/- தபால் சார்ஜ பிரத்யேகம.

இலவசம்:— ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம. ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும. சேர்ந்தாறபோல் இரண்டு வாங்கினால், 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ.

இந்த குறைநத கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன எழுதுங்கள்.

LONDON C. COMPANY,
Post Box No. 165 (S.M.M.) LAHORE (India)
(EAB)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், ''சந்திரிகை'' எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

வாசனை கூந்தல் தைலம், சுண்ணாம்பு வாசனை, தாம்பூல மாத்திரை, இவை 3 புட்டியும் தபால் செலவுடன் ரூ. 1-2-0.
'சிசு ரக்ஷணி' இசிவு, இளம்பிள்ளை வாதம், வயிற்றுக் கட்டி இவற்றின் பாதுகாப்பும், பரிகாரமும் கைகண்ட ஷித் தௌஷதம். தபால் செலவுடன் புட்டி ரூ. 2—14—0.
(முன் பணம் மணியார்டர் செய்யவும்)
எனது 3-வயது குழந்தையின் வயிற்றுக்கட்டி ஒரே புட்டி 'சிசு ரக்ஷணி'யால் பூராவும் குணமாயிற்று. வி. ராமசந்திரன், பல்லாரி.

ஏ. எஸ். டெப்போ,
76, கொன்னூர் ஹைரோட்,
பெரம்பூர், மதராஸ்.

கவலை வேண்டாம்.

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

உங்களுக்கு

மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்

உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி, மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்

துணிகளை அதிக நன்றாக வெளுப்பதற்கு இந்த விசேஷமான ஸோப்பை உபயோகியுங்கள்.



★ ஆடைகளை அதிக வெண்மையாக அலக்குகிறது.
★ மெல்லிய வஸ்திரங்களுக்கு கேடிழைப்பதில்லை.
★ வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை அதிகம் லகுவாக்குகிறது.

டாம்கோ விற்பனை இலாகா
நெ. 1, வாரன் ரோட், பிமன்பேட், மைலாப்பூர், மதராஸ்,

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & டம்பாய்.
(F S 1951)

காபுல் பால் காயம்

இது சாதாரணமாக கடைகளில் விற்கப்படும் காயம் போன்றதல்ல. கலப்பற்ற அசல் பால்காயம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் மசாலா சாமான்களுடன் உபயோகிப்பதற்கு அத்யாவசியமானது.

10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.
முத்தையா ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'
நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். பாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் முதல் பாகம் 2 0 0 இரண்டாம் பாகம் ரூ. 2. மூன்றாம் பாகம் ரூ. 2.
(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாரருக்கு ரூ. 4.)
மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

பகவத் கீதை

விலை ரூ. 3.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor. C. R. Srinivasan B.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 48 27-12-'42 வாரப்பதிப்பு Price 2 Annas.

★
சொல்லும் மழலையிலேகண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச்சிரிப்பாலே - எனது
மூர்க்கந்தவிர்த்திடுவாய்
★

சென்றவார நிகழ்ச்சிகள்

பத்திரிகைகள் ஹர்த்தால்

அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியின் கூட்டம் பம்பாயில் நடந்தது. ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸன் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாக சில மாகாண சர்க்கார்கள் வெளியிட்டுள்ள உத்தரவை எதிர்த்து, இந்தியாவிலுள்ள எல்லா பத்திரிகைகளும், தலைவர் குறிப்பிட்ட ஒரு தினத்தில் பத்திரிகைகளை வெளியிடாமல் இருக்கவேண்டும். மேலும் சர்க்கார் உத்தரவு ரத்து செய்யப்பட்டோ அல்லது மகாநாட்டு தலைவர் வேறு உத்தரவு கொடுத்தாலொழிய கீழ் குறிப்பிட்டிருக்கிற விஷயங்களை பிரசுரம் செய்யக்கூடாது. (1) சர்க்கார் நிலையங்களிலிருந்து வெளியாகும் அறிக்கைகள். (2) புது வருஷத்திய பட்டம் பெற்றவர்கள் ஜாபிதா. (3) இந்திய சர்க்கார், மாகாண சர்க்கார்கள், பிரிட்டிஷ் சர்க்கார் இவைகளைச் சார்ந்த அங்கத்தினர்களின் பிரசங்கங்கள். அப்பிரசங்கங்களிலுள்ள தீர்மானங்கள், அறிக்கைகள் இவற்றை மட்டும் பிரசுரிக்கலாம்.

கல்கத்தாவில் ஜப்பான் குண்டு வீச்சு

சென்ற 20-ந் தேதி ஞாயிறன்று இரவு சுமார் 11 மணிக்கு ஜப்பானிய விமானங்கள் கல்கத்தா பிரதேசத்தில் குண்டுகளை வீசின. நிலவொளியில் இச்சம்பவம் நிகழ்ந்தது. ஜப்பானியர் இரவு வேளைகளில் குண்டுகளை வீசுவதென்பது இதுவே முதற் தடவை என்று கூறப்படுகிறது. 10-17 மணிக்கு அபாய எச்சரிக்கைச் சங்கு ஒலித்தது. 2 மணி நேரத்துக்குப் பின்புதான் அபாயம்நீங்கியதற்கு அறிகுறியான சங்கு ஒலித்தது.

22-ந் தேதி செவ்வாய்கிழமை விடியற் காலையிலும் எதிரி விமானங்கள் கல்கத்தா பகுதியைச் சிறிது நேரம் தாக்கின. 22-23-ந் தேதியன் இரவு மற்றுமோர் முறை ஜப்பானிய விமானங்கள் கல்கத்தாவைத் தாக்கின. இன்னும் முழு விவரமும் கிடைககவில்லை. மேற்படி மூன்று தடவைகளிலும் எதிரிகள் ஒரு சில குண்டுகளையே வீசினர் என்றும், சொத்துச் சேதமில்லையென்றும், உயிர்ச் சேதம் மட்டும் சொற்பமென்றும் கூறப்படுகிறது.

22-ந் தேதி நடந்த குண்டு விச்சு முதல் நாள் நடந்ததை விட சிறிய அளவிலேயே இருந்ததென்றும், அன்று காலை எதிரி விமானங்களில் 6-க்கு குறைவாக வந்தன வென்றும் குண்டு வீசி விட்டு அவை ஓடி விட்டன வென்றும் கூறப்படுகிறது. ஏ. ஆர். பி. யைச் சேர்ந்த ஒருவரது தொப்பியில் குண்டு சிதள் ஒன்று ஊடுருவிற்றென்றும் ஆனல் அவர் காயமின்றி தப்பினர் என்றும் கூறப்படுகிறது.

சிட்டகாங் பகுதி 20-ந் தேதி தாக்கப்பட்டது. இத்துடன் 8 தடவைகள் சிட்டகாங் தாக்கப்பட்டுளது.

ஐரோப்பியச் செய்திகள்

ஸ்டாலின்கிராடில் நாஸிகள் ஏற்பாடு

ஜெர்மனியர் ஸ்டாலின்கிராடில் செய்துள்ள ஏற்பாடுகளைப் போலவே ரஷ்யாவில் மற்ற விடங்களிலும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். அவர்கள் மிக்க சக்தி வாய்ந்த அரண் வசதிகளைச் செய்திருக்கின்றனர். ஆழமான அகழ்களையும் பல படை நிலங்களையும் அமைத்திருக்கின்றனர். இவற்றிற்கு முன்பு சுரங்க வெடிப் பிரதேசங்களையும் அடர்ந்த முட் கம்பி வேலிகளையும் போட்டிருக்கின்றனர். அவர்கள் நிர்ப்பந்தமேற்பட்டாலொழிய போராடுவதில்லை என்ற நோக்கத்துடனிருக்கின்றனர்; நற்காலம் வரும் வரை தங்கள் பலத்தைப் பாதுகாக்க அவர்கள் விரும்புகின்றனர்.

* * * *

பாரசூட் மூலம் வெடிகுண்டு

தென்மேற்குப் பஸிபிக் பகுதியில் புதிதாக ஓர் வெடிகுண்டு உபயோகிக்கப்படுகிறதாம். அவ்வெடிகுண்டுகள் பாரசூட் மூலம் இறக்கப்படுகிறதென்றும், ஜெனரல் கே. ஸி. சென்னி என்பவர் அதைக் கண்டுபிடித்தாரென்றும் நேசதேசப்படைக் காரியாலயம் சமீபத்தில் அறிவித்தது. தரையில் விழுந்ததும் அக்குண்டுகள் சுக்குத்தூளாகச் சிதறுகின்றன.

* * * *

லண்டனில் பட்டப் பகலில் குண்டு வீச்சு

சென்ற 18-ந் தேதி யன்று நாஸி விமானங்கள் பட்டப் பகலில் லண்டனில் குண்டுகளை வீசின. பிரிட்டனில் தென் கரை நகர மொன்றில்பல கடைகள் நாசமாயின. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு சாமான் வாங்க வந்த ஸ்திரீகளும், குழந்தைகளும் கட்டிடம் விழுந்ததால் புதைந்து போயினர்.

* * * *

ரோமலைப் பிடிப்பவருக்கு 10 ஆயிரம் பவுன்!

ரோமலை உயிருடன் பிடித்தாலும் சரி, உயிர் போன பின் பிடித்தாலும் சரி தங்களுக்கு 10000 பவுன் இனம் கொடுக்கப்படும் என்று ரோமலைத்துரத்திச் செல்லுவதாக நம்பப்படும் ஒரு ஆபீஸருக்கு வந்த தந்தி ஒன்று கூறுகிறது. இந்த வெகுமதி ரோமலைப் பிடிக்கும் பட்டாளத்திற்குக் கொடுக்கப்படுமாம்.

* * * *

கீழ்நாடுகள்— வில்கி கருத்து

மிஸ்டர் வெண்டல் வில்கியின் முக்கிய அறிக்கையொன்றை 'டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. யுத்தம் பற்றித் தமது முக்கிய மனோபாவமின்னதென்று அவர் விளக்குகிறார். அவர் கூறுவதாவது:- ஆரோக்யமான சமாதானத்தை நிறுவுவதற்கு பிரிட்டிஷ்—அமெரிக்க உறவுகளையே மூலாதாரமாகக் கொள்ளவேண்டுமென்று ஒரு கொள்கை இருந்து வருகிறது. 'நம்மிடம் சக்தியுள்ள பொது நாகரிக மிருக்கிறது. சமாதானத்திற்கு நாமே வழிகாட்ட வேண்டும். உலக ஆட்சித் திட்டத்தில் ரஷ்யாவும் சீனவும் இனி முக்கிய பாகத்தை வகிக்கக்கூடாது' என்று அந்த ஆங்கிலோ-அமெரிக்க முக்கியக் கொள்கை கூறுகிறது.

இந்தக் கொள்கையை நான் சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை. ரஷ்ய மக்களின் அபாரமான அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் இது (இக்கொள்கை) லட்சியம் செய்யவில்லை. யுத்தத்தை ஜயிப்பதற்கு மற்றவர்கள்போல் தாங்களும் காரணமென்று அவர்கள் நியாயமாகப் பாத்யதை கொண்டாடுவதையும் அது லக்ஷியம் செய்யவில்லை. உறுதியான நோக்கத்தைக் கொண்ட ஒரு மனிதர் தலைமை வகிக்கும் புதிய சீனவை இது ஒரு பொருட்டாக எண்ணவில்லை. மத்யக் கிழக்கில் ஜனங்களிடையே ஏற்பட்டிருக்கும் புது எழுச்சியையும் அது பொருட்படுத்தவில்லை. சீன ரஷ்யா, மத்யக் கிழக்கு சமீபக் கிழக்கு ஆகியவற்றில் ஒரு தலைவர்கூட ஆங்கிலோ—அமெரிக்க உலகத்தை ஒப்புக்கொள்ளமாட்டார். நமது புத்தியை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும் ரஷ்யா, சீன ஆகியவற்றையும் இதர நாடுகளையும் சமாதான ஏற்பாட்டில் நாம் சந்தித்து உலகத்தின் புனரமைப்பில் அவற்றிற்குச் சரிசமமான பாகம் கொடுக்க வேண்டும்.

நான் சொல்லும் முக்கிய விஷயம் இதுதான். நம்மெல்லோருடைய ஆரோக்யம், சமாதானம், பந்தோபஸ்து ஆகியவை மத்தியக் கிழக்கு தேசங்கள் சமீபக் கிழக்கு தேசங்கள் ஆகியவற்றுடன் நியாயமான, சரிசமானமான ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதையே பொறுத்திருக்கின்றன. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை இதைத்தான் செய்யவில்லை. அதை நாம் செய்தாக வேண்டும். அந்நாடுகளை நாம் திருப்தி செய்யாவிட்டால் புரட்சிகரமான மாறுதலே ஏற்படும். ஆகவே, நமது அந்தரங்க சுத்தியில் அவர்களுக்குச் சந்தேகமேற்படுமானல், குறிப்பிட்ட காலத்தில் அவற்றின் உரிமைகளை அளிப்பதாக நாம் வாக்குறுதி கொடுக்க வேண்டும்.

* * * *

ஒரு பத்திரிகை 2 ஷில்லிங்!

நியூயார்க்கில் பத்திரிகைகளின் பிரசுர கர்த்தர்களுக்கும் பத்திரிகை வினியோகக்காரர் சங்கத்திற்கும் இன்னும் ஒப்பந்தம் ஏற்படவில்லை. எனவே வினியோகக்காரர் வேலை நிறுத்தம் நீடிக்கிறது. பத்திரிகைகள் வாங்குவதற்காக அவற்றின் ஆபீஸ்கள முன் ஜனங்கள் பெருங் கூட்டமாகக் கூடுகின்றனர். கள்ளத்தனமாக பத்திரிகைகளை விற்பவர்கள் சில சமயங்களில் ஒரு பிரதிக்கு 2 ஷில்லிங்கூட வாங்குகின்றனர். பஸ்களிலும், ரயில்களிலும் கிழிந்து போன பழைய பத்திரிகைகள் மிக அபூர்வமான கையெழுத்துப் பிரதிகளை போல் வெகு பத்திரமாகக் கை மாறுகின்றன.

* * * *

'இந்தியா யுத்தகளமாகலாம்'

சர்வதேச விவகார ஸ்தாபனத்தின் பிரதிநிதியான லார்டு ஹெயிலி இந்தியா ஒரு யுத்தகளமாகக் கூடும் என்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

"ஆஸ்திரேலிய திக்கில் ஜப்பானின் பாய்ச்சல் பலிக்கவில்லையாயின் அந்நாடு இந்தியாவில் ஊன்றிக் கொள்ள முற்படலாம்" என்றும் அவர் கூறினர்.

* * * *



கவர்னர் பெண்ணுக்குக் கல்யாணம்

சென்னைக் கவர்னர் ஸர் ஹோப்பின் பெண் மிஸ் ஜீன் ஹோப்புக்கும் 52-வது படையைச் சேர்ந்த மிஸ்டர் அந்தோனி பாலுக்கும் 21-ந் தேதி சென்னையில் விவாஹம நடந்தது. —பி. பி. பி.

(18-ம் பக்கம் பார்க்க)

லூயி பிஷர் யார்?

அவர் இந்தியாவில் செய்தது என்ன?

★

உலக சுதந்திரத்துக்காகப் போராடுபவர்களில் லூயி பிஷர் என்ற பிரபல அமெரிக்க பத்திரிகைக்காரரும் ஒருவர். இந்தியாவின் நிலைமையை நேரில் வந்து பார்த்தவர். வெறுப்பு விருப்பின்றி அவர் இந்தியா பற்றி தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதினுர். ஆனுல் அவர் இந்தியா வந்தபொழுது யார் யாரைப் பார்த்தார், என்னென்ன கண்டார் என்பது பற்றி கோர்வையான விவரம் முன்பு கிடைக்கவில்லை. பிஷரின் அத்தியந்த நண்பரான மிஸ்டர் டி. ஜி. டெண்டுல்கார் இக் கட்டுரையில் அது பற்றிய ரஸமான பல தகவல்களைக் கொடுத்திருக்கிறுர்.

யாருக்குமே தெரியாமல் ஒரு நாள் லூயிபிஷர் இந்தியா வந்து சேர்ந்தார். கராச்சியில் காலடி வைக்கும் வரையில் அவரது நண்பர்களுக்குக்கூட அவரது வருகை பற்றித் தகவலில்லை. பிஷர் இந்தியாவிலுள்ள பெரிய பெரிய புள்ளிகளை யெல்லாம் பேட்டி கண்டார். ஆனுல் எந்தப் பத்திரிகையாவது அதுபற்றி போடவேண்டுமே, கிடையாது. விளம்பரத்தை வெறுத்தார் பிஷர். யாருமே தம்மைக் கவனியாமலிருக்க வேண்டுமென்பது அவரது விருப்பம்.

கிரிப்ஸ் பயணம்

கிரிப்ஸ் துரை இந்தியா வந்தார்; திரும்பி விட்டார். அப்போது லூயி ஜான்ஸன் இந்தியாவிலிருந்தார். ஜனுதிபதி ரூஸ்வெல்டுக்கு ரிப்போர்ட்டுக் கொடுப்பதற்காக அவரும் புறப்பட்டார். கெய்ரோவில் பிஷரும் ஜான்ஸனும் சந்தித்தார்கள். கை குலுக்கினுர்கள்.

இந்தியாவுக்கு ஜப்பானியரின் படையெடுப்பு அபாயம் உடனே ஏற்படும்படி அப்போது நிலைமையில்லை. எனவே அவசரமாக புறப்பட்டுவிட்டார் க்ரிப்ஸ் துரை. ஆனுல் அமெரிக்கர்கள் அவ்விதம் எண்ணவில்லை. இந்தியா அவர்களது கவனத்திலிருந்து கலையவில்லை. "நேஷன்" என்ற அமெரிக்கப் பத்திரிகை போகாத இடமில்லை; படிக்காத பேர்களும் கிடையாது. இந்தியாவைப்பற்றி விவரங்களைச் சேகரித்து அனுப்பும்படி லூயி பிஷரை அப்பத்திரிகை அதிகாரிகள் இந்தியாவுக்கனுப்பினுர்கள்.

இந்தியாவுக்குப்போகவேண்டுமென்று பிஷருக்கு ரொம்ப அவசரம்—பரபரப்பு. வழக்கமாகப் பெற வேண்டிய அனுமதிச் சீட்டுக்காகக்கூட அவர் காத்திருக்கவில்லை. உத்தியோக பூர்வமாகவுள்ள அத்தாட்சிப் பத்திரங்கூட இல்லாமல் அவர் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். பல இடங்களில் சுற்றுப் பிரயாணமும் செய்தார். வழக்கமாகக் கையாளும் சம்பிரதாயங்களைக் கடைப் பிடிப்பதற்கான அவகாசமும் அவருக்கில்லை.

அவரது எழுத்துக்கள்

லூயி பிஷர் அமெரிக்காவில் உன்னதமான பத்திரிகைக்காரர் என்றுலும் அவரைப் பற்றி இந்தியாவில் பிரசித்தமாக யாருக்கும் தெரியாது. அவர் அதிகமாக எதையும் எழுத மாட்டார். வள வளவென்று எழுதுவதிலும் அவருக்கு நம்பிக்கையில்லை. தெரியாத விஷயங்களைப்பற்றி எழுத மாட்டார். எழுதுவதானுல் தாம் எதை மிகவும் முக்கியமான விஷயமென்று கருதுகிருரோ அதைக் குறித்தே எழுதுவார், அதில் தான் இருக்கிறது அவருடைய பலம்.

பத்திரிகை படிக்கும் அனைவருக்கும் முக்கியமாக இந்தியாவிலுள்ள எல்லாருக்கும் லூயி பிஷரைப்பற்றி இப்போது தெரியும், இந்தியாவைப் பற்றி சுயமாகவும், மனதில் ஊடுருவும்படியாயும் அவர் எழுதிய கட்டுரைகளைப் போடாத பத்திரிகையே ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளைத் தவிர இந்தியாவில் கிடையாது.

பிஷர் யார்? எப்படிப்பட்டவர்?

லூயி பிஷர் யார்? அதுபற்றிக் கவனிக்கலாம். பிலடல்பியாவில் எளிய குடியொன்றில் பிறந்தார். அவருடைய தந்தை தொழிற்சாலையொன்றில் தொழிலாளி. பரம ஏழை வீட்டு வாடகை கொடுக்கப் பணமிராது. எனவே பிஷரின் பெற்றேர்கள் அடிக்கடி குடி பெயர்க்கும்படி நேரும். ஒரு தடவையல்ல; பல தடவைகளில் இம்மாதிரி ஏற்பட்டிருக்கிறது. பிஷருக்கு 16 வயது ஆகும் வரையில் மின்சார விளக்குகள் உள்ள வீட்டிலேயே அவர் வசித்தது கிடையாது. அடிக்கடி அவர் பட்டினி கிடந்திருக்கிருர். வறுமை அவருக்கு நெருங்கிய தோழனுகி விட்டது. இதன் காரணமாக 'ஜாதியில் உயர்ந்தவன்' என்ற அகம்பாவ உணர்ச்சியிலிருந்து அவர் விடுபட்டார்; ஒடுக்கப்பட்ட ஜனங்களுக்கு அவர் உற்ற நண்பனுகி விட்டார். அவருக்கு வேண்டுமென்ற விஷயங்கள் வெகு சொற்பம். எப்போதாவது அபூர்வமாகத் தான் மதுபானம் செய்வார். சிகரெட் பிடிக்கும் வழக்கமே கிடையாது.

பிஷரின் அரசியல் நோக்கம்

பிஷர் சர்வ தேசப் புகழ் படைத்தவர். வாழ் நாட்களின் பெரும் பகுதியையும் அவர் அயல் நாடுகளிலேயே கழித்தார். 1918-ம் வருஷம் பிரிட்டிஷாரிடம் சேவை செய்தார்.

"நான் என்னுடைய 25-வது வயதில் ஐரோப்பாவின் நிலைமையைப் பார்க்க அமெரிக்கா விலிருந்து புறப்பட்டேன். சரித்திரத்தைப் படித்துப் பரிசிலனை செய்தேன். வார்ஸேல்ஸ் சமாதான ஒப்பந்தத்தைப்பற்றி ஒவ்வொரு வார்த்தையும் எகிப்தில் அமைதியான இடத்திலிருந்து படித்தேன். ரஷ்யா விஷயமாக எப்பொழுதும் எனக்கு சிரத்தை உண்டு. டால்ஸ்டாய் போன்றவர்கள் எழுதிய பிரபல நாவல்களைப் படித்திருக்கிறேன். ரஷ்யாவில் சிறந்த லட்சியங்களும் உன்னதமான கலையும் இருப்பதாகத் தோன்றிற்று. 1922-ம் வருஷம் செப்டம்பர் மாதம் நான் முதன் முதலாக ரஷ்யாவுக்குப் போனேன். அப்போதுதான் நான் பட்டினியால் வாடும் ஒரு நாட்டுக்குப் போகிறேனென்பது தெரிந்தது. எந்த தேசமும் எனக்குச் சிறந்த லட்சிய நாடாகத் தோன்றவில்லை" என்று பிஷர் தமது சுய சரிதையில் எழுதியிருக்கிருர். அவரது எழுத்துக்களையும், பேச்சுக்களையும் மதிப்பிடுவதற்கு மேற்படி குறிப்புகளைக் கவனிப்பது அவசியம்.

கட்டுப்பாடும் பிஷரும்

பிஷர் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல; அமெரிக்காவில் பிரபலமாகப் பிரசங்கம் செய்பவர்களில் ஒருவர். பிரசங்கத்தின் மூலமே அவருக்கு முக்கியமாக வருமானம் கிடைக்கிறது. இரண்டு சமயங்களைத் தவிர வேறெப்பொழுதும் அவர் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்ததில்லை. சொத்தும் அவருக்குக் கிடையாது; டைப் அடிக்கும் மெஷின் ஒன்றுதான் அவருடைய சொத்து. அரசியல் கட்சியிலோ, சங்கங்களிலோ அவர் அங்கத்தினராயில்லை. "ஒழுக்க முறையை நானே கடைப்பிடித்து நடப்பேனேயல்லாமல் பிறர் அதை என் மீது சுமத்தினுல் அதை எதிர்ப்பேன். இது புத்தியைப் பொறுத்துள்ள ஒழுக்கம். கோட்பாடுகளைவிட வாழ்க்கை மிகவும் மேம்பட்டதாகும். மனித வர்க்கத்துக்கு சிறந்த, தூய வாழ்விருக்க வேண்டுமென்ற முறையில் நான் சிந்திக்கிறேன்." என்று அவர் கூறியுள்ளார்.

மாஸ்கோவிலிருக்கையில் எனக்கும் பிஷருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர் இருந்த இடத்துக்கு நான் அடிக்கடி போவேன். ஏனெனில் அங்கு எனக்கு புத்தகங்களும் பத்திரிகைகளும் கிடைக்கும். புத்திசாலிகளுடன் கலந்து பழகும் சந்தர்ப்பமும் கிட்டும். ரஷ்யாவின் பிரபலஎழுத்தாளர்கள், கலைஞர்கள், யாத்ரீகர்கள் முதலியவர்களை பிஷர் இருந்த இடத்தில் நான் சந்தித்தேன். பிஷரின் மனைவி குழந்தைகள் முதலிய அனைவரும் எப்பொழுதும் இந்தியாவைப் பற்றித் தகவல்களை கேட்க ஆவலாகவிருப்பார்கள், இந்தியாவுக்கு வருவதாக அவர்கள் என்னிடம் சொன்னுர்கள். சொன்னபடியே பிஷர் இந்தியா வந்தார். பம்பாயில் எங்கள் இருவருக்கும் இன்னும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

"யார் யார் சொற்களைக் கொட்டாமல் அளந்து பேசுகிருர்களோ அவர்கள் சிறந்த புருஷர்கள்" என்று ஷேக்ஸ்பியர்

(17-ம் பக்கம் பார்க்க)

நாட்டுப் பாட்டுகள்

★

ரஸம் பொருந்திய தமிழ் பாட்டுக்கள் பல. 'நாட்டுப் பாட்டுகள்' என்பது இவற்றில் ஓர் பிரிவு. உயர்ந்த விஷயங்கள்; எளிய சொற்கள் இவற்றைக் கொண்டதாயிருக்கும். கேட்கக் கேட்கத் தெவிட்டாது; பாடப் பாடச் சலிக்காது. கிராம வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டக் கூடியவை சில; சிருங்கார ரஸம் பொருந்தியவை இன்னும் சில. இவை தவிர மற்றும் அநேக விஷயங்களைக் குறித்தும் 'நாட்டுப் பாட்டுகள்' இருக்கின்றன. கிராம நாடகங்களிலும், கல்யாண காலங்களிலும் ஆகியவற்றில் பாடுவார்கள்.

ஸினிமாவும், நவீன நாடகங்களும் தலைப்படவே அப்பாட்டுகளைப் பலர் மறந்து விட்டனர். இன்றும் தென்னிந்திய கிராமங்களிலுள்ள அநேகருக்கு அப்பாட்டுகள் தெரியும். வயதான ஸ்திரீகள வீடுகளில் சாதாரணமாகப் பாடுவார்கள். நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? தெரிந்தால் எழுதுங்கள்: "மித்திரன்" வாரப்பதிப்பில் வெளியிடுகிறேம்.

சீவக சிந்தாமணி-27.

நீர் விளையாட்டு

★

— வ. வேணுகோபாலன் எழுதியது —

விசயமாதேவியார் துறந்தது முதல் சீவகனுக்கு மன அமைதி இல்லை. இன்பமான பொழுது போக்கு இல்லை. மனைவியர் எண்மருடனும் மனம் குளிரப்பேசுவதில்லை. இன்பங்கள் ஒவ்வொன்றிலும் ஆசையை அகற்றலானுன். 'அரச வாழ்க்கையில் அமைதி ஏற்படாது' என்பதை அறிந்தான். 'அரசவாழ்வில் பெறுகின்ற இன்பம் அற்பமே. துறவால் பெறக்கூடியது பேரின்பம். அதனை நாமும் பெற்று மகிழ்வோம் என்று துணிந்தான். அன்று முதல் அவன் வாழ்க்கை ஒரு துறவியின் தவவாழ்க்கையைப் போன்று மாறியது.

'அரசன் துறக்க எண்ணுகிருன்' என்பதை மந்திரியர் உணர்ந்தனர். மன்னவன் தன்மைக்கு மனம் கலங்கினர். 'இம்மாறுதலுக்குக் காரணம் தாயின் பிரிவேதான்' என்று எண்ணி அதை மாற்ற முயன்றனர். மந்திரியரைப்போலவே மன்னவன் மனைவியரும் மனம் வருந்தியிருந்தனர். மன்னவன் மனத்தை இன்பத்தால் மயக்குவோம் என்று அவன் மனைவியர் மந்திரியருடன் சூழ்ச்சி செய்தனர். மன்னவன் மனத்தை மயக்க நீர் விளையாட்டே தக்க கருவி என்று எண்ணி அதற்கு ஆவனவற்றைச் செய்தனர்.

மாடத்தையுடைய நீரணி வாவியில் நீரை நிரம்ப நிரப்பினர். வாசனைச் சாந்தை நீரில் கலந்தனர். பலநிறப் பூக்களை உதிர்த்தனர். மெல்லிய தெப்பங்களை மிதக்க விட்டனர். மன்னவனும் மனைவியரும் போர் செய்தற்கு மாலை, நீர் வீசு கருவிகள், துருத்தி முதலியவற்றை அமைத்தனர். வாசனைப் பொடிகளை நிரப்பி வைத்தனர். பின்னர் அரசனிடம் சென்று வணங்கி "ஐயனே, நீரணி வாவியைப் பார்த்தருள வேண்டும்" என்று மந்திரியர் வேண்டிக்கொண்டனர். மந்திரியர் சூழ்ச்சியை அறியாத மன்னவனுகிய சீவகன் மனைவியருடன் நீரணி வாவிக்குச் சென்று அக்காட்சிகளைக் கண்டான். நீர்விளையாடஅவாக் கொண்டு மனைவியரை அழைத்தான். தம் வலையில் மன்னவன் அகப்பட்டதை உணர்ந்து மனைவியர் மகிழ்ந்து நீர் விளையாட்டிற்கு இறங்கினர்.

காந்தருவதத்தை கட்டியங்காரனுகவும் மற்ற மனைவியர் சீவகன் படையினராகவும்நின்று படை வகுத்துப் போர் செய்தனர். நீர் விளையாட்டிற்குரிய கருவிகளை அவரவர் ஏந்திப் பொருதனர். பூமாலைகள் சூடிய தெப்பத்தில் இருதிரத்தாரும் ஏறி நீந்திப் பொருதனர். மூழ்குவதும் எழுவதும். பாய்வதும், நீர் வீசுவதுமாக வாவியில் விளையாடினர். மங்கையரது மோக வலையில் மன்னவன் மதியிழந்து மயங்கினுன். பூமாலைகளை வாள்களாக வீசினர். சதங்கை மாலைகளைப் பாரா வளையமாக எறிந்தனர். பூங்கண்ணிகளைக் கணையமாக மிதக்க விட்டனர். தொங்கும் மாலைகளைத் தண்டாகச் சிதறினர். காந்தருவதத்தையின் அங்கங்களில் சீவகன் நீரை வீசினுன். அவள் நீர் வீசு கருவியால் தாரை தாரையாக சீவகன்மீதும் அவளைச் சார்ந்த மனைவியர் மீதும் சொரிந்தாள். அதற்கு எதிர்நிற்கமாட்டாத மகளிர், நீரில் மூழ்கி மறைந்து எழுந்து நீரணி மாடத்தில் ஏறிக்கொண்டனர். சில மகளிர் எதிர்த்துப் பொருதனர். அப்போது காந்தருவதத்தை, சாந்தையும். சுண்ணத்தையும் தூவி, மாலைகளை எறிந்து அவர்களை மூழ்கச் செய்தாள். காந்தருவதத்தையோடு பொரமுடியாத மகளிர் கூந்தலை ஒரு கையிலும் ஆடையை ஒரு கையிலும் ஏந்திச் சீவகனுக்குப் பின்னே மறைந்து நாணி நின்றனர். சீவகன் காந்தருவதத்தையின் வன்மையை அடக்க எண்ணி, நீர்வீசு கருவியால், அவள் மீது நீரை மழை போல் சொரிந்தான். காந்தருவதத்தை இளைப்புற்றதைக் கண்ட மற்ற மகளிர் அவளுக்கு உதவியாக நின்று மாலை, சாந்தம், சுண்ணம் முதலியவற்றுல் சீவகனை எதிர்த்தனர்.

சீவகன் மேலும் மிகவன்மையுடன் மகளிர் எல்லார் மீதும் தாரை தாரையாக நீரைச் சொரிந்துஇளைப்புறச்செய்தான் மகளிரது முகத்திலும், மார்பிலும், கூந்தலிலும் சொரிந்து வருந்தினுன். மகளிர்களைப்புற்று உடல் சோர்ந்தனர், சீவகனுக்கு முன் நிற்கமாட்டாமலும் நகர முடியாமலும் பொருமினர். மார்பு விம்மப் பெருமூச்செறிந்து நீரில் சாய்தனர். அன்னங்களைப்போல் அல்லிப் பூக்களில் சில மகளிர் மறைந்து கொண்டனர். மயில்களைப் போல் கூந்தலை போர்த்துக் கவிழ்ந்து நின்றனர் சிலமகளிர். சில மகளிர் தாமரைப் பூக்களோடு தம், முகத்தைப் பொருந்த வைத்து நின்றனர். ஆடை இழந்தனர் சில மகளிர். சிலர், பூமாலைகளையும் பொன்னரி மாலைகளையும் இழந்தனர். மனைவியரின் தன்மையைக் கண்டு சீவகன் சிரித்து நின்றுன். மகளிர் அதற்கு நாணித் தலைகுனிந்து நின்றனர். பின்னர் விரைவாகக் கரையேறி ஆடையாபரணங்களை அணிந்து கொண்டு அனிச்சப் பூவைத் தலையிற் சூடிக்கொண்டனர். கூந்தலுக்கு அகிற்புகையை ஊட்டி உலர்த்தினர். சீவகனும் கரையை அடைந்து ஆடையாபரணங்களை அணிந்து மனைவியருடன், மகிழ்ந்து மாளிகைக்குச் சென்றுன்.

* * * *

மனைவியருடன் நீர் விளையாடியமையால் சீவகனுடைய உள்ளம் வேட்கையால் வெம்பியது. மனையரது மேனியழகிலே மன்னன் மயங்கினுன். மனைவியரோடு இடைவிடாமால் மகிழ்ந்திருக்க நினைவுகொண்டான். மன்னவன் மயக்கம்கண்டு மனைவியர் மகிழ்ந்தனர். முதுவேனில், கார் கூதிர், முன்பனி, பின்பனி இளவேனில் ஆகிய ஆறு காலங்களிலும் மனைவியருடன் அந்தப்புறத்தில் அவ்வக்காலங்களில் நுகர்வனவற்றை நுகர்ந்து மகிழ்ந்திருந்தான். சீவகனும் தேவியரும் மனம் கலந்து மகிழ்ந்து அரச இன்பத்தை அநுபவித்தனர். மனைவியர் எண்மரும் சிலநாட்களில் கருப்பம் தாங்கினர்.

* * * *

ஒரு வருடம் சென்றது. காந்தருவதத்தை முதலிய மனைவியர் எண்மருக்கு புதல்வர் எண்மர் பிறந்தனர். சீவகன் மகிழ்ந்து, புதல்வர்க்கு பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினுன். இரவலர்க்குப் பொன்மழை சொரிந்தான். கலுழவேகன் முதலிய மாமன்மாருக்கும் மற்றையோருக்கும் தனக்குப் புதல்வர் பிறந்த மகிழ்ச்சியை அறிவித்தான்.

அந்நாளில், சங்க வெண் மலையிலிருந்து சுதஞ்சனன் வந்து சேர்ந்தான், 'சீவக சரிதை' என்ற நாடகத்தை ஆடச் செய்து கண்டு மகிழ்ந்தான். சீவகனுடைய புதல்வர் எண்மரையும் பார்த்துக் களித்து விடை பெற்றுத் தன் இருப்பிடம் சென்றுன். புதல்வர்களுக்குச் சோதிடன், சாதகத்தைக் கணித்தான். சச்சந்தன், சுதஞ்சனன், கோவிந்தன், கந்துக்கடன் என்பவரது பெயர்களை முதல் நான்கு குமரர்களுக்கும் இட்டான். உலோகபாலன் இயற் பெயராகிய தரணி என்ற பெயரையும் விசயன் என்ற பெயரையும், விசயையின் தந்தை பெயராகிய தத்தன் என்ற பெயரையும், அச்சணந்தியாசிரியன் இயற் பெயராகிய பரதன் என்ற பெயரையும் மற்ற நான்கு குமரர்களுக்கும் இட்டான். குமரர் எண்மரும் வளர் பிறைபோல் வளர்ந்தனர்.

* * * *

அந்தப்புரத்தில் பூவணைமீது அரசனும் தேவியரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பூக்கள் கொய்து வரும் வேலைக்காரி, மல்லிகை மாலை என்பவள் அச்சமயம் அங்கு வந்தாள். சீவகனைக்கண்டு வணங்கி, "ஐயனே நம், பூஞ்சோலை முழுவதும் மலர்கள் மலர்ந்தன. மனத்திற்கு இன்பத்தை அளிக்கும் மலர்கள். மணமும் அழகும் மலிந்த பூக்கள். பார்த்ததற்கு இன்பம் அளிப்பன; தொடுதற்கு இன்பம் கொடுப்பன. உயிர்த்தற்கு இன்பம் தருவன, மன்மதன், மலர்களாகிய கையுறை ஏந்தி வந்தாற்போல் விளங்குகிறது. அவற்றைத் தாம் பார்த்தருள வேண்டும்" என்று கூறினுள்.

உடனே சீவகன் சோலையைப் பார்ப்பதற்கு ஆவல் கொண்டு மனைவியருடன் அவ்விடத்தை விட்டு நீங்கினுன். ஆடையாபரணங்களை அணிந்து மன்னவனும் தேவியரும் சோலைக்குள் புகுந்தனர். செடி, கொடி, மரம் முதலியவற்றில் பூத்த பூக்களைக் கண் குளிரக் கண்டு உவகையுற்றனர். பூக்களைக் கோதிக் குடைகின்ற குயில்களையும், பூக்கள் தோறும் தேனை உண்டு பறக்கின்ற வண்டுகளையும, உதிர்ந்த பூக்கள் மீது உறங்கும் மயில்களையும் கண்டு மனம் களித்தனர். மரங்களின் இயல்புகளைக் காட்டிக் கூறி மனைவியரை மகிழ்வித்தான் சீவகன். சில மரங்களைக் காட்டி, "நங்கையீர், இம்மரங்கள், முதலாம் தீர்த்தங்கராகிய ரிஷப தீர்த்தங்கர் காலத்தில் தாமே தோன்றி தாமே வளர்ந்தவை. இவை போன்ற மரங்களையும் மற்ற இடங்களையும் சென்று பாருங்கள்" என்று கூறினுன். தேவியர் எண்மரும் சோலையிடமெங்கும் சுற்றித் திரிந்தனர். கமுக மரங்களிற் கட்டிய ஊஞ்சலில்



திரிபோலி மீது குண்டு வீச்சு



திரிபோலி மீது அமெரிக்க விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளை வீசின.

இருந்து ஆடி மகிழ்ந்தனர். பூக்களைக் கொய்து விளையாடினர். மலையோடு எதிர் கூவி நகைத்தனர்.

பின்னர் சீவகனை, அவ்விடத்துத் தழுவி மகிழ எண்ணி இனிய பாடல்களைப் பாடி, வீணையை வாசித்தனர். தேவியர் பாடிய கானத்திலும் வீணை ஒலியிலும் மனமயங்கி அவர்களிருக்குமிடத்தைச் சீவகன் அடைந்தான். தேவியர் சீவகனைத்தழுவி மகிழ்ந்தனர். சீவகன் அவருடன் பலா மரத்தின் நிழலில் அமர்ந்து இளைப்பாறியிருந்தான். அப்போது பக்கத்திலுள்ள பலா மரத்தின் கீழ் ஆண் குரங்கு ஒன்றும் பெண் குரங்கு ஒன்றும் உட்கார்ந்திருந்தன. அவற்றுள் ஆண் குரங்கு; வேறொரு பலா மரத்திலுள்ள பெண் குரங்கொன்றைக் கண்டு காதல் கொண்டு அங்கு சென்றது.

அந்தப்பெண் குரங்கை அழைத்து மறைவிடம் சென்று அதனுடன் மகிழ்ந்தது ஆண் குரங்கு. பின்னர் அந்தப் பெண் குரங்கை அனுப்பிவிட்டுத் தனக்குரிய பெண் குரங்கு இருக்குமிடம் வந்தது. ஆண் குரங்கின் செய்கையைக் கண்டமையால் பெண் குரங்கு கோபம் கொண்டது. ஆண் குரங்கைப் பார்த்து விலகி நின்று சில வார்த்தைகள் கூறியது.

“பரத்தையரைச் சேர்ந்த மார்பு குற்றமுடையது. பத்தினி மகளிர், அம் மார்பைத் தீண்டார். நீர், வாவி சென்று நீரில் மூழ்கி வாரும்” என்றது. அம் மொழியைக் கேட்ட ஆண் குரங்கு தன் செய்கைக்கு மனம் வருந்தி “அன்பே, நீ சொல்லியதை யான் மனத்தாலும் நினைத்ததில்லை. அல்லாமல், உயர்ந்த மலைத் தேனை உண்பவர்கள் காஞ்சிரத்தையும் வேம்பையும் உண்பார்களா? நீயே சொல்வாயாக” என்று கூறியது. அதற்கு மறுமொழி கூறாமல் பெண் குரங்கு ஆண் குரங்கைக் கோபத்துடன் நோக்கியது. கோபத்தால் பெண்ணின் கண்கள் இருட்டில் விளக்கேற்றினாற்போன்று தோன்றியது. பெண் குரங்கின் கோபத்தைக் கண்டு ஆண் குரங்கு அஞ்சியது. பின்னர் பெண் குரங்கை வணங்கி,

“இன்பமே, நீ இவ்வாறு என்னைப் பார்த்து என்ன செய்வாய். உன் பார்வையால் என் உயிர் சென்று விடும். இன்னும் சிறிது பொழுதில் அத் தன்மையைக் காண்பாயாக” என்று கூறியது.

உடனே பெண் குரங்கு மனம் இரங்கித் தான் கோபித்ததற்கு வருந்தியது. ஆண் குரங்கை வருத்தம் தீர இரு கைகளாலும் தழுவிக் கொண்டு, “அடியேன் செய்த துன்பத்தை மறக்க வேண்டும். இனி வருத்தம் நீங்குக” என்று கூறியது. உடனே ஆண் குரங்கு பெண் குரங்கைத் தழுவி மகிழ்ந்தது. தன் குற்றத்தைக் கண்டும் அதைப் பாராட்டாமல் பெண் குரங்கு மனமிரங்கி அருள் செய்ததற்கு மகிழ்ந்தது. உடனே, அருகில் இருந்த பலா மரத்திலிருந்து ஒரு பழத்தைப் பறித்துக் கீறி குற்றங்களை நீக்கி நல்ல சுளைகளை எடுத்துப் பெண் குரங்கிற்குக் கொடுத்தது. ஆண் குரங்கு ஒவ்வொரு சுளைகளாகக் கொடுக்கப் பெண் குரங்கு வாங்கித் தின்று கொண்டிருந்தது. அப்போது, அச் சோலையைக் காக்கும் சிலதன் (ஏவல் செய்பவன்) அந்த இரண்டு குரங்குகளையும் அடித்துத் துரத்தினான். பலாச் சுளைகளைப் போட்டு விட்டு இரண்டு குரங்கும் ஓடி விட்டன. சிலதன் சென்று அந்தச் சுளைகளை எடுத்து உண்டான்.

சீவகன் அந்தக் காட்சியைப் பொறுமையுடன் பார்த்திருந்தான். குரங்குகளின் தன்மையையும் சிலதன் தன்மையையும் சீவகன் கண்டு ஆலோசித்தான். மனைவியர் இன்பத்தே மயங்கியிருந்த தனக்குக் குரங்குகளும் சிலதனும் புத்தி புகட்டினாற் போன்று எண்ணினான். அஞ்ஞான இருளில் ஞான சூரியன் தோன்றினான். அவன் மனம் பலவாறு எண்ணியது. தன்னைத் தழுவிய அன்புடைய மனைவி பிறனைத் தழுவக் கண்டு வெறுத் தன்மையை, ஒத்து ஆர்வத்தையும் மேல் வருகின்ற மூப்பையும் வெறுத்தான். ‘கையிலிருந்த பலாப்பழத்தை இழந்த பெண் குரங்கு கட்டியங்காரன் போன்றது. கட்டியங்காரனைக் கொன்று அரசை எய்திய என்னைப் போன்றான் சிலதன். இன்னும் இவனைக் காட்டிலும் வன்மையுடையான் ஒருவன் வாங்கி நுகர்தற்குரிய இப்பழத்தை இவன் உண்டு அடையும் இன்பம், இன்று யான் நுகர்கின்ற போகத்தை ஒக்கும், மெலிந்தவர் செல்வத்தை வலியவர் முறையை கடந்து பெறுகின்ற கலியின் பிறவியைக் கண்டோம். ஆதலால் இச்செல்வத்தை விட்டுத் துறந்து, தவம் செய்து அழிவில்லா பேரின்பத்தைப் பெறுதலே நல்லது. நல்வினை என்கிற கற்பக மரம் பரிசிலராகிய வண்டுகளுக்கு உண்ணும்படிப் பூத்து மகளிர் என்கிற, பழங்கள் தாங்கிய கொம்புகளை ஈன்று, புதல்வர் என்கின்ற மாலைகளைக் கொண்டு விளங்குவது இத்தகைய கற்பகக் கொம்பு தீவினையாகிய காற்று அடித்தலால் நிலையின்றிச் சாய்ந்து விழுந்து கெட்டுப் போகின்றது. இவ்வாறு இது வீழ்வதன் முன் இல்லற வாழ்க்கை நம்மை விட்டு நீங்குவதாக வேட்கை என்கின்ற நாவால் காமம் என்னும் கள்ளை உண்டு, மோட்சத்தைத் தரும் செய்கை இல்லாமல் இன்பத்தில் மயங்கினேன். எனக்கு இவ்விருள் நீங்கும்படி கை விளக்காகிய துறவுள்ளத்தைக் காட்டிய இக் குரங்குகளும் சிலதனும் நல்வினையால் தேவராவர்” என்று தனக்குள் கூறிக் கொண்டான். பின்னர் அவ்விடத்தை நீங்கி, மனைவியருடன், பூக்கள் பரப்பிய கட்டிலில் அமர்ந்தான், அரச வாழ்க்கையில் வெறுப்புற்றவனாய் ஆலோசித்திருந்தான்.

அவன் மனம் மாறுபட்டிருப்பதை உணர்ந்த மனைவியர் சீவகனை பலவகையாலும் இன்புறுத்தினர். பூக்களை அவன் மேல் எறிந்து நகைத்தனர். பனிநீரைத் தெளித்தும் சந்தனத்தைப் பூசியும் மயக்கினர். புருவத்தை வளைத்துக் கண்களை மாறுபடப் பார்த்துப் புன் முறுவல் செய்தனர். அங்கங்களால் தீண்டி இன்புறுத்தினர். காமக் குறிப்புகளைக் கருவிகளாகக் கொண்டு மயக்க முயன்றனர். சீவகன் சிறிதும் அவற்றை நோக்காமல் துறத்தற்கு மனம் துணிந்தான். மனைவியரது மாய வலையில் அகப்படாமல் வைராக்கியம் கொண்டான். பின்னர், அவ்விடம் நீங்கி, மனைவியருடன் மாளிகைக்குச் சென்றான்.

அடுத்த வாரம்:—

இரத்தினப்பிரபை உபதேசம்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், “சந்திரிகை” எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

சந்தோஷமாகவும், ஆரோக்யமாகவும், மெலிவாகவும் ஏன் இருக்கக்கூடாது?

தினசரி இரவு தவறாமல் இரண்டு பைல்பீன்ஸ் மாத்திரைகளை உட்கொண்டுவந்தால், இழந்த ஜீவசக்தியை திரும்பப்பெற்று, யௌவனமாகவும், மெலிவாகவுமிருந்து வாழ்க்கையைப் பூராவும் அனுபவிக்கலாம்.

பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து, ஜீரண சக்தியை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தி செய்து, கொழுப்பு ஏற்படும்சக்திகளை வெளிப்படுத்தி, ஆரோக்யமாகவும், மெலிவாகவும் வைத்திருக்கும்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்பீன்ஸ் பாட்டில் ரூ.1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யமாகவும், திடமாகவும் வைத்திருக்கும்.

பண்டைக்காலப் போர் முறை

ஒற்றர்களும் தானாபதிகளும்

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

இரண்டு நாடுகளுக்கிடையே விரோதம் ஏற்பட்டு அவை ஒன்றுக் கொன்று சண்டை போடுவது என்று தீர்மானித்துவிட்டால், போர் புரிந்து ஏதோ வொரு நாடு வெற்றி பெறுவதோ அல்லது இரண்டு தேசங்களும் சமாதானம் செய்து கொள்வதோ தான் கடைசிக் கட்டம், ஆனால் அப்படி நடக்கும் யுத்தத்தில் வெற்றி கிட்டுவதற்குப் போர் வீரர்களின் சாமர்த்தியமோ படை வலிமையோ போதா. வெற்றியின் சூத்திரக் கயிறு ஒற்றர்கள், தானாபதிகள் ஆகியவர்கள் கையிலே தான் இருக்கிறது அவர்கள் செய்யும் வேலையின் அருமையும் பெருமையும் வெளி உலகத்திற்குச் சிறிதும் தெரியாது.

ஒற்றர்கள் இருவகைப்படுவர். ஒரு வகையினர் உள் நாட்டிலேயே சுற்றித் திரிந்து வேவு பார்த்துச் செய்திகளை அறிந்து வந்து அரசனுக்கு அறிவிப்பர். மற்றொரு வகையினர் வெளி நாடுகளிலே திரிந்து செய்திகளைக் கிரஹிப்பார்கள்.

விஜயநகர ஸாம்ராஜ்ய சக்கரவர்த்தியாகிய கிருஷ்ண தேவ ராயர் தாம் எழுதியுள்ள ‘ஆமுக்த மால்யதா’ என்னும் நூலில் ஒற்றர்களைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். “ஒற்றன் நாட்டின் தலை நகரத்திலே வசிப்பவனாக இருத்தல் வேண்டும். அவனுக்குப் பல பாஷைகள் பேசத் தெரிய வேண்டும். அவன் பல வகையான மாறு வேஷங்களைக் கொள்ளும் சக்தியுடையவனாக இருத்தல் வேண்டும். தன்னுடைய எஜமானன் நியமித்திருக்கும் இதர ஒற்றர்களைப்பற்றிய விஷயம் அவனுக்குச் சிறிதும் தெரியக் கூடாது. அத்தகைய ஒற்றனை அமர்த்திக்கொள்வதற்கு எந்த அரசனும் தயங்கலாகாது; அதற்காக ஏற்படும் செலவையும் பொருட் படுத்தக்கூடாது.” அன்றி, அரசன் தன் ஒற்றர்களை ஒவ்வொரு தினமும் கண்டு பேசி விஷயங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்றும் கூறுகிறார்.

உள்நாட்டு ஒற்றர் கடமை

ஓர் அரசனுக்கு உள் நாட்டிலேயே விரோதிகள் சிலர் இருத்தல் கூடும். அவர்கள் அவன் வேறொரு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றிருக்கும் சமயம் பார்த்து நாட்டில் அவனுக்கு எதிராகக் கலகம் செய்து ஆட்சியின் அமைதியைச் சீர்குலைக்கக்கூடும். அன்றி எதிரிகளின் தூதர்கள் இந்நாட்டுள் புகுந்து சபலபுத்தியுள்ள சிற்றரசர்களுக்கோ மஹாஸாமந்தர்களுக்கோ ஆசைவார்த்தைகள் கூறி அவர்களைத் தங்கள் வசம் செய்துகொள்ள முயற்சிக்கலாம். உள்நாட்டு ஒற்றர்கள் அங்கங்கே திரிந்து இத்தகைய செய்திகள் ஏதாயினும் உண்டானால் அவற்றை அரசனுக்கு அறிவிக்கவேண்டும்.

அவர்களுக்கு நாடு, நகரம், கோட்டை என்ற வேறுபாடு கிடையாது. எங்கும் நிறைந்த பொருளேபோல் எல்லா இடங்களிலும் சுற்றித்திரிய வேண்டும்.

உள்நாட்டிலிருப்பவர்களைக் காட்டிலும் வெளிநாடுகளுக்குச் செல்பவர்களே சிரம சாத்தியமான காரியங்களைச் செய்ய வேண்டிவரும். அவர்களுக்குப் பல சமயங்களில் உயிருக்கே அபாயம் வந்துவிடும்.

வெளிநாடுகளில், உள்ளவர்கள் நாட்டு மக்களுடன் பழகித் திரிவதைத் தவிர, சில சமயங்களில் அரண்மனைக்கும் போக வேண்டி வந்துவிடும். அம்மட்டிலோ அரசனுடைய மந்திராலோசனை சபைக்கோ அந்தப்புரத்துக்கோ கூடப்போக நேரிடும். அவற்றைச் செய்ய அவர்கள் கொஞ்சமும் பின் வாங்க மாட்டார்கள். அவர்களும் பல பாஷைகளைப் பேசுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஒரு பாஷையில் பேசும்போது அதையே தாய்மொழியாகக் கொண்டவர்களே போலத் தோற்றுவர். அதேபோல அவர்கள் பல வேஷங்களையும்தரித்து பிறர் கண்டு கொண்டு கொள்ள முடியாதபடிச் சுற்றித்திரிவர்.

இவர்களுக்கு உள்நாட்டு ஒற்றர்களைக் காட்டிலும் சம்பளம் அதிகமாகக்கிடைக்கும். தவிர சாகஸமான காரியங்களைச் செய்து முடித்த காலங்களில் அரசனிடமிருந்து. தனியாகப் பரிசுகளையும் சன்மானங்களையும் பெறுவர்.

தானாபதியின் காரியம்

தானாபதி என்ற அதிகாரியும் சற்றேறக்குறைய ஒற்றனைப்போன்றவரே. ஒற்றன் ஒரு நாட்டுள் புகுந்து செய்திகளை அறிந்து வருகிற செய்தி, பிறருக்குத் தெரியாது. ஆனால் தானாபதி விஷயம் அப்படியன்று. ஸ்தானாபதி அரசனிடம் அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொண்டு மற்றொரு தேசத்துக்குச் சென்று அந்நாட்டு மன்னனிடம் அந்த அதிகாரப் பத்திரத்தைக் காட்டித் தன் எஜமானனுக்கு வேண்டிய காரியங்களைப் பகிரங்கமாக எடுத்துக் கூறுவான்.

இப்போது உள்ள வழக்கப்படி, ஒற்றர்கள் Spy System என்பதையும் ஸ்தானாதிபதிகள் Diplomatic Service என்பதையும் சேர்ந்தவர்கள். இக்காலத்தில் Ambassader என்ற பதவி வகித்துச் செல்பவருக்கே முன்னாளில் ஸ்தானாபதி என்ற பெயர். கும்பினிக் காலங்களில் அவர்களை வக்கீல் என்றும் அழைத்து வந்தனர்.

இத்தகைய தானாபதிகள் பிற மன்னர்களுடைய அவைக் களத்தே நிரந்தமாக வசித்து வரவில்லை. தங்கள் அரசர்களுக்காகச் செய்து முடிக்க வேண்டிய முக்கியமான காரியம் இருக்கும் காலங்களிலே மட்டும் செல்வர். அதை முடித்துக் கொண்டு திரும்பிவிடுவர்.

அவர்களது வேலைகள்

தானாபதிகள், வேற்றரசாங்கத்தில் தங்கி இருக்கும் நாள்களிலே ஒற்றர்களைப்போல வேதான் வேலை செய்வார்கள். ஆனால் வெளிக்குத் தெரியாமல் கௌரவமாக நடந்து கொள்வார்கள். தாங்கள் நேரில்போக முடியாத காலங்களில் ஒற்றர்களைக்கொண்டு செய்திகளை அறிந்து வருவர், பல சமயங்களில் அந்தந்த ஸ்தலங்களில் உள்ள ஒற்றர்கள் தானாபதிகளுக்கு அடங்கியவர்களாகவே வேலை பார்க்க வேண்டி நேரிடும்.

தாங்கள் நேரில் கண்டதையும் கேட்டதையும், அவற்றின் மேல் தங்கள் சொந்த அபிப்பிராயங்களையும் எழுத்து மூலமாகத் தங்கள் எஜமானருக்கு அறிவிக்க வேண்டியதே தானாபதிகளின் முக்கியமான வேலை. அவர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களுக்கு உயர்ந்த மதிப்பு இருந்து வந்தது. பல சமயங்களில் அவர்கள் அனுப்பிய அறிக்கையே அரசன் கொண்டிருந்த எண்ணங்களை மாற்றி நிகழ்ச்சிகளை வேறு விதமாகத் திருப்பியிருக்கிறது.

தானாபதிகளுடைய வேலை அதனுடன் நின்று விடவில்லை. தங்களைப் போலவே வேறு ராஜாங்கங்களிலிருந்து அங்கே வந்திருக்கும் இதர தானாபதிகளையும் கண்டு, அவர் அவர்களுடைய எஜமானர்களுடைய நோக்கங்களையும் அறிந்துகொள்வர். தங்கள் காரியங்களுக்கு யார் யார் அனுகூலமாக இருப்பர் என்பதைச் சுலபமாகக் கண்டு பிடித்து விடுவார்கள். இந்தத் தானாபதிகள் முக்கியமான சமயங்களில் ஒன்று கூடி ஆலோசனை நடத்துவதும் உண்டு.

சண்டைக்காலத்தில்

சண்டை நடக்கும் காலங்களில் இந்தத் தானாபதிகளை விரோதி அரசாங்கத்தைச் சேர்ந்தவர் என்று பிடித்துச் சிறையிலிடுவதோ அல்லது அவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி விடுவதோ முற்காலத்தில் நடக்கவில்லை. அவர்கள் வழக்கம் போலவே, அங்கே வசித்து வருவார்கள். அவர்கள் இஷ்டப்பட்டபோது தங்கள் தேசத்துக்குத் திரும்பிச் செல்லலாம்.

உதாரணமாகக் கிருஷ்ண தேவ ராயர் உரியா தேசத்துக் கஜபதி மன்னனுடன் போர் தொடுத்தபோது விஜய நகரத்துத் தானாபதியாக இருந்த கமல நாபையா என்பவன் கடகத்திலேயே தங்கி இருந்தான். உரியா நாட்டுப் பதினாறு பாத்திரர்களும் ஒன்று சேர்ந்து விஜயநகரத்துச் சேனையை மடக்கி முறியடித்து விடுவதாகச் செய்திருந்த தீர்மானத்தை அவன் தான் கிருஷ்ண தேவராயருக்குச் சொல்லி அனுப்பினான்.

மற்றொன்றும் உண்டு. அந்தக் காலத்திலே மன்னர்கள் ராணுவச் செய்திகளை இப்போது உள்ளவற்றைப் போல ரகசியமாகக்கொண்டிருக்கவில்லை. அவற்றை வெளியிடுவதில் அவர்கள் ஒருவிதமான திருப்தியும் அடைந்து வந்தார்கள். ஆள் பலத்தையும் போர்த் திறமையையும் முக்கியமானவைகளாகக் கொண்டிருந்த அக்காலத்திலே ரகசியத்துக்கு அவசியமேஇல்லை. அவற்றைப் பகிரங்கமாக்கித் தங்கள் புகழைக் காட்டிக் கொள்வதில் அவர்கள் பெருமையும் கொண்டனர்.

கௌரவமான நடத்தை

எந்த அரசனும் தன் சபைக்கு வந்திருக்கும் தானாபதியைக் கௌரவமாகவே நடத்தி வருவான்: அவனை ஒருபோதும் அவமதிக்கவோ உதாசீனம் செய்யவோ மாட்டான். எந்த எஜமானன் சார்பாக அந்தத் தானாபதி வந்திருக்கிறானோ அவனுடன் கொள்ளும் அந்த அரசனுடைய உறவு அத்தானாபதியின் நன் மதிப்பையே பொறுத்திருந்தது.

தானாபதியை அவமதித்ததற்காகப் பல சமயங்களில் இரு ராஜ்யங்கள் போரில் இறங்கியிருக்கின்றன. புக்க தேவராயர் அரசாண்ட காலத்தில் விஜய நகரத்துக் கஜானாவின் மீது குல்பர்கா மன்னனான முகம்மது ஷா தரிசன உண்டியல் அனுப்பிய காலத்தில்புக்கராயர் அடில் ஷாவின் தானாபதியை கழுதையின் முதுகில் ஏற்றிச் சுற்றி வலம் வரச் செய்து திருப்பி அனுப்பி விட்டான் என்று ஒரு கதை வழங்கப்படுகிறது. அதன் பயனாகவே அடில் ஷா விஜய நகரத்தின் மீது தண்டு எடுத்து வந்து

முடிக்க முடியாத கட்டுரை!

★

மிஸஸ் கமலா பத்மநாபன்

மத்தியான வேளைகளில் நான் தூங்கும் வழக்கம் இல்லை. இன்று கட்டாயம் ஏதாவது ஒரு நல்ல கட்டுரை எழுதவேண்டுமென்று தீர்மானித்தேன். என் கணவர் ஆபீஸுக்குப் போய் விட்டார். என் பெண்ணும் காலை 11 மணிக்கே பள்ளிக்கூடம்போய் விட்டாள். இனி மேல் மாலை ஐந்து மணிக்குத் தான் வீடு திரும்புவாள்.

பிற்பகல் மணி சுமார் இரண்டு இருக்கும். வீட்டில் நல்ல நிசப்தம் குடி கொண்டிருந்தது. என்னைத் தவிர, இப்பொழுது வீட்டில் ஒரு பிராணியுமில்லை. கதை கட்டுரை எழுதுவதற்கு இதை விட வேறு நல்ல சமயம் கிடைக்குமா? "இனிது, இனிது, ஏகாந்த மினிது" என்று பாடிக் கொண்டே பேனாவையும் பேபரையும் எடுத்து வைத்துக் கொண்டேன். ஐந்து நிமிஷங்களில், நான் எழுதவிருந்த கட்டுரையின் போக்கை கற்பனை செய்து கொண்டேன். பிறகு, தாமதம் செய்யாமல் எழுத ஆரம்பித்தேன். சுமார் பத்து வரிகள் தான் எழுதியிருப்பேன். அதற்குள் வீதிப் புறத்திலிருந்து "மாமீ" என்று கூப்பிடும் ஒரு சிறிய பெண்ணின் குரலைக் கேட்டு, உடனே எழுந்து போய் கதவைத் திறந்தேன். எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வீடுகள் விட்டு அடுத்த வீட்டிலிருக்கும் சிறிய பெண் பட்டு, நான் கதவைத் திறந்தது தான் தாமதம், என்னையும் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். "என்னடீ பட்டு, எதற்காக வந்தாய்?" என்று நான் கேட்டேன்.

"பத்மா எங்கே மாமீ," என்றாள் பட்டு. "பத்மா ஸ்கூலுக்குப் போயிருக்கிறாள். நீ ஏன் போகவில்லை?" என்று கேட்டேன்.

"நான், ஒரு மணிக்கு, சாப்பாட்டுக்காக ஸ்கூல் விட்ட போது ஆத்துக்கு வந்தேன். அம்மா மறுபடியும் போகவேண்டாம்னு சொல்லி விட்டாள். அம்மாவும் பாட்டியும் முறுக்கு சுத்திண்டு இருக்கா. என்னைக் குழந்தையைப் பாத்துக்கச் சொன்னா" என்றாள் பட்டு.

"அப்படியானால் நீ குழந்தையைப் பார்த்துக் கொள்ளாமல் இங்கு வந்து விட்டாயே! ஓடு ஆத்திற்கு. இல்லாவிட்டால் உங்கம்மா அடிப்பாள்." என்று கூறினேன்.

"இல்லை மாமீ, நான் குழந்தையை தொட்டிலில் போட்டு வீசி வீசி ஆட்டி அப்பவே தூங்கப் பண்ணிட்டேன். நான் ஆத்திலேயிருந்தா சும்மா முறுக்கு கேக்கறேன்னு, பாட்டி தான் என்னை ஒங்காத்துக்குப் போகச் சொன்னாள்" என்று பதிலளித்தாள் பட்டு.

நான் சிரித்துக் கொண்டே, "சரி, வாயை மூடிக் கொண்டு, சேஷ்டை ஒன்றும் செய்யாமல் இப்படி உட்கார்ந்து கொண்டு அந்த பொம்மை புஸ்தகத்தைப் பார்த்துக் கொண்டிரு" என்று சொல்லி விட்டு நான் கட்டுரையை எழுதத் தொடங்கினேன். இரண்டு நிமிஷங்கள் தான் எழுதியிருப்பேன்.

"மாமீ!" என்று பட்டு கூப்பிட்டாள்.

"என்னடீ!" என்றேன் எரிச்சலுடன்.

"தூத்தம் வேணும், மாமி. இங்கே வரப்போ, முறுக்குத் தின்னுண்டே வந்தேன். ஒரு துண்டு தொண்டேலெ சிக்கிண்டுடுத்து" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள்.

நான் எழுந்து போய் ஒரு லோடாவில் தீர்த்தம் கொண்டு வந்து அப் பெண்ணினிடம் கொடுத்து "இதோ பார், குடித்து விட்டு 'கம்'முனு இருக்க வேண்டும் தெரியுமா? என்னை இனிமேல் ஏதாவது தொந்திரவு செய்தால் ஆத்திற்கு ஓட்டி விடுவேன்" என்று எச்சரித்தேன்.

மறுபடியும் எழுத உட்கார்ந்தேன். கட்டுரை எழுதும்போது நாம் இடையில், அடிக்கடி எழுந்து செல்ல நேரிட்டால், நமக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட சுறுசுறுப்பும் உத்ஸாகமும் குறைந்து விடுகிறது. இரண்டு வரிகள் எழுதிவிட்டு, பிறகு ஐந்து நிமிஷம், பேனாவினால் இடது கை விரல்களின் நகங்களின் மேல் புள்ளி வைத்துக் கொண்டோ, சித்திரம் எழுதிக் கொண்டோ, மேலே கதையை எப்படி எழுதுவது என்று தோன்றாமல் முழிக்க வேண்டியிருக்கிறது. என் நிலைமையும் இப்பொழுது இப்படித்தான் ஆயிற்று. நான் சும்மா உட்கார்ந்திருப்பதைக் கண்ட பட்டு "மாமீ, யாருக்கு காயிதம் எழுதறேன்?" என்று வினவினாள்.

"எங்க அக்காவுக்கு எழுதுகிறேன்" என்று சொல்லிவிட்டு நான் மறுபடியும் எழுதத் தொடங்கினேன்.

"ஓங்க அக்கா எந்த ஊரில் இருக்கா மாமீ?" நான் மௌனம் சாதித்து என்பாட்டில் எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பட்டு மெதுவாகத் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்து, நான் உட்கார்ந்திருந்த நாற்காலியின் பின்புறம் வந்து நின்றாள். அவளுடைய மூச்சு சூடாக என் கழுத்தில் பட்டது நான் அருவருப்படைந்து "தூர நில், பட்டு!" என்று சொன்னேன்.

பட்டு பயந்து போய் இரண்டடிகள் நகர்ந்தாள். அவ்வளவு தான். அவள் காலடியில் இருந்த மசிப் புட்டியை "புட்பால்" ஆடி விட்டாள். என் பேனாவுக்கு மசி நிறைத்துக்கொண்டுவிட்டு நான் புட்டியை மூடாமல் அஜாக்கிரதையினால் கீழே வைத்துவிட்டது எனக்கு அப்பொழுதுதான் நினைவு வந்தது.

எனக்கு வந்த ஆத்திரத்தில், என் பெண்ணாக இருந்தால் நன்றாக நான்கு அறைகள் விட்டு வெளியே தள்ளி கதவை சாத்தியிருப்பேன். ஊரார் வீட்டுப் பெண்ணாயிற்றே! அவள் நமக்கு எவ்வளவு தொந்திரவு வேண்டுமானாலும் கொடுக்கலாம்! நாம் ஏதாவது இரண்டு வைதால் கூட தப்புதான்!

"இந்தா பட்டு, போ, ஆத்திற்கு. நீ இனிமேல் இங்கு இருக்கக்கூடாது" என்று சொல்லி அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய், வெளியில் விட்டு விட்டு கதவை தாளிட்டு கொண்டேன். இதற்குள் ஸிமெண்ட் நிலத்தில், புட்டு உருட்டிவிட்ட மசி படர்ந்து கொண்டு, கன்னங் கரேலென்றுகாட்சி அளித்தது. "ஹூம்" என்று அலுப்புடன் ஒரு பழைய துணியை எடுத்து வந்து மசியை துடைத்துவிட்டு என் வேலையைத் தொடங்கினேன். நான் எழுத உட்கார்ந்து ஒரு மணி நேரத்திற்குமேல் ஆகிவிட்டது. ஆனால் இரண்டு பக்கங்கள் கூட எழுதியாகவில்லை.

சிறிது நேரத்தில், மறுபடியும் யாரோ வாசற் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அந்த பெண் பட்டு தான் வீட்டிற்குப் போகாமல், பழியாய் இங்கேயே உட்கார்ந்து, கதவை இடிக்கிறாள் என்று நான் முதலில் நினைத்தேன். ஆனால் மறு நிமிஷம், என் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவதைச் செவியுற்று எழுந்து போய்க் கதவைத் திறந்தேன். அடுத்தாத்து அய்யங்கார் அம்மாமி தன் கையில் ஒரு வெள்ளிக் கிண்ணத்துடன் தரிசனம் அளித்தாள்.

"ஒரு கிண்ணம் பால் இருந்தால் கொடேன். சாயங்காலம் பால்காரன் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். இப்பொழுது தான், மைசூரிலிருந்து எங்க மாமாபிள்ளையும் அவன் பெண்டாட்டியும் வந்திறங்கினார்கள். திடீரென்று வந்தார்கள். அவர்கள் வரப்போவதாக எங்களுக்கு முன்னாடி தெரியாது. நாங்கள் எல்லோரும் இரண்டு மணிக்கே காபி சாப்பிட்டு விட்டோம். மிஞ்சின துளிப்பாலையும் மோரில் கொட்டிவிட்டேன்" என்று புராணம்படிக்க ஆரம்பித்தாள்.

நான் பதில் பேசாமல் அவள் கையிலிருந்த கிண்ணத்தை உள்ளே எடுத்துக்கொண்டு போய் அதில் பாலை நிறைத்துக் கொணர்ந்து கொடுத்தேன். பிறகு அவள் போகமாட்டாளா என்று ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம், கதவை மறுபடியும் சாத்துவதற்காக, ஒரு கையால் வாசற் கதவைப் பிடித்த வண்ணம் நின்றேன். அம்மாமி அசையும் வழியாகக் காணோம்.

"என்ன தளிகை" பண்ணினே இன்னிக்கு?" என்று பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தாள்.

நான் எதையோ சொல்லித் தொலைத்து, ஊரிலிருந்துவந்தவர்களுக்கு சீக்கிரம் காபி போட்டுக்கொடுக்கும்படி ஞாபகப் படுத்திப்பார்த்தேன். ஆனால் அவள் அதை கவனித்ததாகவே தெரியவில்லை. தன் மாமாபிள்ளை



உலகில் சிறந்த சரும ரோக நிவாரணி

தேமல், ரணம், புண் முதலிய வற்றை ஜாம்-பெக் குணப்படுத்தும்.

சருமக் கோளாறுகள், காயங்கள் முதலியவற்றைத் திருப்திகரமாகக் குணப்படுத்த ஜாம்-பெக் உலகில் சிறந்த நிவாரணியாகும். வெட்டுக் காயம், ரணமுள்ள இடங்களில் இந்த அற்புத மெழுகைத் தடவுங்கள். வெகு சீக்கிரம் குணப்படுத்திவிடும். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகைச் சத்துக்கள் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்தைக் குறைத்து சீழ்வடிதலை நிறுத்திவிடும். ஜாம்-பெக் தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருக்க் கொழுப்பற்றது.

பெரிய வேலையில் இருப்பதாயும், அவன் மனைவி பிறந்தகத்திலிருந்து ஏராளமான சீர் கொண்டு வந்திருப்பதாயும், அவள் உடம்பு முழுவதும் வயிர நகைகள் போட்டுப் பட்டிருப்பதாயும், நீளமாய் வர்ணிக்கத்தொடங்கினாள். இப்படி சுமார் பதினைந்து நிமிஷங்கள் வரைக்கும் பேசிக்கொண்டே நின்றாள். பிறகு அவள் பெண் அவர்கள் வீட்டுத் திண்ணையின்மேல் நின்று, "அம்மா. கெட்டில் தண்ணீர் கொதித்து வழிகிறது. சீக்கிரம் வா" என்று கூவிய பிறகு தான் போய்ச் சேர்ந்தாள்.

நான் அம்மாமியை சபித்துக் கொண்டே, வீதிக் கதவை சாத்தாமல் உள்ளே வந்து, அந்தக் கதையை விட்டிருந்த இடத்தில் தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன். நான் ஊக்கமாக எழுதிக்கொண்டிருந்தபொழுது, என் அறையின் வாசற்படி அருகில் யாரோ நின்று கொண்டு கனைப்பதுபோல் தோன்றிற்று. உடனே நிமிர்ந்து பார்த்தேன். தன் உடம்பு முழுவதும் கறுப்புக் கம்பளியினால் சுற்றிப் போர்த்திக்கொண்டு, எங்கள் வீட்டு வேலைக்காரன் நின்றுகொண்டிருந்தான்.

நான் நிமிர்ந்ததும் அவன், "அம்மா, எனக்கு குளிர் ஜுரம் வந்திடுச்சுங்க. என்னால் இன்று வேலை செய்ய முடியாதுங்க!" என்று நடுங்கிக் கொண்டே கூறினான். அவனைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது.

"உன்னை யார், ஜுரத்துடன், இதைச்சொல்ல இங்கு வரச் சொன்னது?. வீட்டிற்குப் போய் படுத்துக் கொள்ளுடா!" என்று நான் அவனுக்கு பதிலளித்து. அவனிடம் இரண்டு 'கொய்னா' மாத்திரைகளை எடுத்துக் கொடுத்து சாப்பிடச்சொல்லி விட்டு அவனை அனுப்பினேன்.

மணி நாலேகால்ஆகிவிட்டது. ஐந்து மணி வரைக்குமாவது என்னை யாரும் தொந்திரவு செய்யாமல் இருந்தால், நான் எழுதிக் கொண்டிருந்த கட்டுரையை முடித்து விடலாமென்ற நம்பிக்கையுடன் என் அறைக்குச் சென்றேன். உடனேயே அம்மா என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டு யார் அது? என்று வெறுப்புடன், பற்களைக் கடித்துக்கொண்டு கேட்டேன்.

"டாக்டர் வீட்டு அம்மா ஐந்து ரூபாய் நோட்டிற்கு சில்லரை வாங்கிவரச் சொன்னாங்க" என்றான் வந்த ஆள்.

"இங்கே சில்லரையுமில்லை, கல்லரையுமில்லை! கஜானா பாழா போகிறதென்று நினைத்துக் கொண்டாளோ உங்க அம்மா! ஒருவர் மாற்றி ஒருவர் வந்து இப்படி கழுத்தை அறுக்கிறீர்களா? இனி மேல் யாராவது இந்த வாசல் ஏறுங்கள் சொல்கிறேன். என்று ஆவேசத்துடன் கத்தினேன்.

என்றுமில்லாதபடி நான் இப்படி எறிந்து விழுவதைக்கண்ட அந்த ஆள் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

"அப்பப்பா, வீட்டில் நமக்கு பிச்சுப் பிடுங்கல் ஒன்றும் இல்லாவிட்டாலுங் கூட ஊரார் செய்யும் உபத்திரவம் தாங்க முடியவில்லையே! என்னுடைய சொந்த வீட்டில் ஏகாந்தமாய் உட்கார்ந்து நிம்மதியாக ஒரு சிறு கட்டுரையை எழுதி முடிக்க எனக்கு சுதந்திரம் கிடையாதா? அட கஷ்டமே; இனிமேல் யார் வேண்டுமானாலும் வந்து கூப்பிடட்டும். நான் பதிலே சொல்லப் போகிறதில்லை. கதவை சாத்தித் தாழ்ப்பாளிட்டு விடுகிறேன். வந்தவர்கள் இடித்து இடித்து அலுத்துப் போய் திரும்பிப் போகட்டும்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு வாசற்கதவைஇழுத்து சாத்தப்போன பொழுது ஆபீஸ் ஆள் ஸலீம் விர்ரென்று ஸைக்கிலில் வந்து இறங்கி தன் கையிலிருந்த ஒரு துண்டுக் கடிதத்தை என்னிடம் நீட்டினான். அது என் கணவர் ஆபீஸிலிருந்து எழுதி அனுப்பிய "சிட்" வழக்கப்படி அவர் வீட்டில் மறந்து போய் வைத்து விட்டுப்போன ஆபீஸ் காயிதங்கள் எதையாவது அனுப்பும்படி சொல்லியிருப்பார் என்று எண்ணிக் கொண்டே அதைப் பிரித்துப் படித்தேன்.

"மைசூரிலிருந்து சில நண்பர்கள் அணை பார்ப்பதற்காக இங்கு வருவதாக போன் செய்திருக்கிறார்கள். (நிற்க, பேர் போன கன்னம்பாடி அணையும் ப்ருந்தாவனமும் இருக்கும் ஊரில் தான் தாங்கள் வசிப்பது என்று வாசகர்களுக்கு 'நான் ஏற்கனவே சொல்ல மறந்து விட்டேன்) மாலை. ஆறு மணி ரயிலில் வருகிறார்களாம். முடிந்தால் ஏதாவது "லைட்" டிபனும் காபியும் செய்து வை, அதிகத் தொந்திரவு வைத்துக் கொள்ளாதே" என்று எழுதப்பட்டிருந்தது.

எனக்கு அழமாட்டா துக்கம் வந்தது. அந்தத் துண்டுக் கடிதத்தை கசக்கி எறிந்து விட்டு ஆபீஸ் ஆளை ஒரு முழி முழித்து ஏன் இன்னும் நிற்கிறாய்? போய்த் தொலையேன்" என்று சொல்லி படீரென்று கதவை சாத்தி விட்டு உள்ளே சென்றேன். எனக்கு அப்பொழுது ஏற்பட்ட ஆத்திரம், வருத்தம், வெறுப்பு எல்லாவற்றையும் விவரிப்பதென்றால் சாத்தியமே இல்லை. நேராய் என் அறைக்கு சென்று நான் பாதி எழுதியிருந்த கட்டுரையை எடுத்து சுக்கல் சுக்கலாய் கிழித்து குப்பைக் கூடையில் போட்டேன்" நான் கட்டுரை எழுதி நாசமாய்ப் போனேன் இன்று எந்த வேளையில் எழுத ஆரம்பித்தேனோ தெரியவில்லை! என்று முணுமுணுத்த வண்ணம் அடுப்பை மூட்டி டிபனும் காபியும் தயார் செய்யச் சென்றேன்.

சோப் ஸப்ளைகள்

பிரக்யாதி பெற்ற சோப்புகள் விற்பனைக்கு குறைவாயிருக்கிறது என்று உங்களுடைய வியாபாரிகள் சொல்லலாம். இது எப்பொழுதும் உண்மையல்ல. ஆனால் சில சமயங்களில் உள்ளூரில் சரக்குகள் குறைவாயிருக்கலாம்.

பம்பாயிலும் கல்கத்தாவிலும் உள்ள ஆலைகளிலிருந்து சரக்குகள் ரயில் மார்க்கமாய்த்தான் வரவேண்டும். ரயில்வே அதிகாரிகள் ஒவ்வொரு வண்டியையும் இந்தியாவின் பாதுகாப்பிற்காக தகுந்தபடி உபயோகிக்கிறார்கள். ஆகையால் சில சமயங்களில் உங்களுக்கு சோப் கொண்டு வரவும், அல்லது இந்தியாவிலுள்ள வெகு தூரங்களுக்கப்பாலுள்ள இடங்களிலிருந்து ஆலைகளுக்கு வேண்டிய சாமான்கள் கொண்டுவரவும் போதிய அளவு வண்டிகள் அகப்படாமல் இருக்கலாம்.

இந்தியாவின் யுத்த பாதுகாப்பின் பொருட்டு ரயில் வண்டிகள் எப்பொழுதும் தேவை. இந்த உண்மையை நாம் எல்லோரும் அறிவோம். முதலில் எதற்கு கொடுக்கவேண்டுமோ அதற்கு கொடுத்துவிட்டும் கூட பொது ஜனங்களின் சௌகரியத்திற்கும், சோப் அனுப்புவதற்கும்கூட ரயில் வண்டிகளை கொடுக்கிறார்கள். ஆகவே ரயில்வே அதிகாரிகளுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

நீங்கள் உங்களுக்குப் பிரியமுள்ள சோப் இல்லாமலோ அல்லது; அதிக விலை கொடுத்து வாங்கவோ செய்யாதபடி உங்களுக்கு சோப் அனுப்பவேண்டிய முயற்சிகளை செய்து வருகிறோம். நியாயமான விலைக்கு தேசத்திலுள்ள எல்லா வியாபாரிகளுக்கும் தவறாமல் சரக்கு அனுப்ப ஏதுவாகும் ஒவ்வொரு வழியையும் கைக்கொள்ள உறுதி கூறுகிறோம்.

பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக
லீவர் பிரதர்ஸ்
(இந்தியா) லிமிடட்
பிரசுரித்தது.

சன்லைட் சோப் — லைப்பாய் சோப் — லக்ஸ் டாய்லெட் சோப் — லைப்பாய் டாய்லெட் சோப் — லக்ஸ் — விம் — மங்கி பிராண்டு.

L. Com. 12-169 TM

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீககாய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T. மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

'அழகுத் தெய்வம்' தோன்றிய இரவு

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

★

காலஞ்சென்ற கவிச்சக்ரவர்த்தி சுப்பிரமண்ய பாரதியாரைப் பற்றி பிரஸ்தாபிக்காமல் எந்தக் கட்டுரையாளரும் இருப்பதில்லை. அவர் இசைத்த பாட்டுக்களைத் தங்களது கட்டுரைக் கட்டங்களில் புகுத்துவதுடன் பாரதியார் ஏன்ன நினைத்து அப்பாட்டுக்களை இயற்றியிருப்பார் என்று தங்களுடைய கற்பனைக்குத் தக்கவாறு கயிறும் திரிக்கின்றனர்.

பாரதியாருடன் அன்னியோன்யமாக நெருங்கிப் பழகியதாயும் "நானும் பாரதியும் தெருவில் ஒரு சமயம் போய்க் கொண்டிருந்தோம். அப்போது என்னைப்பார்த்து இந்தப்பாட்டை எழுதிக்கொள்" என்று சொன்னார் என்றும், எந்தெந்த சமயங்கள் என்னென்ன பாட்டுக்களைப் பாடினர் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் பாரதியாரை நேரிடக் கண்டு, அவர் இயற்றிய பாட்டுக்களை அவரே பாடக்கேட்கும் பாக்கியம் பலருக்குக் கிட்டாமலிருந்திருக்கலாம்.

கவியரசரின் பெண் ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி தம் தந்தை நேரிடப் பாடக் கேட்டவர். "அழகுத் தெய்வம்" என்ற பாட்டை எப்பொழுது பாடினர் என்பது குறித்து இக்கட்டுரையில் தெரிவித்திருக்கிறார். அத்துடன் புதுவை நிகழ்ச்சியொன்றையும் இதில் காணலாம்.

★

ஆஹா! மனதில்தான் சிறிது நேரத்துக்குள் என்னென்ன போராட்டங்களெல்லாம் நடைபெறுகின்றன! சித்திர வதை;-உடனே உல்லாசம்! ஒவ்வொரு உணர்ச்சியையும் மற்றவருக் குணர்த்துவது என்பது ஸாத்யமா? முடியவே முடியாது. அப்படியே அவர்கள் உணர்ந்தாலும் நம்மை அவர்களால் சமாதானப்படுத்த முடியுமா? சின்ன விஷயமானாலும், தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவரால் முடியாது. மனம் திரும்பத் திரும்ப நம் பலஹீனத்தைச் சொல்லி அழும்போது என்ன செய்வது? ஒரு சமயம் மனதை நினைத்து. இரக்கம்—மறு சமயம் கோபம்;—கோபம் மிஞ்சிய பின் தான் திட வைராக்யம் ஏற்படுகிறது.

பராசக்தி பிரஸன்னம்

என்ன நடக்கும்? எப்படி நடக்கும்? பாரத நாட்டிற்கு விமோசனம்என்று ஏற்படும்? என்று நம்மக்கள் பேடித் தன்மை போய் ஆண்மையுற்றவராவார்கள்? பழைய பொய் அழிந்து புது வீரம் பிறக்க வேண்டும்! இதற்கு என்ன வழி செய்வது? நான் கட்டுண்டு கிடக்கின்றேனே! மஹா சக்தி! மனதை அறுக்கும் இந்த விஷயத்திற்கு ஒரு விடிவு காணேனே! இந்த ஏக்கத்தினூடே சிறு நித்திரை. உடனே கண் விழித்தேன். மனம் தெளிந்தது. கனவில் பராசக்தி கனிவுடன் தோன்றினாள். நீல வானில் மங்கிய நிலவு காய்ந்தது. "அடே பாரதி! தூங்காதே! எழுந்தென்னைப் பார்!" என்றாள். திடுக்கிட்டு நன்றாக உற்றுப் பார்த்தேன். என்ன விந்தை!! அந்தப் பதினறு வயது மங்கையை எங்ஙனம் வருணிப்பது? இல்லை. என்னால் முடியாது "அழகுத் தெய்வம்" இவள் தான். உடனே என் மனம் அவளழகில் மயங்கி மோகமுற்றதா? இல்லை. பராசக்தி நம் சந்தேஹங்களை நீக்க வந்தாள். உடனே கேள்விக்கு ஆரம்பித்தேன். தாயிடம் எதிரும் புதிருமாக நீ, நான் என்று கேட்பதை விட பொதுவாகக் கேட்கலாமென்று தோன்றிற்று. அதற்காக "தாயே பயிர்களின் தாகத்தை அறிந்து தான் மழை பொழிகிறதா? அல்லது ஈகைக்குணத்தின் பேரிலா? இல்லையெனில் பெய்ய வேண்டும் என்ற நியதிக்காக பெய்கிறதா? அதற்கு அவள் புன்னகையினால் சரியான பதில் கிடைக்கவில்லை. "காலவிதி மதியைக் கடந்திடுமோ?" மகனே காலம் தான் மதிக்குக் கருவி. "காலத்தை மதியின் திறமையினால் உனக்கேற்ற கருவியாக்கிக் கொள்ளலாம்" கடைசியாக நான் மிதமிஞ்சிய ஆத்திரத்துடன்

(நான்) "ஞாலத்தில் விரும்பியது நண்ணிடுமோ"

(அவள்) "நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்"

சிலசமயம் நமக்கு அன்பர்களையும், பிரியமுள்ளவர்களையும் கண்டால் வாயிலிருந்து வார்த்தை வருவதில்லை. மனதிலேயே சம்பாஷித்து விடுகிறோம். அதைப்போல் பராசக்தியிடம் எத்தனையோ கேள்வி கேட்க வேண்டுமென்றிருந்த எனக்கு ஒன்றும் நினைவு வரவில்லை.

கடைசியில் "அன்னையே என் இதயம் உனக்கு விளங்கவில்லையா? நான் சொல்லித் தான் உனக்குத் தெரிய வேண்டுமா"? என்றேன். 'முழு மனதோடு நினை. உன் எண்ணம் கைகூடும்' என்றாள்.

அருள் தெய்வம் அழகுத் தெய்வத்தின் முகமலர்ச்சியைக் கண்டு அருள் பெற்று என் மனச்சோர்வு அகன்றது. அந்தக் கனவிலிருந்து விழித்து சிறிது நேரமாகியும் என் கேள்வியும் பதிலும் மனதை விட்டகலவில்லை. "இதோ பாட்டு" என்று நடு இரவில் என்னை எழுப்பி மேற்கூறிய விஷயங்களையும் சொல்லி பாட்டையும் பாடிக்காட்டினர் என் அருமைத் தந்தை பாரதியார்.

"மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்
வயது பதினறிருக்கும்
இளவயது மங்கை
பொங்கிவரும் பெரு நிலவு
போன்ற ஒளி முகமும்
புன்னகையின் புது நிலவும்
போற்ற வருந் தோற்றம்
துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதேஎழுந்தென்னைப்
பார் என்று சொன்னாள்
அங்கதனில் கண் விழித்
தேன்.
அடடா, ஓ அடடா
அழகென்னும் தெய்வந்
தான்
அதுவென்றே அறிந்தேன்.

என்று ஆரம்பிக்கும் "அழகுத் தெய்வம்" என்னும் கவிதை ஏற்பட உண்மை இதுதான். பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லப் புகுந்தால் மிகப் பெரியதாக வளரும். ஆச்சரியம் மிகுந்தது. அநுபவங்கள் நிறைந்தது. ஒவ்வொருநாளும் மனிதருக்கு பயன்படும் சத்காரியங்களையே செய்வார். இப்போது நமது இளம் எழுத்தாளர்கள் பாரதியாரைப் பற்றி நன்கு அறியாதவர்கள். எல்லோரும் பாரதியாரைப் பற்றி பலவிதமாக எழுதி வருகிறார்கள். பாரதியார் கவிதையைக் கொண்டு அவர் இப்படி எழுதியிருப்பார், அப்படி எழுதியிருப்பார் என்று ஊகத்தின் பேரில் எழுதுகிறார்கள். ஆனால் அவர்கள் கற்பனை மிதமிஞ்சி நம்மை வருத்தத்திற்குள்ளாக்குகிறது. "பாரதியார் கிழிந்த கோட்டுடன் வியாஜகம் எடுத்தார்" என்பது போன்ற விஷயங்களைப் படிக்கும்போது மனம் திடுக்கிடுகிறது. ரத்தம் கொதிக்கிறது. பின்பு வெகு சிரமப்பட்டுத் தான் பொறுமையை வரவழைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் பாரதியார் கொள்கைகளையும் போக்குகளையும் நானறிந்தவைகளை சிறிது சிறிதாக 'மித்திர'னில் வெளியிடலாமென்று தீர்மானித்திருக்கிறேன். கவியின் வாழ்க்கையை பெரிதும் விரும்பும் அன்பர்கள் உண்மை நிகழ்ச்சியை அறியும் பொருட்டு.

புதுவை நிகழ்ச்சிகள்

என் தந்தையாருக்கு 'பொய்' சொல்பவரைக் கண்டால் பிடிக்காது: உண்மை தவறி நடப்பவர்களை உதைத்து நசுக்கி விடுவார். விளையாட்டாகக் கூட பொய் பேசக் கூடாது என்பது எங்கள் வீட்டில் கட்டாய விதி. ஓர் நாள் இதற்கு மாறாக ஒரு விஷயம் நேரிட்டு விட்டது. 'மித்திரனு'க்கு வியாசங்கள் கட்டுரைகள் எழுதி அனுப்புவார். அதை தபாலில் சேர்க்கும் பொறுப்பு குழந்தைகளாகிய எங்களுடையது. பலவித காரணங்களுக்காக வேறு ஒருவரிடமும், தம் கட்டுரையைக் கொடுக்க மாட்டார். புதுவையில் சமுத்திரக் கரை காக்ஷி ரொம்ப அழகு வாய்ந்தது. ஸ்திரீகள் எல்லாரும் ஒரு கூட்டமாகவும், புருஷர்கள் எல்லாரும் ஒரு கூட்டமாகவும், தினம் சமுத்திரத்திற்குச் செல்வது வழக்கம். அன்று தந்தையாருக்கு உடம்பு சரியில்லை. ஓர் கட்டுரை எழுதிய தபாலைமட்டும் என்னிடம் கொடுத்து "இது மிகவும் முக்யமான தபால்" ஜாக்கிரதை உடனே சேர்த்து விடு என்றார். சரி என்றேன்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத்தொடர்ச்சி)

பின்பு உற்சாகத்தோடு கடற்கரை சென்றோம். கடற்கரை அருகில் தான் தபாலாபீஸ் இருக்கிறது. என் சிநேகிதிகளைக் கண்டதும் எனக்குத தபால் விஷயம் அடியோடு மறந்து விட்டது. விளையாட்டிலும், பேச்சிலும் நேரம் போனதே தெரியவில்லை. இரவு ஒன்பது மணிக்கு திரும்ப வீடு வரும்போது தான் தபாலை வீட்டிலேயே வைத்து விட்டு மறந்தது நினைவுக்கு வந்தது. இந்த கஷ்டத்திற்கு என்ன செய்வது? தந்தை மிகவும் கோபிப்பாரே என்னடா செய்வோம் என்று பயந்தோம் பின்பு "தபாலில் சேர்த்ததாக அவரிடம் சொல்லி விடுவோம். நாளை அதிகாலையில் பத்திரிகை வாங்க தபாலாபீஸ் போகும் பொழுது தபாலைப் போட்டு விடலாம்" என்று தீர்மானித்துக்கொண்டு வீடு வந்தோம். தந்தை கதவைத் திறந்தார். அவர் கையில் நான் போடாத கவர் வைத்திருந்தார். நான் படும் வேதனையை முகத்திலிருந்து அறிந்து கொண்டார். "உன் அஜாக்கிரதைக்கு நீ தண்டனை யடைந்தாய். இது பெரிய காரியமில்லை. எல்லாம் நன்மைக்குத்தான் நாளைக்கு அனுப்பிக் கொள்ளலாம்" என்றார்.

என் தந்தையார் எங்களைப் பள்ளிக்கூடம் செல்ல அநுமதிக்கவில்லை. வீட்டில் தான் படிப்பு. வ. வே. சு. அய்யர், ஸ்ரீநிவாஸாசாரியார், சுந்தரேசய்யர், ஸ்வாமிநாத தீக்ஷிதர் இவர்கள் வீட்டுக் குழந்தைகள் எங்களுடன் எப்போதும் இருப்பார்கள். ஒரு ஆச்ரமம் போல் இருக்கும் எங்கள் வீடு. ஓர் நாள் ஷெ குழந்தைகள் நானும் என் தங்கையும் வைத்திருந்த பொம்மை, விளையாட்டு சாமான் முதலியவைகளை எடுத்துக் கொண்டு கொடுக்க மாட்டேனென்றன். நாங்களும் குழந்தைகளானபடியால் அவர்களுக்கு அதைக் கொடுக்க மனமில்லாமல் இருந்தோம். என் தந்தை எங்களிடமிருந்த பொம்மைகளை யெல்லாம் எடுத்துக் கூசாமல் அவர்களிடம் கொடுத்தார். என் தாயார் அந்த சமயம் அதைப் பார்த்து சற்று கோபம் கலந்த வருத்தத்துடன் நின்றார். அப்பா "ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே வளரும்" என்றார். அம்மா கோபத்தோடு "ஊரார் குழந்தையை ஊட்டி வளர்த்தால் தன் குழந்தை தானே சாகும்" என்றார். தந்தை அப்பொழுது ஒன்றும் சொல்லவில்லை. சிறிது நேரம் பொறுத்து "மனிதர்கள் எல்லாருக்கும் வாழ்நாள் இன்பமாகவே கழிந்து விடுமென்று சொல்ல முடியாது. துன்பம் வந்த சமயம் மனம் உடைவதும், இன்பம் வந்த காலத்தில், மெய் மறந்து செருக்குற்றுத் திரிவதும் கூடாது. ஜப்பானியர் குழந்தைகளின் கைகளை பனிக்கட்டியில் வைத்து பழக்குவார்கள். பின்பு கொதிக்கும் வெந்நீரிலும் கை வைக்கச் செய்வார்கள் என்று கேட்டிருக்கிறேன். அது போல இப்பவே முதல் தன் சாமான்களை பிறர் பிடுங்கிக் கொள்ளும் சமயம் பொறுமையுடனிருந்து பழகினால் பெரியவர்களாகி, சாமான்களை, பொருள்களை அந்நியர் கொண்டு போக நேரிட்டால் அவ்வளவு கஷ்டப்பட மாட்டார்கள் என்றார். "நன்றாயிருக்கிறதே சோதனை" என்றார் தாயார்.

முதலில் கண்டுபிடித்தவர் யார்?

ஆகாய விமானம்

★

தற்கால யுத்தத்தில் விமானங்கள் வெகுவாக உபயோகிக்கப் படுகின்றன. சண்டை விமானங்கள் என்கிறார்கள். பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் என்றும், பறக்கும் கோட்டைகள் என்றும் கூறுகிறார்கள்! நாமும் அவற்றை பார்க்கிறோம். முதன் முதலில் ஆகாய விமானத்தைப் பறக்கச் செய்தவர் யார் என்பது தெரியுமா?

★

சைக்கில்

★

அது போகட்டும். தினசரி பள்ளிக்கூடங்களுக்கும், காலேஜ்களுக்கும் சர்வ சாதாரணமாகச் சைக்கிலில் போகிறோம். அது என்ன 'மேக்கர்' என்பதைப் பார்த்துத் தேடி நல்ல வண்டியா? உயர்ந்ததா? என்றெல்லாம் விவாதிக்கிறோம். சைக்கிலில் உள்ள உருப்புகளின் பெயர்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத் தவறுவதில்லை. ஆனால் முதன் முதலில் சைக்கிலைக்கண்டு பிடித்தது யார்? என்பதும் எப்பொழுது? என்பதும் இப்பொழுது சைக்கிலில் சவாரி செய்யும் எல்லோருக்குமே தெரியுமா?

★

தீக்குச்சி

★

இன்னொரு விஷயம், தீக்குச்சி. இதைப் பார்க்காதவர்கள் யாருமே இருக்க முடியாது. வெகு அலட்சியமாக தீக்குச்சிகளைக் கிழித்து விளக்கையோ, சிகரெட் நுனியையோ பற்ற வைக்கிறோம். இவ்வளவு சுலபமான வசதியைக் கண்டு பிடித்தவர் யாராயிருக்கலாம்? என்று சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

[விடையை அடுத்த இதழில் பாருங்கள்.]

★

சூர்யன் வெடிக்கும்!

எப்பொழுது?

★

நட்சத்திரங்களின் வாழ்நாளில் குறைந்தது ஒரு முறையாவது சிதறிப் போய் விடும் என்பதுவான சாஸ்திர அறிஞர்களின் நம்பிக்கை. நட்சத்திரங்களைப் போலவே சூர்யனும் சிதறுண்டு போகுமென்று அவர்கள் கருதுகின்றனராம. ஆனால் உடனே கவலைப்படும் படியாக இப்பொழுதேதும் நடந்து விடப் போவதில்லை! வான சாஸ்திரிகளின் ஆராய்ச்சிப்படி சூர்யன் இன்னும் இளம் பிராயத்திலேயே இருப்பதாகச் சொல்லுகிறார்கள். சூர்ய மண்டலத்துக்குச் சுமார் 12 லட்சம் கோடி வருஷ ஆயுள் என்று மதிப்பிடப்படுகிறது சூர்ய மண்டலம் சிதறப் போகிறதென்று சொல்லும் விபரீதம் 9 லட்சம் கோடி வருஷங்களுக்குப் பிறகு ஏதாவது ஒரு சமயத்தில் நேரலாமாம்!

★

என்னப்பா செய்வாய்?

★

ஒரே பாதையுள்ள ரயில் பாதை கிராஸிங் ஒன்றில் 'வாட்ச்மான்' வேலை காலியாயிற்று. இதைக் கேள்விப்பட்ட கிராமவாசி யொருவன் அவ்வேலைக்கு மனுப் போட்டான்.

வேலையை விட்டு விலக வேண்டிய 'வாட்ச்மான்' மனுச் செய்த கிராமவாசியைப் பார்த்து "நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்." என்று சொல்லிப் பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினன்.

"என்ன வேண்டுமானாலும் கேள் பதில் சொல்கிறேன்" என்றான் கிராமவாஸி.

"ரொம்ப சரி, நீ 'கிராஸிங்'கில் காவலிருப்பதாய் வைத்துக் கொள். அப்போது எதிர் எதிராக இரண்டு ரயில் வண்டிகள் வருவதாகவும் வைத்துக் கொள். அப்போது நீ என்ன செய்வாய்?" என்றான் விலகவேண்டிய வாட்ச்மென்.

"ஹூம்! இதுதானா பிரமாதம்! ஊதலை ஊதி வண்டியை நிறுத்துவேன். இது பெரியகேள்வியோ?' என்றான் கிராமவாசி.

கேள்வி:— "அவசரப்படாதே. இதுக்குப் பதில்சொல்லு. ஊதல் ரிப்பேராகிவிட்டதென்றால்..."

பதில்:—நான் எப்போதும் சிவப்புச் சட்டையை தான் போட்டிருப்பேன். அதைக் கழற்றி கொடி மாதிரி ஆட்டி வண்டியை நிறுத்துவேன்.

கேள்வி:—இந்த சம்பவம் இரவு வேளையில் நடக்கிறதாக வைதது்க் கொள்வோம். அப்பொழுது என்ன பண்ணுவாய்?

பதில்:—என்னிடம் உள்ள விளக்கை ஏற்றி அதை ஆட்டி நிறுத்துவேன்.

கே:—விளக்கில் எண்ணெயோ திரியோ இல்லையானல்?

பதில்:—என் அக்காவைக் கூப்பிடுவேன்.

கே:—எதற்காக அவளைக் கூப்பிடுவது? அவளுக்கென்ன தெரியும்?

பதில்:—அவளுக்கு இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாதுதான். ஆனால் அவள் வாழ்நாளிலேயேகண்டிருக்கமுடியாத ஒருபெரிய ரயில்விபத்தையாவது பார்க்கட்டும் என்பதற்காகவே அவளைக் கூப்பிட்டு சம்பவத்தைக் காட்டுவேன்!

எல்லாவித சிகிச்சையாலும் கைவிடப்பட்ட, முற்றிப் போன ஈரல் குலை நெருக்கத்தினின்றும் என் உயிரை காப்பாற்றியது.

எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதருஸ்.

சப் ஆபீஸ்: கும்பகோணம்.

பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சினப்பள்ளி, விஜயநகரம்.

"நினைத்ததும் நடந்ததும்"

சிறு கதை

★

கதம்பம் எழுதியது

தன் தகப்பனார் இவ்வளவு தூரம் கண்டிப்பாய் இருப்பார் என்று நாராயணன் கனவில்கூட நினைக்கவில்லை. என்ன இருந்தாலும் புத்திரபாசம்கூடவா கொஞ்சமும் இல்லாமல் போய் விடும்? அதுவும் அவரது ஓரே பிள்ளையின் மீது! எனவே அவனது அப்பா அவனைத் தநிதல் என்று சொல்லி அவன் விஷயத்தில் கவலை கொள்ளாமல் இருந்தது அவனுக்கு அதிசயமாகவே தோன்றியது.

அவனுக்குப் படிப்பு வராததற்கு அவனது தந்தையும் ஒரு விதத்தில் குற்றவாளிதான். தமிழரான அவரை மலையாள ஜில்லாக்களுக்கும் தெலுங்கு ஜில்லாக்களுக்கும் மாற்றிக் கொண்டிருந்தது காரணமாகப் பையனுக்குப் பத்து வயது முடியும்வரை அவன் கல்வி விஷயத்தில் அக்கரை செலுத்தாமல் அலக்ஷியமாய் இருந்தது அவர் மேல் குற்றமாகும். 'இளமையிற் கல்' என்ற முதுமொழியை உணர்ந்த அவர் தம் மகனுடைய இளமைக் கல்வியில் அசிரத்தையாய் இருந்திருக்கக் கூடாது தான். ஆனல் அவர் பையன் நாராயணனும் அது காரணமாக அவ்வளவு முட்டாளாக மாறி நான்காம் பாரத்தில் ஒரேயடியாய் முட்டுக்கட்டை போட்டு விட்டதும் பிசகு தான்!

ஒருவனுக்குப் படிப்பு வரவில்லையென்றால் அதனல் அவனுக்கு வாழ்க்கையின்பங்களை நுகரப் பாத்தியமில்லை, தகுதியில்லை என்று தீர்மானிப்பது சரியா? ஒருவேளை அவன் மிகுந்த ஏழையாய் இருந்தால் வேலை தேடிக்கொள்ளு முன் விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்னலாம். அப்படியில்லாமல் அவன் பணக்காரனுயும் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்பட வேண்டாத நிலையிலும் இருந்தால் அவன் கல்யாணம் செய்து கொள்வதில் தவறென்ன இருக்கிறது? இந்தச் சின்ன விஷயம் அவன் தகப்பனார் டெப்புடி கலெக்டர் முருகேசம்பிள்ளைக்குத் தெரியாமல் போனது நாராயணனுக்கு விந்தையிலும் விந்தையாகவே தோன்றியது.

இப்பொழுது முருகேசம் பிள்ளையைப்பற்றி சுருங்கக் கூறினல் அவரை ஒரு விநோதமான மனிதர் என்றே முடிவு கட்டிவிடலாம். அவரைப் பொருத்தமட்டில் ஏதோ சில நியதி நியமங்களைக் கடைப்பிடித்து ஒழுகுபவர். அவை பிறருக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ இருப்பின் அதைப்பற்றிச் சிறிதும் கவனிக்க மாட்டார். தன்னளவில் சரியென்றுதோன்றுவதைச் செய்து விடுவார். ஆதலால் அவரது அமுலில் அவர் ஏற்படுத்திய திட்டங்களை யாவரும் ஒரு இம்மியளவும் தவருது நடக்கவேண்டும். மிகவும் கண்டிப்பும் பிடிவாதமும் கொண்டவர். அத்தகைய மனுஷர் தன் பிள்ளை சரிவரக் கல்வி கற்கவில்லையாகையால் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று கூறிவிட்டால் பையன் அவர் உயிரோடிருக்கும் வரை பிரமசாரியாகவே காலங்கழிக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

பணக்கார இடம் என்பதொன்றையே உத்தேசித்துப் பலர் நாராயணனுக்குத் தத்தம் பெண்களைக் கொடுக்க முன் வந்தனர். ஆனல் முருகேசம் பிள்ளையோ "இப்பொழுது அவனுக்குக் கல்யாணம் செய்யப் போவதில்லை" என்று கூறி வந்தவர்களையெல்லாம் திருப்பி விட்டார்.

நாராயணனுடைய தாயாக்கு இதில் மிகுந்த வருத்தம். தான் ஒரு நாட்டுப்பெண்ணை அடைவதற்குக் குறுக்கே நின்ற பிள்ளையவர்களின் மனப்போக்கு அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. "ஏன்னு நீங்கள் இப்படிப் பிடிவாதம் பண்ணுவது சரியில்லை. அறியாதவன் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுவது சகஜந் தானே. சீக்கிரம் ஒரு நல்ல வரனைப் பார்த்து முடிச்சுடுங்கோ" என்று அடிக்கடி தன் மகனுக்குப் பரிந்து பேசுவாள்.

"சரி சரி, வாயை மூடு. படிப்போ சுன்னம். ஒரு பைசா சம்பாதிக்கத் துப்பில்லே. அவனுக்குக் கல்யாணம் என்ன வேண்டியிருக்கு? என்பதே முருகேசம் பிள்ளை வழக்கமாகக் கூறும் பதில்.

ஆனல் நாராயணனுக்கோ மணம் முடித்துக் கொள்ள வேணுமென்று மட்டற்ற ஆசை. எப்பொழுது ஒன்றைச் செய்யக் கூடாது என்ற நியதியிருக்கிறதோ அப்பொழுது தான் அதைச் செய்ய வேண்டுமென்ற ஆவல் அதிகமாய் இருக்கும். ஆகவே அவனது தந்தையின் பிடிவாதத்தால் அவனது ஆசை மேலும் மேலும் அதிகரித்தது.

2

இங்ஙனமிருக்கையில் ஒரு நாள் நாராயணன் வெளியே உலாவச் சென்றிருந்தான். வழியில் அவனது பழைய நண்பர்கள் சிதம்பரமும் நடராஜனும் அவனைச் சந்தித்தனர். மூவரும் பழைய நினைவுகளை ஞாபக மூட்டிக் கொண்டுப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சிதம்பரம், "நாணு, நம்ப மருதையாவுக்கு அவன் நினைத்த பெண்ணையே கல்யாணம் செய்து விட்டார் அவன் அப்பா" என்றான்.

"அந்தப் பெண்ணைத் தான் கல்யாணம் செய்வதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாரே, பின் எப்படியடா அது முடிந்தது?" என்றான் நாணு ஆச்சரியத்துடன்.

"எல்லாம் அவன் அதிர்ஷ்டம். பையன் அவளையே நினைத்துக் கொண்டுப் பைத்தியம் பிடித்தவன் போல மாறி விட்டான். சாப்பாடு செல்லவில்லை. வரவர இளைக்க ஆரம்பித்தான். எல்லோரும் மனே வியாதி என்றார்கள். பையன் கனவில்கூட அவளை நினைத்து உளர ஆரம்பித்து விட்டான். கடைசியில் வேறு வழியின்றி அவன் தகப்பனர் கல்யாணத்தை முடித்து விட்டார். பையன் தேறினல் போதும் என்ருகி விட்டது," என்று கதையாகச் சொன்னன் சிதம்பரம்.

பிறகு பல விஷயங்களைப் பற்றிப் பேசிப் பிரிந்தனர். நாராயணனுக்குத் திரும்பி வரும் போது வழியெல்லாம் ஒரே யோசனை தான். ஏன் அவனும் மருதையாவுக்கு உண்மையில் நேர்ந்த மனே வியாதி தனக்கும் வந்து விட்டதாகப் பாசாங்கு செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் அவன் தகப்பனரது கல் மனமும் ஒரு வேளை இளகலாமல்லவா? இந்த விதமான யோசனையில் ஆழ்ந்தவனாக அவன் வீடடைந்தான்.

3

முதல்நாளிரவும் மறு நாள் முழுவதும் நாராயணன் ஒன்றும் சாப்பிடாமல் ஏதோ ஏக்கம் அடைந்தவன் போல உட்கார்ந்திருந்தது அவனுடைய தாயார் ஞானத்தின் மனதில் கவலையைக் கிளப்பிற்று.

"ஏண்டா கண்ணு, பாலுஞ் சாதமாவது கொஞ்சம் சாப்பிடேண்டா. வயிற்றுக்கு ஒண்ணுமில்லாவிடில் வியாதி அதிகப்படுமேடா" என்று கூறிக் கொண்டே அவன் கையைப் பிடித்துப் பார்ப்பதும் நெற்றியைத் தொட்டுப் பார்ப்பதுமாக ஞானம் பொழுதைப் போக்கினுள். எவ்வளவு வலுக்கட்டியும் நாராயணன் ஒரு கவளம் சாதங்கூடச் சாப்பிடவில்லை.

அடுத்தநாள் தான் 'காம்ப்' பிலிருந்து திரும்பிவந்தார் முருகேசம் பிள்ளை. வந்தவுடன் ஞானம்நாராயணனுக்குஉடம்பு அசௌகரியம் என்பதைப்பற்றி ஒரு பெரிய பிரசங்கம் செய்து விட்டு அவனை கிடத்தியிருந்த அறைக்குப் பிள்ளையவர்களை அழைத்துச் சென்ருள்.

நாராயணன் கட்டிலின் மேல் மெத்தையில் படுத்திருந்தான். அவன் ஒரு பச்சைக்கம்பளியைப் போர்த்திக் கொண்டிருந்தான். தலையில் பிளானல் சுற்றியிருந்தது. அமிருதாஞ்சனம் வேறு நெற்றியில் தடவப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தன்பையனைக் கண்டவுடன் பிள்ளையவர்கள் மனதில் விவரிக்கயிலாத ஒருவித பயம் உண்டாயிற்று. அன்று தான் அவரிடம் அதுவரை மறைந்திருந்த புத்திரபாசம் எல்லாம் பன்மடங்காக வெளிப்பட்டுத் தோன்றலாயிற்று. அவர் முதல்முதலாக நாராயணனிடம் மிகவும் அன்புடன் பேசினர். கையைப் பிடித்துப் பார்த்து விட்டு ஜில்லாத் தலைமை வைத்தியரை அழைத்து வரும்படி ஆளனுப்பினர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வைத்தியர் வந்து சேர்ந்தார். பையனுடைய திரேக நிலையைப் பரிசோதித்தார். உண்மையில் வியாதி இருந்தால் அல்லவா ஏதாவது சின்னங்கள் இருக்கும்? வைத்தியருக்கே ஒன்றும் தோன்றவில்லை முருகேசம் பிள்ளையிடம் திரும்பி "இப்பொழுது ஒன்றும் ஸ்திரமாக இன்னவியாதி என்று கூற முடியாது, எதுவும் இரண்டு நாள் பொறுத்துதான் நிச்சயமாகக் கூறமுடியும்" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அன்று பகல் முழுவதும் பாலைத்தவிர வேறொன்றும் நாராயணன் சாப்பிடவில்லை.

4

அன்றிரவு முன்நேரம் பையன் அசந்துத் தூங்குகிறவன் போலக் காணப்பட்டான். பிள்ளையவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

(அடுத்த பக்கம் பார்க்க)

உலகில் அற்புத கடியாரம் எது?

★

உலகத்தில் மிகவும் ஆச்சர்யமான கடியாரம் ஒன்றிருக்கிறது. இந்த அற்புதமான கடியாரத்தைச் செய்தவர் பெல்ஜியத்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் லாட் விக்ஸிம்மர் என்பதாகும். இதில் மொத்தம் 98 "டயல்"களிருக்கின்றன. உலகத்தின் பல்வேறு பாகங்களிலுமுள்ள நேரம், பூமிசுற்றி வருவதைப்பற்றிய விவரம், சூர்யன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள் இருக்குமிடங்கள், முதலிய அநேகம் தகவல்களை இந்தக் கடியாரத்தின் உதவி கொண்டு அறிய முடியும். அதுமட்டுமல்ல. வேகமாக அலைகள் அடிக்கும் முக்கிய துறை முகங்கள் எவை?, குறைவாக அடிக்கும் இடங்கள் எவை? என்பது போன்ற விவரத்தைக்கூட இந்தக் கடியாரம் தெரிவிக்கிறதாம்!

கடியாரத்தில் டயல்கள் 98 என்றால் அதிலுள்ள முள்களும் அதிகமாகத் தானே இருக்கும்? அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக நகருகின்றதாம். இவற்றில் ரொம்ப வேகமாகப் போகக் கூடிய முள் ஒன்றுண்டிருக்கிறது அது ஒரு விநாடிக்கு 100 தடவை சுற்றி விடுகிறதாம். அதே போல மிகவும் மெதுவாகப் போகக் கூடிய முள் ஒன்றும் அதிலுண்டு. இது 26,000 வருஷத்துக்கொருமுறைதான் டயலைச் சுற்றி வருகிறதாம்! இந்தக் கடியாரம் நியூயார்க்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

சிறுவர் கதை

நாலு கேள்விகள்

★

ஸ்ரீ பி. ஆர்: கே. ஸ்வாமி

முன்னெரு காலத்தில் மணிபுரத்தில் மணிபல்லவன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் புத்திசாலி. ஆனலும் இறுமாப்பு உடையவன். தன்னைவிடக் கெட்டிக்காரன் உலகத்திலேயே கிடையாது என்பது அவனுடைய கொள்கை.

ஒரு நாள் அவனுடைய சபைக்கு கவி ஒருவர் விஜயம் செய்தார். அவர் பல நாடுகள் சென்றவர். அயல்நாட்டு விஷயங்களைப்பற்றி அரசன் அவரிடம் கேட்டான். அப்பொழுது கவியானவர், பார்வதிபுரத்து அரசனையும், அவனுடைய குடிகளையும் புகழ்ந்தார்.

அரசன் அதை நம்பவில்லை. "இந்தக் கவிக்கு அந்த அரசன் நிறைய பரிசு கொடுத்திருப்பான்" என்றான் ஒருவன். "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று தலையை ஆட்டினர்கள் சபையோர்களில் சிலர். ஆனல் கவி, தான் சொல்வது நிஜந்தான் என்று மறுபடியும் சொல்லவே அரசன் நேரில் போய்த் தெரிந்து கொள்வது என்று தீர்மானித்தான்.

மந்திரியும், அரசனும் மாறு வேஷம் போட்டுக் கொண்டு பார்வதிபுரத்துக்குப் புறப்பட்டார்கள். புறப்பட்ட நான்காம் நாளில் அந்த ராஜ்யத்தை அடைந்தார்கள். அங்கே ஒருவன் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் மந்திரியை நோக்கி "இங்கே எல்லோரும் புத்திசாலிகள் என்றாரே கவி, இவனை நாலு கேள்விகள் கேட்டு பார்க்கலாமே" என்றான் அரசன். மந்திரியும் அதை ஆமோதித்தார்.

அப்பொழுது அரசன் ஆடு மேய்ப்பவனிடம் போய் பின்வரும் நான்கு கேள்விகளையும் கேட்டான்:—

1. அரசன்:—"எல்லா ஒளிகளிலும் மேலான ஒளி எது?"

இடையன்:—"சூரியனுடைய ஒளி"

2. அரசன்:—"எல்லா நீரிலும் மேலான நீர் எது?"

இடையன்:—"கங்கா நதியின் நீர்"

3. அரசன்:—(வியப்படைந்து) "எல்லா உறக்கத்திலும் மேலான உறக்கம் எது?"

இடையன்:—"அலுத்துக் களைத்தபோது வரும் உறக்கம்"

4. அரசன்:-(ஆச்சரியமடைந்து) "எல்லாப் பூவிலும் மேலான பூ எது?"

இடையன்:-"தாமரைப் பூ".

அவன் சொன்ன விடைகளைக் கேட்ட அரசன் திருப்தி அடைந்து "பேஷ்! பேஷ்!" என்றான்.

ஆனல் ஆட்டிடையன் விழுந்து, விழுந்து சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் மந்திரி.

அதற்கு இடையன், "நான் முட்டாள்தனமாக சொன்ன பதில்களையெல்லாம் நீங்கள் தப்பு என்று ஒப்புக் கொள்ளாமல் சரி என்று ஒப்புக் கொண்டீர்களே" என்று தான் சிரிக்கிறேன்! என்றான்.

"சரியான பதில் தான் என்ன?" என்று மந்திரி கேட்டான்.

இடையன் வரிசையாகச் சொன்னான்:—

1. "எல்லா ஒளியிலும் மேலானது கண்ணின் ஒளி."

2. "எல்லா நீரிலும் மேலானது வறண்ட நாட்டில் கிடைக்கும் நீர்."

3. "எல்லா உறக்கத்திலும் மேலானது ஆரோக்கிய நிலையில் உறங்கும் உறக்கம்."

4. "எல்லாப் பூவிலும் மேலானது பருத்திப் பூ. ஏனென்றால் அது கருகி உதிரும்போது மதிப்பற்ற பஞ்சு நமக்குக் கிடைக்கிறது" என்றான்.

இதைக் கேட்ட அரசன் "கவி சொன்னது நிஜம் தான்." "ஆடு, மாடுகளை மேய்க்கும் இடையன்கூட இவ்வளவு புத்திசாலியாக இருந்தால், மற்றவர்கள் எவ்வளவு புத்திசாலிகளாய் இருக்க மாட்டார்கள்?" என்று எண்ணிக் கொண்டே தன் ஊருக்குத் திரும்பினன். அவனுடைய இறுமாப்பு ஒருவாறு மறைந்தது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

திடீரென்று, "கமலா! கமலா! என்னை விட்டு ஏன் போகிறாய்? இதோநானும் வந்துவிட்டேன்!" என்று நாராயணன் கத்தவாரம்பித்தான். பிள்ளையவர்கள் ஓடிப் போய், "என்னடா நாராயணு உளறுகிறாய்?" என்று கேட்டார். அவன் தலையணையை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

அன்றிரவு இன்னும் இரண்டு மூன்று தடவை நாராயணன் இம்மாதிரி உளறினன். பிள்ளையவர்கள் மனக்கிலேசம் அடைந்தார். ஞானமோ பிள்ளையவர்களைக் கடிந்தவண்ணமிருந்தாள். "நான்தான் அப்பொழுதே சொன்னேனே. அப்பவே காலா காலத்திலே ஒரு 'கல்யாணத்தையாவது பண்ணிவிட்டினும் என்று தொலைச்சிருந்தால் இம்மாதிரி எல்லாம் வந்து விளையுமா?" என்றாள் ஞானம்.

"ஊ...ம்" என்று பெரு மூச்செறிந்தார் பிள்ளை.

5

பொழுது விடிந்தது. வீட்டிலுள்ள சிப்பந்திகள் ஒவ்வொருவராக எஜமானுடைய பிள்ளையைக் கண்டு கொள்ள வந்தனர். ஒவ்வொருவரும் வியாதிக்கு ஒவ்வொரு காரணம் கூறினர்.

"பிள்ளை எங்காவது பயந்திருக்கும்," என்றனர் சிலர்.

"ஏதாவது பிசாசு பிடித்துக் கொண்டதோ என்னவோ? கமலா, என்று உளறுவதைப் பார்த்தால் தன் கோரிக்கை நிறைவேறாமல் தற்கொலை புரிந்து கொண்டவனது பிசாசு பிடித்திருக்கணும்," என்றனர் சிலர்.

"மூழியைக் கவனிச்சுப் பாருங்கோ. அது பயந்தவன் மூழி தான்னு," என்றனர் இன்னும் சிலர்.

மந்திரவாதிகள் இருவர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மத்தியானம் பூராவும் மந்திரோச்சாடனம் செய்து விட்டுப் பையனை வேப்பிலை கொண்டு அடித்து, விபூதி போட்டுச் சென்றனர். ஞானம் வேண்டிக் கொள்ளாத தெய்வம் கிடையாது.

6

இப்படி இருக்கையில் சாயந்திரம் வைத்தியர் வந்து சேர்ந்தார். கையைப் பிடித்துப் பார்த்தார். வியாதியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்பொழுது முருகேசம் பிள்ளை "பிசாசு பிடித்திருக்கிறது என்று கூறுகிறார்கள். ஒருவேளை அது உண்மையாய் இருக்கலாமோ?" என்று கேட்டார்.

வைத்தியர் சிறிது நேரம் யோசித்து விட்டு. "எனக்குத் தெரிந்து பிசாசை ஓட்டுவதற்கு ஒரு நல்ல முறை உண்டு. தினம் தவறாமல் இரண்டு மூன்று நாட்கள் சூடுபோட்டு வந்தால் பிசாசு ஓடிப்போய் விடும், அதை வேண்டுமானல் நீங்களும் செய்து பாருங்கள்" என்று கூறி விட்டுச் சென்றார்.

அங்ஙனமே அன்றிரவு பழுக்கக் காய்ச்சிய இரும்பால் நாராயணனது ஒரு துடையில் சூடொன்று போடப்பட்டது. நாராயணன் எவ்வளவு திமிறியும் தப்பித்துக்கொள்ள முடியவில்லை. கால்களை இருவரும் தலையை ஒருவரும் பிடித்துக்கொண்டிருக்கையில் அவன் ஜம்பம் பலிக்குமா?

மறுநாளும் அம்மாதிரியே ஒரு சூடு மற்றொரு துடையில் போடப்பட்டது. அன்று நாராயணன் கொஞ்சம் சாப்பிட ஆரம்பித்தான். பாவம்! எத்தனை நாள் தான் நடிக்க முடியும்?

அடுத்த நாள் அவன் முழுவதும் பழைய நாராயணனுக மாறி விட்டான். இன்னொரு சூடு போடத் தயாராய் இருந்த தகப்பனரும் அவன் மிகவும் மன்றுடியதின் பேரில் அந்த எண்ணத்தை விட்டு விட்டார்.

பிள்ளையவர்கள் மறுபடியும் பழைய பிடிவாதக்கார முருகேசம் பிள்ளையாகவே விளங்கலானர். பிசாசோட்ட நல்ல மார்க்கம் அநுபவ வாயிலாகக் கண்டறிந்ததாக அவர் இன்றும் பீத்திக்கொள்கிறார்.

நாராயணன் இன்னும் பிரமசாரியாகவே இருக்கிறான். கல்யாணத்தைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் துடைகளில் உள்ள சூட்டுத்தழும்புகள் அவன் மனக்கண்முன் வரும். உடனே இல்லற இன்பங்கள் எல்லாம் அவன் மனத்தை விட்டுப் பறந்தோடிப்போகும்!

நீதிக் கதைகள்

காகித யுகம்

★

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.
எழுதியது

குப்பன் என்பவனும் அவனுடைய மகனும் ஐரோப்பாவிற்குச் செல்ல புறப்பட்டனர். தகப்பனுராகிய குப்பன் இஞ்சினியர் உத்தியோகம் பார்த்துவிட்டு உபகாரச் சம்பளம் பெற்று வருபவர். அவருடைய மகனே உயர்தரக் கலாசாலையில் படித்துத் தேறிவிட்டு, ஐ. ஸி. எஸ் பரீக்ஷைக்குப் படிக்க இங்கிலாந்திற்கு செல்வதற்குத் தன் தகப்பனுருடன் புறப்பட்டான். அவர்கள் கப்பலில் ஏறுவதற்கு முன்பு, அம்மை குத்திக்கொள்ள வேண்டுமென்று கப்பல் அதிகாரிகள் அவர்களிடம் கூறினர். அம்மை குத்திக்கொண்டதற்கடையாளமாக சாட்சிப் பத்திரமில்லாமல் 'மார் செல்ஸ்' என்னுமிடத்தில் அவர்கள் கப்பலைவிட்டிறங்க அனுமதிக்கப் படமாட்டார்களென்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. இதர இந்து தேச மக்களைப்போலவே, தந்தையும் மகனும் அம்மை குத்திக்கொள்ள விரும்பவில்லை. வைத்தியர் மிகவும் நல்லவரென்று அவர்களுடைய சிநேகிதன் அவர்களிடம் சொன்னுன். அவர்கள் வைத்தியரிடம் சென்றனர். வைத்தியர் அவர்களுக்கு அம்மை குத்தினுர். அம்மை குத்திக்கொள்வதனுல் ஏற்படும் நன்மைகளை அவர் அவர்களிடம் எடுத்துக் கூறினுர். குத்தப்பட்ட இடத்தை உப்புத் தண்ணீரினுல் கழுவிவிட்டால். புண்ணுகாமல், சாதாரணமாக ரணம் ஆறிவிடும் என்று அவர் சொன்னுர். ஆனுல், அப்படிச் செய்யாதிருக்கும்படி வைத்தியர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அப்படிச் செய்தால், அது காகிதத்தைப் பொருத்தமட்டில் அம்மை குத்தப்பட்டதாக ஏற்பட்டுவிடும் என்றும், அதனுல் குணம் ஏற்படாதென்றும் வைத்தியர் சொன்னுர். தனக்குச் சேர வேண்டிய கூலியைப் பெற்றுக் கொண்டு, அவர் அம்மை குத்தியதற்கு அறிகுறியாக பத்திரங்களை அவர்களிடம் கொடுத்துவிட்டார். அவர்கள் உடனே சென்று, உப்புத் தண்ணீரினுல். அம்மை குத்தப்பட்ட இடத்தை நன்ருகக் கழுவிக்கொண்டனர். பிறகு அவர்கள் அம்மை குத்திக்கொண்டதைக் குறித்து அறவே மறந்து போய்விட்டனர். 'என்ன ஆச்சரியம்! ஒன்றைச் செய்ய வேண்டாமென்று கண்டிப்பாகச் சொன்னுல், ஜனங்கள் அதைச் செய்தேதீருவார்கள். இரும்பு யுகமாகிய இக்காலத்தில் இதனுல் அநேகம் நன்மைகள் ஏற்படுகின்றன' என்று தகப்பனுர் மகனிடம் சொன்னுர். 'நமது பத்திரங்களை அவர்கள் காகிதப் பத்திரங்கள் என்று தள்ளிவிடாமல் ஏற்றுக்கொள்வார்கள். அதனுல் இது இரும்பு யுகமல்லவென்று ஏற்படுகிறதல்லவா? எங்கு பார்த்தாலும் காகித மயமாக விளங்கும் இக்காலத்தை காகித யுகம் என்று சொல்லுதலே பொருந்தும்' என்று மகன் தந்தையிடம் கூறினுன்.

தங்கமான மனது

ஏடன் துறைமுகத்தில் இறங்கி குப்பனும் அவன் மகனும் பெரிய ஏரிகளைப் பார்த்தனர். அவைகளில் தண்ணீர் ஒரு துளி கூடக் காணப்படவில்லை. பத்து வருஷங்களுக்கு முன்பு தான் அந்த ஏரிகளில் தண்ணீர் நிறைந்திருந்தது என்று சொல்லிக்கொள்கிருர்கள். 'என் மகனே, அந்தக் காலத்தில் இந்த ஏரிகள் ஆச்சரியத்தை யுண்டு பண்ணக் கூடியவையாயும் ஏரிகளை ஸ்தாபிப்பதில் இவர்கள் அதிக சாமர்த்திய சாலிகள்: என்று காட்டுபவையாயும் விளங்கியிருக்க வேண்டும்? என்று பெரிய குப்பன் மகனிடம் சொன்னுர். 'இருக்கலாம் ஆனுல், இந்த ஏரிகளை ஸ்தாபிப்பதற்கு எவ்வளவு திரவியத்தை இவர்கள் வீணுகச் செலவு செய்திருக்க வேண்டும்; காலத்தை வீணுகக் கழித்து மெய்ப்பாடுபட்டு உழைத்திருக்க வேண்டும். இவைகளால் இப்போது என்ன பயன்? இந்த ஏரிகளை ஸ்தாபித்த அரசன் தங்கமான ஹிருதயமுள்ளவனுய் இருந்திருக்க வேண்டும். ஆனுல். அவன் மூளை மாத்திரம் மரத்தால் தான் செய்யப்பட்டிருந்திருக்க வேண்டும்" என்று மகன் சொன்னுன். "நீ அப்படிச் சொல்லாதே. ஒரே பாலைவனமாக இருக்கும் இந்த விடத்தில் ஒரு துளி தண்ணீரை ஜனங்களுக்குக் கொடுக்க எவ்வளவு திரவியம் செலவு செய்தாலும் தகும், அவன் அவ்வாறு செலவு செய்யாமலிருந்திருந்தானேயானுல், மிகத் தந்திர சாலியான ஒரு அழகுடைய ஸ்திரீயோ, அல்லது பேராசையுள்ள ஒரு அரசனே அந்தப் பணத்தை அபகரித்துக் கொண்டு போயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது, ஏழைகளுக்கு அவ்வப்போது தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நம்மைப் போன்ற கப்பல் பிரயாணிகள் இங்கே இதைப் பார்த்துப் பேசி சிறிது பொழுதைப் போக்கவும் இது உபயோகப்படுகிறதல்லவா?" என்று பெரிய குப்பன் சொன்னுன்.

நீதி ஸ்தலத்தின் உபயோகம்

'நீதி ஸ்தலத்தினுல் என்ன பிரயோசனம்? நியாயமான தீர்ப்புகள் சாதாரணமாக நீதிஸ்தலத்தில் அளிக்கப்படுவதில்லை. அநியாயமான தீர்ப்புகளே சாதாரணமாக நீதி ஸ்தலங்களில் அளிக்கப் படுகின்றன' என்று குறும்புத்தனம் நிறைந்த ஒருவன் ஒரு நீதிபதியைக் கேட்டான்.

'உண்மை. நீதி ஸ்தலங்கள் நியாயமான தீர்ப்புகளைச் சொல்வதற்காக மட்டும் ஏற்பட்டவையல்ல என்பதை நீ உணரவேண்டும். நீதி ஸ்தலங்கள் செய்யும் பல உபகாரங்களில் தீர்ப்பளித்தல் ஒன்று எனநீ கருத வேண்டும் என்று நீதிபதி பதிலளித்தார், 'மற்ற உபகாரங்கள் என்னவோ? தயவு செய்து சொல்லுங்கள்' என்று அந்த மனிதன் கேட்டான். 'முதலாவது நீதி ஸ்தலங்கள் இருக்கின்றனவென்னும் பயத்தினுல், கொலைகளும் களவுகளும் அதிகமாக நடப்பதில்லை. குற்றம் செய்தால், நீதி ஸ்தலத்திற்குச் சென்று கஷ்டமடைந்தவர்கள் வழக்குத் தொடுப்பார்கள் என்னும் பயம் ஜனங்களுக்கு இருக்கிறது. நீதி ஸ்தலங்கள் இல்லாமற்போனுல் கொலை களவுகள் பன் மடங்கு அதிகரித்து விடுமென்பதில் சந்தேகமில்லை. கொலை களவுகள் அதிகமாக நடக்காமல் நீதி ஸ்தலங்கள் தடுக்கின்றன இரண்டாவதாக நீதிஸ்தலங்களில் நடக்கும் நடவடிக்கைகளினுல் பொது மக்களுக்கு, குற்றங்கள் நடக்கும் விதமும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் மார்க்கமும், நன்ருகத்தெரிந்துகொண்டிருக்கும். மூன்ருவதாக சாக்ஷி சொல்லும் தங்களுடைய சிநேகிதர்களுடைய உண்மையான குணத்தை அறிந்து கொள்ள, நீதிஸ்தலங்கள் உதவி செய்கின்றன. நான்காவதாக, சில குற்றங்களில் தகுந்த சிக்ஷை குற்றவாளிகளுக்கு விதிக்கப்படுகிறது' என்று நீதிபதி பதிலளித்தார்.

உயிரை முதலில் காப்பாற்றிக்கொள்!

கடவுளை நேருக்கு நேராகக் காண வேண்டுமென்று, இந்து மதத்தைச் சேர்ந்தவன் ஒருவன் ஆசைப்பட்டான். கடவுளைப் பார்க்க உத்தேசிக்கும் ஒருவன், அன்ன ஆகாரமில்லாமலிருக்க வேண்டுமென்று அவன் சிநேகிதன் எடுத்துச் சொன்னுன். ஆகவே, அவன் பட்டினி கிடந்தான். ஐந்து தினங்கள் அன்ன ஆகாரமில்லாமல் கடும் பட்டினி கிடந்ததால், கடவுளுக்குப் பதிலாக, எமன் தன் முன்பு தோன்றுவதை அவன் கண்டான். கடவுளைக் காணவில்லை என்னும் ஏக்கத்துடன், அதிக பயமடைந்தவனுய், அருகிலிருந்த தபோதனரிடம் அவன் நகர்ந்து சென்ருன். தன் குறைகளை முனிவரிடம் சொல்லிக்கொண்டான். முனிவர் பின்வருமாறு சொன்னுர்: 'ஒரு சிறிது ஆகாரத்தைப் புசித்து உயிரைக் காப்பாற்றிக் கொள். உயிரில்லாமல் போனுல், ஆத்மாவை எப்படி காப்பாற்ற முடியும்? அழிவில்லா மோக்ஷத்தைப் பெறுவதற்கு, முதன் முதலில் உனக்கு உயிர் இருக்க வேண்டாமா? எல்லாவற்றையும் பெற உத்தேசித்து இருப்பதையும் இழந்துவிட முடியுமா? உன் முயற்சியினுல் நீ இருப்பதையும் இழந்து விடும்படி நேரிடும். ஆகையால் உன்னுடைய ஆகாரத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டுவா. நாளடைவில் ஆகாரமேயில்லாமல் இருக்கக் கூடிய நிலைமையை நீ பெறுவாய். முன்னேர்கள் அந்த மாதிரி செய்து தான், தங்கள் உயிரை இவ்வுலகில் தாங்கிக் கொண்டு. சாயுஜ்ய பதவியை அடைந்திருக்கின்றனர்' அந்த மனிதன் முனிவர் கூறிய பிரகாரம் செய்து மஹா முனிவராகி அழியாப் புகழுடம்பை அடைந்தான்.

விமோசனம் இல்லை

'அபிஸீனியா மீதில் இரக்கமே வைக்கக் கூடாது' என்று இத்தாலி தேசத்தைச் சேர்ந்த ஒருவன், தனது ஆங்கிலேய தேசத்து நண்பனிடம் சொன்னுன். அபிசீனிய சுதந்திரத்துடனிருந்தபோது வழிப்பறியினுலும் அடிமை வியாபாரத்தினுலுமே பொருளைச் சம்பாதித்து வந்ததனுல், அந்த தேசத்தின் மீது இரக்கங் கொள்ளுதல் தவறென்று இத்தாலி தேசத்தவன் சொன்னுன். 'ஆனுல், அபிஸீனியா வேருெருவர் கைவசமான பிறகு மாத்திரம் என்ன முன்னேற்றமடைந்துவிட்டது? முன்பு அடிமை வியாபாரமும் வழிப்பறியும் ஒரு தேசத்தில் மாத்திரம் தான் நடந்து வந்தது. இப்போதோ அது எல்லா தேசங்களிலும் நடந்து வருகிறது. அடிமை வியாபாரம் செய்து வந்தவர்களே இப்போது அடிமைகளாக்கப்பட்டு விட்டனர் என்று ஆங்கிலேய சிநேகிதன் பதிலளித்தான்.

தகுந்த மனிதர்களில்லை

இந்துதேசத்து பழையகாலத்து தேசிய வாதிகள் பலர் ஒரு தேக்கச்சேரியின் போதுஒன்று கூடினர். லெனின், ஸ்டாலின், ஹிட்லர் அல்லது முஸோலினி போன்ற பெரிய மனிதர்கள் தங்கள் தேசங்களுக்குச் செய்திருக்கும் பெரிய தியாகங்கள் போன்ற செய்கைகளை ஏன் நமது தேசத்திற்கு நமது தேசிய வாதிகள் செய்யக்கூடாதென்று வாலிப தேசாபிமானி ஒருவன் அவர்களைக் கேட்டான். 'நமது தேசத்தில் அதற்குத் தகுந்த வசதிகளும் மனிதர்களும் இல்லை' என்று பழைய தேசிய வாதிகள் கூறினர். தகுந்த மனிதர்கள் இருந்தால். உங்களுக்கு இங்கு என்ன வேலை. உங்களுடைய சகாயத்தை நான் ஏன் தேடப் போகிறேன்? என்று வாலிபன் பதிலளித்தான்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

பலுகவேமி பதிதபாவன! கருண
ஜிலுகவேமி ஸுஜன ஜீவன!

சரணம்

1. ஓர் சின தாபமார்சின அலங்கலார்சின எந்த நோர்சின
2. தலசின நின்னு கொலிசின யெந்தவலசின ப்ரக பிலசின
3. தெலிபின மனஸு நிலிபின பூஜஸலிபின மதமு கலிபின
4. காஞ்சின நின்னு பஜிஞ்சின முதமு வஞ்சின
யுரமுனனுஞ்சின
5. பட்டினயெந்ததிட்டின நின்னு ஜுட்டின பதமு பட்டின
6. ஆடின நின்னு பாடின யெந்த வேடின கொனியாடின
7. கோரின மருகு சேரின நின்னு தூரின யெந்த போரின
8. தெலிஸின புத்தி கலஸின ஜுஸி ஸொலஸின பேரு
தெலிஸின
9. ம்ரொக்கின நீசே ஜிக்கின யெந்தோ ஸொக்கின நீகே
தக்கின
10. நாகராஜ சயன! வேகரா ஸ்ரீத்யாகராஜநுத!
கருணாஸாகர!

II

பதிதபாவன!—பாபிகளை பரிசுத்தர்களாக்கும் பரம்பொருளே!
ஸுஜன ஜீவன!—சாதுக்களின் ஜீவனுதாரமாய் உள்ளவனே!
பலுகவு ஏமி—நீ என்னுடன் பேசாமலிருப்பதேன்?
கருண ஜிலுகவு ஏமி—என்மீது கருணைபுரியாமல் இருப்பதேன்?
ஓர்சின தாபமு ஆர்சின—நான் தாபத்ரயங்களை விடுத்து நின்ருலும்
அங்கலார்சின—உன்கிருபை கிடைக்கப்பெருது நான் என்னையே நொந்து கொண்டாலும்
எந்த நோர்சின—உன் குணவிசேஷங்களை ப்ரதிபாதிக்கும் பல நூல்களையும் கற்றுணர்ந்து உன்னையே அடைக்கலம் புகுந்தாலும் (பலுகவேமி)
தவசின—உன்னையே தியானித்துத் துதித்தாலும்
நின்னு கொலிசின—உனக்குக் கைங்கரியங்களைச் செய்தாலும்
எந்த வலசின—உன் தரிசனம் காணவேண்டி எவ்வளவோ நான் விரும்பியும்
பாக பிலிசின—உன்னை முறையிட்டுக் கூவி அழைத்தாலும் (பலுகவேமி)
தெலிபின—என் குறைகளை உனக்குத் தெரிவித்துக் கொண் [டாலும்
மனஸு நிலிபின—மனதை, அடக்கி உன்னை தியானித்தாலும்
பூஜஸலிபின—உன்னை பூஜை செய்தாலும்
மதமுகலிபின—மதமோஹங்களை விட்டொழித்தவனுனுலும் (பலுகவேமி)
நின்னு காஞ்சின—உன்னை நான் தரிசித்தாலும்
பஜிஞ்சின—பஜனை செய்தாலும்
முதமுவஞ்சின—உன் தியான பஜனுதிகளால் நான் ஆனந்தத்தை அடைந்தாலும்
உரமுனன் உஞ்சின—உன்னை என் இருதய கமலத்தில் வைத்து தியானித்தாலும் (பலுகவேமி)
பட்டின—உன்னை உறுதியாகப் பிடித்துக்கொண்டாலும்
எந்த திட்டின—உன்னை எவ்வளவு வைதாலும்
நின்னு ஜுட்டின—உன்னையே குறிப்பாக வந்தடைந்தும்
பதமு பட்டின—உன் திருவடிகளை கைகளால் பிடித்துக் கொண்டு பிரார்த்தித்தாலும் (பலுகவேமி)
ஆடின—உன்னையே நினைந்து உள்ளுருகி ஆடினுலும்
நின்னு பாடின—கான ரூபமாக உன் புகழ் முதலானவைகளை [பாடி ஆனந்தித்தாலும்
எந்த வேடின—என்னைக் காப்பாற்றி யருளுமாறு உன்னை [எவ்வளவு வேண்டிக்கொண்டாலும்.
கொனியாடின—உன்னை எவ்வளவு கொண்டாடினுலும் (பலுகவேமி)
கோரின—உன் தயவைக் கோரி நின்ருலும்
மருகு சேரின—உன்னுடன் இரண்டறக் கலக்கும் தன்மையை [நான் அடைந்தாலும்
நின்னு தூரின—உன்னை நான் தூற்றினுலும்
எந்த போரின—உன்னுடன் நான் எவ்வளவு சண்டை பிடித் [தாலும் (பலுக வேமி)
தெலிசின—நான் உன் உண்மையை அறிந்துகொண்டபோதி [லும்
புத்தி கலசின—உண்மையான ஞானத்தையுடைய புத்தியுடன் [விளங்கினுலும்
ஜுஸி ஸொலசின—உன்னை தரிசித்து விரும்பினுலும்
பேரு தெலிஸின—உன் நாமாவளிகள் தெரிந்து அவைகளால் [உன்னைத் துதித்து பஜித்தாலும் (பலுகவேமி)
ம்ரொக்கின—உன்னை நமஸ்கரித்தாலும்
நீசே ஜிக்கின—உன் கையில் நான் சிக்கிக்கொண்டபோதிலும்
எந்தோ ஸொக்கின—உன் திருமேனி அழகில் ஈடுபட்டு நான் [எவ்வளவோ மயங்கி நின்ருலும்
நீகே தக்கின—உனக்குத் தகுதியுள்ளவனுக நான் இருந்த போதிலும் (பலுகவேமி)
நாகராஜ சயன!—பாம்பின்மேல் பள்ளிகொண்டவனே!
ஸ்ரீத்யாக ராஜநுத!—ஸ்ரீத்யாகராஜனுல் துதிக்கப்பட்டவனே!
கருணு சாகர—கருணைக்கடலே!
வேகரா—வேகமாக என்முன் வந்தருள்வாய்.
பலுகவு ஏமி—நீ என்னுடன் பேசாமலிருப்பதேன்?
கருண ஜிலு கவு ஏமி—என் மீது கருணை புரியாதிருப்பதேன் [தெரிவிப்பாய்?

III

இது திவ்ய நாம சங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். ஸ்ரீராமன் தன்னுடன் அன்பொழுகப் பேசவில்லையே என்று வருந்தி ஸ்வாமிகள் தான் ஸ்ரீராமகிருபையைப் பெற வேண்டி செய்துள்ள முயற்சிகளை இக்கீர்த்தனத்தின் வாயிலாக தெரிவித்து முறையிட்டுக் கொள்கிருர்.

பலுக வேமி:—'மாட்லாட வேமி' 'ராமாபிராம' 'பலுகவேமிநா' 'சார்வ பௌம' முதலான கீர்த்தனங்களிலும் இது போன்றே பிரார்த்தித்துள்ளார். ஸ்ரீராமனின் பேச்சைக் கேட்பதில் தனக்கு உள்ள ஆவலை இங்கு குறிப்பிட்டுள்ளார்.

ஓர் சின:—பகவத் கிருபையை அடைய முயற்சிப்பவன் எவ்விதமிருக்க வேண்டுமென்பதையும், எவ்விதம் பகவானை பஜித்து உய்ய வேண்டும் என்பதையும் அனைவருக்கும் உபதேசிக்கும் எண்ணத்துடன். ஸ்வாமிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் என்று சொல்வது பொருந்தும்.

IV

ராகம் ஆரபி   ரூபக தாளம்

(29-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ்   அவ. ஸ்நிதபமகரிஸ.)

பல்லவி

தரி	ஸ்நி	தாபா	; பா	தப	மக	ரீரீ	ஸாரீ
ப .	லு .	கவே	மி	பா .	. .	வன	கரு
ஸா	;	; பம	பாதா	தப	மக	ரீரீ	ஸாரீ
ண		ப .	தித	பா .	. .	வன	கரு
ஸா	ஸத	ஸாரீ	மகரீ	ரீ	மா	பாபம	பாதா
ண	ஜிலு	கவே	. . மி	ஸு	ஜ	னஜீ .	வன

சரணம்

ஸ்நி	தா	ஸ்ாரீ	ரீரீ	ரீ	ம்க்	ரீரீ	ரிஸ்ஸ்ா
ஓர்	.	சின	தாப	மார்	. .	சின	அங்க
தத	ரீ	ஸ்ரிஸ்நி	தாபா	மப	தஸ்	தபமக	ரிமபத
லார்	.	சி . ன .	எந்த	நோர்	. .	சி . ன	. . . .

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

தீராத கடியாரத் தொல்லே!

★

"சித்ர குப்தன்"

எழுதியது

★

என் மாமனார் எனக்குத் தந்த பரிசுகளில் அதிகத் தொந்திரவு கொடுக்கக் கூடியவை, என் மனைவி மீனுவும் என் கை கடியாரமும்தான். எனக்கு என் கைகடியாரத்தில் எவ்வளவு வெறுப்புண்டோ அதை விட பதின்மடங்கு பிரீதி மீனுவுக்கு அதனிடம். இந்த கடியார விஷயமாய் அவளிடம் எத்தனையோ தகராறு-தர்க்கம் சமரசம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அவள் பிறந்தகத்திலிருந்து ஸ்ரீதனமாக கொண்டு வந்த எந்த சாமானிலும் கருத்தோ கவலேயோ அவளுக்கு அவ்வளவு அதிகமாய் இல்லே. ஆனல் அவள் என் கைகடியார விஷயத்தில் காட்டும் சிரத்தை மாத்திரம் அபாரமாய் இருந்தது. இந்த கடியாரத்தினல் நான் படும் அவஸ்தையைக் கண்டு சற்றும் மனமிறங்காதவளாய் இருந்தாள். இது நானுக வரவழைத்துக்கொண்ட பிரதிபந்தகம். என்னுடைய மாமனருக்கு எனக்கு கடியாரம் வாங்கிக்கொடுத்தால்தான் தீபாவளிக்கு வருவதாய் எழுதியிருந்தேன். என்னே மனங்குளிரச் செய்ய கல்கத்தாவிலிருந்து ரொம்பவும் சிரமத்தின் பேரில் ஐம்பது ரூபாய்க்கு இந்த கடியாரத்தை வரவழைத்து என் கையை அலங்கரித்தார். என்னுடைய மனைவி மீனுவை கேட்டால் அதைப்பற்றி நீண்ட பிரசங்கம் செய்வது மாத்திரமின்றி ஒரு புத்தகம்கூட எழுதி விடுவாள்.

நல்ல காரட் கோல்ட் கடியாரம்: அழகாகத்தான் இருந்தது: காட்லாக்கில் பத்து வருஷம் உத்திரவாதம் கொடுத்திருந்தான்-ஒரு மாதம் ஓடிக் கழிந்தது. புதுக் குடித்தனம்: ஒரு நாள் காலே: படுக்கையைவிட்டு எழுந்தேன். ரொம்ப நேரம் கழித்து விழித்திருக்கிறோம் என்று சந்தேகம்: எதிரில் மேஜை மேல் என் கைகடியாரம் பளபளவென்று காட்சியளித்துக்கொண்டிருந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். சந்தேகமில்லே: மணி பன்னிரெண்டு, திடுக்கிட்டேன், கடியாரம் ராத்திரி நின்று விட்டதா? இல்லே, ஓடிக்கொண்டு தான் இருந்தது, உண்மைதானு? நான் இவ்வளவு நாழிகை கழிந்தா எழுந்திருக்கிறேன்? "அடியே. உன்னேத்தான் இங்கேவா" என்றேன்.

மீனு மாத்திரம் நான் கூப்பிட்டால் தடங்கல் செய்வதேயில்லே. "உங்களுக்கு வேறு வேலே என்ன?" என்று சொல்லிக்கொண்டே, பால் கரண்டி சகிதமாய் என் எதிரில் நின்றுள.

கையில் கடியாரத்தை வைத்துக்கொண்டே "இப்போ மணி என்ன?" என்றேன். என் வார்த்தை அவளுக்கு அதிசயமாய் இருந்தது போலிருக்கிறது. கையை ஒரு தட்டுத் தட்டி கன்னத்தில் வைத்துக்கொண்டு நன்னுயிருக்கு லக்ஷணம் வெண்ணேயை வச்சுண்டு நெய்க்கு அழுத கதையாயிருக்கு. கையிலே கடியாரத்தே வச்சுண்டு மணி என்னவாம்?" என்றுள்.

நான் அவள் பிரமிப்பை போக்கும் தோரணையில் "கடியாரம் சரியா ஓடல்லே அதான். மணி என்ன இருக்குமென்னு கேட்டேன் என்றேன்.

"சரியா போகலேயா? வாங்கி ஒருமாதங்கூட ஆகல்லே—நன்னுயிருக்கு, அவன்தான் பத்து வருஷத்துக்கு காரண்டி கொடுத்திருக்கானே?" என்று கம்பெனிகாரனுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினுள்.

எனக்குக் கோபம் தாங்க முடியாமல் வந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "இப்போ மணி பன்னிரெண்டா ஆகிறது?" என்றேன்.

"மணி பன்னெண்டா? ஏதாவது சொப்பனமா? இப்போ தான் மணி ஏழாகிறது" என்றுள்.

"உங்கப்பா வாங்கிக்கொடுத்த கடியாரத்திலே மணி பன்னிரண்டு இப்போ" என்றேன்.

ஏன் எங்கப்பா மண்டையை போட்டு உருட்டரக? எல்லாம் வைச்சுக்கிற லக்ஷணத்திலேயிருக்கு. முன்னே பின்னே கடியாரம் கட்டிண்டிருந்தாதானே தெரியப் போறது?" என்றுள்.

இதற்கு பதில் சொல்ல அநேக விஷயங்கள் இருக்கின்றன, இந்த புதுகுடித்தனத்திலே அதுக்குள்ளே கலவரத்துக்கு இடங்கொடுக்க வேண்டாம் என்று பேசாமல் இருந்து விட்டேன்.

கடியாரத்தை சரி செய்து கட்டிக்கொண்டு, ஆபீஸிற்குப் போனேன். முத்யானம வேலேயில் கவனமாய் இருந்தேன். பக்கத்திலிருந்த ஹெட் கிளார்க் அகோரமய்யர் "கோபாலய்யர், மணி யென்ன? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கோ" என்றுர். கைகடியாரத்தின் ஞாபகம் அப்பொழுது தான் வந்தது. கடியாரத்தைப் பார்த்தேன். மணி எழு: திடுக்கிட்டேன்; காலேயில் நான் வைத்த இடத்திலேயே இருந்தது முள்ளு. அப்பொழுது என் முகத்தில் எவ்வளவு அசடு வழிந்ததோ பார்த்தாலல்லவா தெரியும், ஒருவிதமாக என்னே சமாளித்துக் கொண்டு, ஒரு மதிப்பாக-தைரியமாக, "மணி மூன்றடித்து பதினேந்து நிமிஷம் என்றேன்.

ஹெட் கிளார்க்கு ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு "ஆபீஸ் கடியாரத்திலே மணி நாலடிச்சுடுத்தே. உங்க கடிகாரம் தப்பு-நாலரைக்கெல்லாம் வெளியே போகணும்னு நினேச்சேன். அதான் கேட்டேன்" என்றுர்.

"ஆமாம் இரண்டு நாளாய் கடியாரம் என்னமோ தகராறு பண்ணரது" என்று அவருக்கு சமாதானம் சொல்லிவிட்டு, கடியாரத்தை சரியான மணியில் வைத்தேன்.

என் மனைவி ஆபீஸில் வந்து என்னே அவமானப்படுத்த மாட்டாள். ஆனல் இந்த கடியாரமோ என்னே எந்த சந்தியிலும் மானத்தை வாங்க சித்தமாயிருந்தது. அதை ரிப்பேர் செய்வதற்காக ஒரு ஆசாமியிடம் போனேன். கடியார யந்திரத்தின் நுட்பமான ஆராய்ச்சி நமக்கென்ன தெரியும்? அவன் சொன்னல் நம்ப வேண்டியது தானே! மெயின் ஸ்பிரிங்கில் ஏதோ கோளாறு என்றுன். சிரம சாத்தியமான வேலே என்று சொல்லி மூன்று ரூபாய் சார்ஜ் செய்தான்.

ரிப்பேருக்குப் பிறகு சிலநாள் கடியாரமும் சரியாய் போய் கொண்டிருந்தது. மனேவியிடமும் தகராறில்லே. சனிக்கிழமை யன்று என்றுமில்லாத குஷியோடு ஆபீஸிற்குப் போனேன். இடத்தில் வந்து உட்கார்ந்தவுடன் ஒரு ப்யூன் வந்து மானேஜர் என்னே அழைப்பதாய் சொன்னுன். மானேஜரின் மேஜை யெதிரில் போய் பணிவோடு நின்றேன்.

"என்னப்பா! எல்லோருக்கும் பத்து மணிக்கு ஆபீஸ். உனக்கு மாத்திரம் பதினேறு மணிக்கா?" என்றுர்.

மெதுவாய் தலேயை நிமிர்த்தி சுவற்றில் மாட்டியிருக்கும் கடியாரத்தைப்பார்த்தேன். மணி பதினென்று அடித்து பத்து நிமிஷம். அப்பொழுது தான் தெரியும் என் கடியாரம் ரொம்பவும் பொறுமையாக—மெதுவாய் போகிறது என்று. ஆத்துக்காரிக்கு உடம்பு சரியில்லே" என்று ஏதேதோ பொய் சாக்குச் சொல்லி விட்டு தப்பித்தேன்.

அன்று சாயந்திரம் வேறொரு கடியார ரிப்பேரரை போய் பார்த்தேன். என் கடியாரம் ரொம்பவும் உயர்ந்ததென்றும், அதை யாரோ கத்துக்குட்டி வேலேக்காரர்களிடம் கொடுத்து கெடுத்து விட்டதாகவும்—கடியாரத்திலிருந்த பொருத்தமான யந்திரங்களே மாற்றிவிட்டதாகவும்—தன்னுடைய வேலேத்திறமையை விளம்பரப்படுத்தும் தோரணையில் என்னிடம் அவன் கதையளந்தான். என்னிடம் இரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு, அந்த நிபுண சிகாமணி தன் முழுத்திறமையும் உபயோகித்து கடியாரத்தைச் சரி செய்து கொடுத்தான்.

இரண்டு நாள் சரியாக ஓடிற்று—அப்புறம் எனக்கு ஓயாமல் மணிக்கு மணி தொந்திரவு கொடுக்க ஆரம்பித்தது. இதுவரையில் என் கடியாரம் எத்தனேயோ கடியார ரிப்பேரர் வசம் அகப்பட்டு அவஸ்தைப் பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதற்கு ரோஸம் வந்து, தன் நிலேமையைச் சீர்திருத்திக் கொள்ளவில்லே. நான் இந்த கடியார விஷயமாய் செய்யும் செலவெல்லாம் மீனுவுக்கு திருப்தியாகவேயிருந்தது. அவளுடைய விருப்பமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தன்னுடைய தகப்பனர் எனக்குப் பரிசாக அளித்த அந்த கடியாரத்தை நான் எப்பொழுதும் கையில் கட்டிக் கொண்டிருக்கவேண்டும் அதைப்பற்றி குறை சொல்லக் கூடாது. அதனல் நான் படும் அவஸ்தையை விரயமாகும் பணத்தை சமய சந்தர்ப்பமின்றி படும் அவமானத்தை அவளிடம் எடுத்துச் சொல்ல வகையேயில்லே. அதை அவள் காது கொடுத்துக்கேட்பதும் இல்லே. ஏதோ கேட்டாலும் எனக்கு சாதாகமான தீர்ப்பாய் இராது அவள் பதில். என்னுடைய கோபமெல்லாம் மீனுவிடம் பலிக்கவேயில்லே. ஆனல் அவளுக்குக்கோபம் வராமலிருக்க, நான் கையிலிருந்து கடியாரத்தை கழற்றுமல் இருக்கும்படி நிர்ப்பந்தம் பிறந்தது. கடைசியில் இந்த கடியார விஷயமாய் அவளோடு ஒரு வாக்கு வாதம் நிகழ்ந்தது. அதையும் சொல்லிவிட்டால் முடிந்துவிடும் கதை.

என் கடியாரம் சுவற்றில் மாட்டி இருந்தது: நான் அதை கவனிக்காதவன்போல் கோட்டை மாட்டிக்கொண்டு ஆபீசுற்குக் கிளம்பினேன். "ஏன் கடியாரம் போட்டுக்கொள்ளவில்லேயா?" என்றுள் மீனு.

இவ் வார்த்தை எனக்கு கோபத்தை உண்டாக்கியது. "போதும்! உன் கடியார லக்ஷணம்—அதைக் கொண்டுபோய் தண்டவாளத்தில் வை" என்று சொல்லிக் கிளம்ப ஆயத்தமானேன்.

முன் கோபத்தினுல் சொன்ன இந்த வார்த்தைக்கு உடனே பதில் வந்தது. "என் கடியாரத்தை மாத்திரந்தானு? என்னேயும்கூட கழுத்தை முறிச்சு லயனில் போட்டுட்டு வந்துடுவக. இந்த கடியாரத்தை ஒழுங்காக வைச்சுக்காத புருஷாள் யாரை வச்சு சம்ரக்ஷிக்கப்போருு?"—என்று ஏதேதோ அடுக்கிக்கொண்டு போனுள்.

நான் அவளே இடைமறித்து "வீண் கூச்சல் ஏன் போடறே-இதோ பாரு-கடியாரம் சரியாய் ஓடினுத்தானே கட்டிக் கொண்டு போகலாம்-நீயே சொல்லு" என்றேன்.

என்னுடைய சமாதானம் பயனளிக்கவில்லே. "அப்படியே-சரியா-நிமிஷம்தவருமல் ஓடணுமாக்கம். செண்டிரல் ஸ்டேஷன் கடியாரம் கூட அப்படி ஓடாது. ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் முன்னே பின்னேதான் இருக்கும். அதுக்காக கடியாரத்தைத் தூக்கி குப்பைத் தொட்டியில் எறிந்துடரதா?" என்றுள்.

நான் கடியாரத்தை எடுத்துக் கையில் கட்டிக்கொண்டே "முள்ளு தலே கீழாகச் சுற்றினுலும் கையிலே கடியாரம் கட்டிக் கொண்டிருக்கணும்னு சொல்லு" என்றேன்.

அவள் முகத்திலும் கொஞ்சம் சிரிப்புக் களே ஓடிற்று. "நீங்க ஒரு கையிலே ஒரு கடியாரம் கட்டிக்கிறத்துக்கு இவ்வளவு சிரமப்படரக. பொம்மனுட்டிகளேப் பாருங்கோ! கையிக்கு மூன்று ஜதை வளேயல் போட்டுக்கரா. எதாவது கொஞ்சமாவது சிரமப்படராளா? அதுவும் இந்தக் காலத்திலே 'பாஷன்' ன்று சொல்லி, கனம்மா-கடகம் மாதிரி வளேயல் பண்ணி முழங்கை வரையில் அடுக்கிண்டு வரா" என்றுள்.

இந்த வார்த்தைக்கு பதிலே நான் எங்கிருந்து தேடிப் பிடிப்பது? என் கடியாரத்தின் தொல்லே தீரும் தான் வழியென்ன?

தசு (ரா)

மித்திரன் ஆசிரியர்

ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

எழுதிய

பன்னிரு பெரியார்களின் அரிய சொற சித்திரங்கள் கொண்டது.

ஸ்ரீ. "வ. ரா" முன்னுரையுடனும், படங்களுடனும் கூடியது.

விலே ரூ. 1. தபால் செலவு அணு. 6.

எல்லா மித்திரன் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலே, மவுண்ட் ரோடு, சென்னே.

பார்லிமெண்டின் ராணுவம்

பிரிட்டிஷ் பார்லிமெண்டு பாதுகாப்புக்காக 1940-ம் வருஷத்தில் தனியாக ஓர் ராணுவ கோஷ்டி ஏற்படுத்தப்பட்டது, இதில் மந்திரிகள், பிரபுக்கள், பத்திரிகைக்காரர்கள் முதலிய அநேகர் சேர்ந்திருக்கின்றனர். படத்தில் ஸ்டிரா போல்கி பிரபு தமது பிரிவிலுள்ள படையினரை அழைத்துச்செல்வதைக் காணலாம்.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

நவநாகரீகம்

★

ஒரு நகை

★

'காசினி'

* * * 'நேற்று சுப்பலம் போட்டிருந்த வளேயலே கவனித்தாயோ?" என்று மாலினி கேட்டாள்.

'இல்லேயே! அதாவது நான் சுப்பலத்தையே நேற்றுப்பார்க்கவில்லே; அதுக்கு அப்புறம்னு அவள் வளேயலே கவனிக்க முடியும்?' என்றுள் சரோஜா.

'ஏன்; நேற்று கமலத்தின் ஆத்துக்கு நீ போகலேயா? வீட்டிலே எங்க புக்காத்து மனுஷா வந்திருந்தா; நான் சீக்கரமாகவே வந்து விட்டேன்;' என்றுள் மாலினி.

'கமலத்தின் வீட்டில் என்ன விசேஷம்?' என்றுள் நளினு தேவி.

'குழந்தைக்குத் தொட்டில் போட்டாள்; உன்னேக் கூப்பிடலேயா?' என்று சரோஜா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'இல்லேயே! ஏதாவது மறந்து இருப்பாள்!' என்றுள் நளினு.

'உனக்கும் அவளுக்கும் மனஸ்தாபம். ஒண்ணும் கிடையாதே?' என்று மாலினி கேட்டாள்.

'இல்லே' என்று நளினு தலேயை அசைத்தாள்.

'சுப்பலம் போட்டிருந்தது என்ன தினுசு வளேயல்?' என்று பங்கஜம் கேட்டாள்.

"நானும் சீக்கிரமாகவே கமலத்தின் வீட்டிலிருந்து வந்து விட்டேன். என்ன தினுசு; நீ தான் சொல்லேன்!" என்று சரோஜா மாலினி பக்கம் திரும்பினுள்.

சுப்பலம் போட்டிருந்த வளேயல், காஞ்சனமாலே வளேயல் என்று கூறப்படும் கண்ணுடி வளேயல் மாதிரியில் தங்கத்தில் செய்திருந்தது. அதாவது முள்ளு, முள்ளான் மேடுகளும் தாழ்ந்த பள்ளங்களுமாகச் செய்திருந்தது. இதற்குச் சிகப்பு இனுமல் பூசி, வளேயல் பார்க்க ரொம்பவும் பகட்டாக இருந்தது. ஐந்து சாவரன் தங்கமும், கூலி பதினேந்து ரூபாய்களும் ஆச்சுது என்று சுப்பலம் சொன்னுள். வளேயல் புதிய பாஷனுக, அழகாக இருந்தது.

ஒரு புடவை

'நான் அன்னிக்கு பஸ்ஸில் பட்டணம் போனேன்: காருக்கு எண்ணெய் இல்லே; என்ன செய்யரது! என்று லேடி சுந்திராசாரி பெண் சொன்னுள்.

'எல்லாருக்கும்தான் பெட்ரோல் இல்லே; என்னமோ புதுக்கதையாட்டமச் சொல்ரையே?" என்றுள் மாலினி.

'பஸ்ஸில் நீ ஏறின விசேஷத்தைச் சொல்லரையா? ஏதாவது விசேஷம் பார்த்தையா?' என்று நளினுதேவி கேட்டாள்.

'ஒருத்தி, ஒரு புது தினுசுப் புடவை உடுத்தி இருந்தாள்!' என்றுள் லேடி சுந்திராசாரியின் மகள்.

அவள் வர்ணித்த தினுசு நன்ருகத்தான் இருந்தது. புடவை துணிப் புடவைதானும். ஆழ்ந்த பச்சை வர்ணமாக இருந்ததாம். இதில் விரல் அகலம் விட்டு விட்டு, விரல் அகலத்துக்குக் கறும் பச்சையில் பட்டிகள் போட்டிருந்துதாம். இந்தப் பட்டிகள் கண் பார்வைக்குத் தூக்கி 'நிற்பதுபோலிருந்துதாம். இந்தப் பட்டிகள் மேல் மெல்லிய சரிகைப் புள்ளிகள், பட்டிக்கு நாலு வரிசையாகப் போட்டிருந்ததாம். கரைக்கும் சரிகை போட்டிருந்ததாம்.

'விலே என்னவோ?!' என்று பங்கஜம் சொன்னுள்.

'நான் கேட்டே விட்டேன்! பத்தொன்பது ரூபாய்கள் என்று சொன்னுள்!' என்று அவள் பதில் சொன்னுள்.

நீ உன் மருமாளுக்கு இருபது ரூபாய்களுக்குள் புதிய தினுசில் புடவைகள் ஏதாவது இருந்தால் வாங்கி அனுப்பும்படி எழுதி இருந்தாயில்லேயா? இந்த தினுசு அழகாகவே இருக்கும் என்று தோன்றுகிறது. கிடைத்தால் ஒரு புடவை வாங்கி அனுப்புகிறேன்.

கவலே வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்க தக்க வழிகளேத் தெரிவிப்போம்.

மலேயப்பசாமி வைத்தியசாலே, பழனி. S. I.

பியான்ஸி பிரிண்ட் புடவை

நைஸான துணி. அழகிய கண்ணேக் கவரும் பிரிண்ட். உடலில் புட்டா அல்லது ஜங்களா போட்டது. படித்த மாணவிகள் இதைப் பெரிதும் விரும்புகிருர்கள். நவீனரகம்.

12 முழம் புடவை 1க்கு ரு. 9-0-0
16 முழம் ,, ,, ரு. 12-0-0

முத்தையா ஸ்டோர்ஸ், மவுண்ட் ரோட—மதராஸ்.

போர் நிகழ்த்தி வெற்றிகொண்டான் என்று கூறுவர்.

பழையகாலத்திலேமன்னர்கள் வெளிநாட்டுத் தானுபதிகளை விரோதித்துக் கொள்ளாமல் இருந்தது மட்டுமல்ல, அவர்களுக்குப் பல சமயங்களில் சன்மானம் அளித்து அவர்கள் மனத்தைத் திருப்தி செய்திருக்கிறார்கள். தேவராயர் காலத்தில் விஜயநகரத்துக்குப் பாரசிக மன்னரான ஸுல்தான் ஹாருக்கின் தானுதிபதியாக வந்திருந்த அப்துல் ரஜாக் தம்மை விஜயநகரத்தார் நடத்திய விதத்தைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்.

"அப்பால் ஒரு தட்டைக் கொணர்ந்து எனக்கு இரண்டு கட்டுவெற்றிலை, ஐந்நூறு பணம் கொண்ட ஒருமுடிப்பு, சுமார் இருபது மிஷ்கள் எடையுள்ள கற்பூரம் ஆகியவற்றை அளித்தார்கள் ஒவ்வொரு நாளும் எனக்கு இரண்டு ஆடுகள், நான்கு ஜதை கோழிகள். ஐந்து மணங்கு அரிசி, ஒரு மணங்கு வெண்ணெய், ஒரு மணங்கு சர்க்கரை, இரண்டு தங்க வராகப் பணம் நான் இருக்கும் இடத்துக்கு அனுப்பிவந்தார்கள். இது தினப்படி நடப்பதில் தவறாது. வாரத்துக்கு இருமுறை ராயர் என்னைத் தர்பாருக்கு வரவழைப்பார். நான் செல்லும் போது சாயங்காலம் ஆகிவிடும். ஒவ்வொரு தடவையும் எனக்கு ஒரு கட்டு வெற்றிலை, பண முடிப்பு, கற்பூரம் ஆகியவை வழங்கப்பெறும்"

கிருஷ்ணதேவர் கருத்து

அப்துல் ரஜாக்குக்கு அளித்ததைப் போலவே விஜயநகரத்து மன்னர்கள் மற்றத் தானுபதிகளுக்கு அளித்து வந்தனர். இது அவர்கள் வழக்கம், அன்றி முக்கியமான விசேஷ காலங்களில் அவர்களுக்குச் சன்மானங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

"ஆமுக்த மால்யதா"வில் கிருஷ்ணதேவர் பின்வருமாறு கூறுகிறார்:—ஒருநாட்டு அரசன் வெளிதேசங்களினின்றும் தன் சபைக்கு வந்திருக்கும் தானுதிபதிகளை அன்புடனும் அபிமானத்துடனும் நடத்த வேண்டும். தர்பாருக்கு வரவழைத்துச் சரஸமாகச் சல்லாபம் செய்ய வேண்டும. அவனுடைய எஜமானனைப்பற்றித்தான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைத் திடமாகவும் அவனுடைய மனசு நோகாமலும் எடுத்துரைக்க வேண்டும், அவனுடன் பேசுங்காலத்தில் அசந்தர்ப்பமான வார்த்தைகளையோ அவனுடைய உணர்ச்சிகளை விரோதமாகக் கிளப்பிவிடக்கூடிய வார்த்தைகளையோ உபயோகிக்கலாகாது. மிருதுவான மொழியில் பேசவேண்டும். யுத்த முடிவில் அவனுடைய எஜமானனுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டிய காலத்தில் அந்தத் தானுதிபதியின் உதவி பெரிதும் வேண்டியிருக்கும்.

(இந்தத் தொகுதியில் இதற்கு முந்திய ஆராய்ச்சிக் கட்டுரை நம 'மித்திரன்' வாரப் பதிப்பில் சென்ற வாரம் வெளியாகியிருக்கிறது.)

வெற்றி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

னுன். மிகவும் கம்பீரமான அவனுடைய பேச்சைக் கேட்டு ஜனங்கள் வாணிதாஸனை ஒரு குழந்தையென்றே கருதினர். சேகரனே வெள்ளப் பெருக்கெடுத்த ஒரு பெரிய நதியை ஒத்திருந்தான். வாணிதாஸன் சலசலவென்று பாடும் ஒரு சிற்றோடையின் அழகை ஒத்திருந்தான். சேகரன் ஒரு அழகான தாமரைப் பூஷ்பம். வாணிதாஸன் ஒரு மணமுள்ள ரோஜா மலர்.

சேகரன் முடித்தவுடன் திரும்பவும் வாணிதாஸன் ஆரம்பித்தான். கோபிகா நாதனுடைய வேணுகானத்தைப் பற்றி ஆரம்பித்தான். அவ் வேணிற் குழாயின் பரிசுத்தமான இன்னிசையில் கட்டுண்டிருந்தனர் கோபியர். அவ்வோசை எங்கிருந்து வருகிறதென்று அவர்களுக்குப் புலப்படவில்லை. அவர்கள் அது காதல் கடலிலிருந்து கிளம்பிய ஞான ஓசை என்று கருதினர். அக்குயிலோசை அவர்கள் நேத்திரங்களிலிருந்து கண்ணீரைப் பெருக்கிற்று. அவர்களுக்கு அந்த இன்ப கீதத்துடனே மறைந்து விடவேண்டுமென்ற அவா எழுந்தது.

வாணிதாஸன் சபையை மறந்தான்: போட்டியை மறந்தான்: தன்னையே மறந்தான். வஸந்த காலத்தின் தென்றலைப் போன்ற அவனுடைய வேணுகானப் பாட்டு சபையோர்களை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தி விட்டது. அவன் முடித்ததும் அவனைப் புகழவேண்டுமென்றதை மறந்து விட்டனர். ஆனல் அவன் கடைசியில் சொன்ன வார்த்தைகளைமட்டும்கேட்டனர் "அரசே! பதலாளித்யங்களில் நான் தோற்கடிக்கப்பட்ட போதிலும். அன்புப் பெருக்கில் நான் வெற்றி பெறவில்லையா?"

சேகரன் ஏளனமாக சிரித்துக் கொண்டே சொல்லலுற்றான். "உலகத்தில் பதலாளித்யங்களின் அழகைவிட வேறென்ன அழகு இருக்கிறது? அப்படியிருந்தாலும் ஒருவரும் கேட்டறியாத அவ்வேணுகானத்தின் உண்மையைப்பற்றி வாணிதாஸனுக்கு என்ன தெரியும். கிருஷ்ணன் யார்? ராதை யார்? கோபிகைகள்தான் யார்? இதற்கு எவர் வேண்டுமானுலும் பதில் சொல்லுங்கள். எல்லோரும் வாணிதாஸனை நோக்கினர். அரசன் ஆச்சரியமடைந்தான். ஒருவராவது பதில் சொல்ல எழவில்லை. அரசன் வாணிதாஸனைப் பார்த்து சைகை செய்தான், ஆனல் அவன் அசையவில்லை. பிம்பிஸாரன் கோபத்துடன் சிம்மாஸனத்திலிருந்து எழுந்து சேகரனின் கழுத்தில் வெற்றிமாலையைச் சூடிவிட்டான்.

வாணிதாஸன் வீட்டிற்குத் திரும்பிவிட்டான். அவன் இதுவரையில் எழுதிய கவிகளையெல்லாம் எடுத்தான். ஒவ்வொன்ருக நெருப்பிலெரிய விட்டான் "ஹே, எழில் முகமே, இதை பெற்றுக்கொள் இவ்வளவு நாட்களாக என்னுடைய ஹ்ருதயத்தில் நீ ஜ்வாலை விட்டுக்கொண்டிருநதாய், நான் ஒரு வெண் சங்கமாகயிருந்திருந்தால் இன்னும் வெண்மையாக ஆகியிருப்பேன். ஆனல் நான் சார் பிழியப்பட்ட ஒரு பழம். நான் உனக்கு கொடுக்கக் கூடியது இக் கைப்பிடிச்சாம்பல் தான்.

அத்துடன் தன் அறைக்குள் சென்றான். படுக்கையில் படுத்துக்கொண்டு ஒரு கொடிய விஷத்தை விழுங்கி விட்டான். "என் தெய்வமே! அருள் செல்வமே! அருள் கூர்ந்து உன் மந்தார முகத்தை சற்றே காண்பி! என்னுடைய தோல்வியை மன்னித்து விடு. ஒரு க்ஷண நேரம் உன்னுடைய சுபாவமான பிரஸன்ன வதனத்தை எனக்குக் காட்டு! அத்துடன் என் ஆயுளின் லட்சியம் நிறைவேறி விடும். எதோ, எதோ......"

'கலீர், கலீர்' என்ற கால் சதங்கையின் ஓசையும் கைவளைகள் குலுங்குவதின் சப்தமும் கேட்ட வாணிதாஸன் திடுக்கிட்டான். அவன் எந்த ஸௌந்தர்ய முகத்தை காணத் தேடினானே, எந்த முக விலாஸத்தை இதுவரை தன்னுடைய ஆத்மாவாகக் கருதினானே, எவளுடைய எழிலை பூஷவுடலை விடுமுன் பார்க்க விரும்பினானே, அந்த பிரஸன்ன வதனம் அவன் எதிரில் தோன்றியது. இதுவரை அகக்கண்ணிலேயே உணர்ந்த அந்த பரிபூரண அழகை புறக்கண்ணுல் பார்த்ததினல் வாணிதாஸனுக்கு ஒரு எல்லையில்லா ஆனந்தத்தை அளித்தது. "என் அழகுத் தெய்வமே! என் கலைப் பெண்மணியே. கடைசியில் என் மேல் கருணை கூர்ந்து எனக்கு காட்சி யளிக்க வந்தாயா?"

மதுரமான மறுமொழிகிடைத்தது, "என் இணையிலாக் கவியே வந்து விட்டேன். நான்தான் அரசகுமாரி சித்ரகலா."

வாணிதாஸன் பிரயாசைப் பட்டு எழுந்து உட்கார்ந்தான். சித்ரகலா தொடங்கினுள், "என் அரசே! என் தந்தை சரியாக தீர்ப்பளிக்கவில்லை. அவர் நியாயம் தவறிவிட்டார். கவிப்போட்டியில் நீ தான் வெற்றிபெற்ருய். உனக்கு அவ் வெற்றிமாலை சூடவே வந்தேன்"

சித்ரகலா கழுத்திலிருந்து தன்னுடைய முத்து ஹாரத்தை எடுத்து அவன் கழுத்திலிட்டாள். புன்முறுவலுடன் கவியும்கடைசி முறை தன் கண்களை மூடிக்கொண்டான்.

சிந்தாமணி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாந்தர் வாழ்த்தி, மகிழ்ந்து சென்றனர் சீவகனும் காந்தருவதத்தையும் சுகமாகப் பொழுது போக்கி இருந்தனர்.

சீவகன் ஒரு நாள் சோலையில் உலாவிக் கொண்டிருக்கையில் வித்தியாதர தூதனுன தரன் அங்குத் தோன்றி திருமுகமொன்றைத் தந்தான். சீவகன் வணக்கமுடன் அதை வாங்கிப் படிக்கலானன்.

"கலுழவேகன் ஓலையைச் சீவகசாமி காண்க. நன்மையுண்டாகுக. யான் தமக்கென்றே காந்தருவதத்தையைச் சீதத்தனுடன் அனுப்பினேன். அங்கு இசைப் போரும், கட்டியங்காரன் பகைப்போரும் நிகழ்ந்தமையை யறிந்தேன். காந்தருவதத்தையை மணந்ததும் அறிந்தேன். தாம் இனி எது செய்ய எண்ணினுலும் எனக்கறிவித்துச் செய்யவும்" என்று வாசித்தான். உடனே தன் மாமனுகிய கலுழவேகன் பாதத்தைத் திசை நோக்கி வணங்கித் தரனை காந்தருவதத்தையிடம் அழைத்துச் சென்று திருமுகத்தைக் காட்டி மகிழ்ந்தான். பின்னர் தரனுக்கு பல பொருள்களைக் கொடுத்து உபசரித்துக் கலுழவேகனிடம் அனுப்பினுன்.

அடுத்த வாரம்—

கடும் நட்புப் பகை காட்டும்

லூயி பிஷர் யார்?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏதோ ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். பேட்டிகளில் இதைப் பின்பற்றுகிறார் பிஷர். பிஷரின் பேட்டிகள் மிகவும் நீடித்து நடக்கும். ஆனல் அவர் அவற்றில் வெகு சொற்பமாகவே பேசுகிறார். உலகத்திலுள்ள முக்கிய தலைவர்கள் ஒவ்வொருவரையும் அவர் கவனித்திருக்கிறார்.

பகலில், சுமார் 1 மணிக்கு வைஸ்ராயின் இருந்த அறைக்குள் பிஷர் பிரவேசித்தார். இரவு 7-15 மணி வரையில் அவர் வெளி வரவில்லை. ஆயினும் காந்திஜியுடன் அவர் கண்டு பேசியது தான் ரொம்ப நீடித்த பேட்டியாகும்.

வைஸ்ராயை 'மிஸ்டர்' என்றார்

ஒரு வாரத்துக்கு மேல் பிஷர் சேவாக்கிராமத்திலிருந்தார். ஆச்ரம வாஸிகளுடன் சாப்பிட்டார்; காந்திஜியுடன் உலாவினர்; காதி 'குர்தா'வையும், பைஜாமாவையும் போட்டுக் கொண்டார். நிலவொளியில் நேருவுடனும், ஆஸாதுடனும் சம்பாஷித்தார். காந்திஜியுடன் ஹாஸ்யமாகப் பேசினுர். மகாத்மாவை யுத்தத்தை ஆதரிக்கும்படி செய்ய முயற்சிகளும் செய்தார். சுயமாகச் சிந்திக்கக்கூடிய பிரபலஸ்தர் காந்திஜியென்றும், மிகவும் வசீகரத் தன்மை வாய்ந்த குணத்தை அவரிடம் தாம் கண்டதாயும் பிஷர் என்னிடம் சொன்னார். வர்தா இந்தியாவின் ஜீவநாடி என்று தாம் முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

துவேஷ உணர்ச்சி எதுவுமின்றி அவர் இங்கு வந்தார். இதிலிருந்து அவர் எவ்வித அபிப்ராயமும் கொள்ளாமல் இந்தியா வந்ததாக அர்த்தமில்லை. உலக அரசியலில் ஊக்கமுள்ளவர் என்ற முறையில் அவர் இந்தியா பற்றிய புத்தகங்களைப் படித்தார். க்ரிப்ஸ் போன்றவர்களின் சிபார்சுகளை அவர் கொண்டு வந்தார். லின்லித்கோ பிரபுவைப் பேட்டிகண்டு நெடு நேரம் பேசினர். இந்திய ஸேனதிபதி ஜெனரல் வேவலையும் நீண்ட நேரம் பார்த்துப் பேசினர். இரண்டு பேரிடமும் அந்தரங்கமான பேச்சு. இதற்காக பிஷர் விசேஷமான உடை எதையும் உடுக்கவில்லை. 'டை' கூடக் கட்டிக் கொள்ளவில்லை. வைஸ்ராயைப் பார்த்து "மிஸ்டர்" என்று அழைத்த முதல் அந்நியர் லூயிபிஷர்தான். இதை உதாரணமாகக்கொண்டு அமெரிக்காவில் ஹாலிபாக்ஸ் பிரபுவை "மிஸ்டர் ஹாலிபாக்ஸ்" என்று இன்று கூப்பிட ஆரம்பித்திருக்கின்றனர். மகாத்மாஜி இந்தியாவில் மகா புருஷர் என்றும், அரசியல் விவகாரங்களைப் பற்றி விவாதிப்பதற்கு வர்தா மிகவும் முக்கியமான ஸ்தலமென்று வைஸ்ராய் ஒப்புக் கொள்ளும் வகையில் பிஷர் அவ்வளவு பட்டவர்த்தனமாக விவாதித்தார்.

பிஷரின் ஞாபக சக்தி ரொம்ப அபாரமானது. வைஸ்ராயுடனும், வேவலுடனும் தாம் நடத்திய சம்பாஷணை முழுதையும் அவர் அப்படியே ஒப்பிப்பார்.

சேரிகளுக்கு விஜயம்

பிஷர் 10 வாரங்கள் இந்தியாவில் தங்கினர். இந்தக் காலத்தில் அவர் அரசியலைத் தவிர வேறு எந்த விஷயம்பற்றியும் பேசவில்லை. பெரிய பெரிய பணக்காரர்களும். மன்னர்களும் அவரை அழைத்தார்கள். ஆனல் வர்தா, பம்பாய் இரண்டு இடங்களைத் தவிர வேறெங்கும் அவர் போகவில்லை. சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களைக்காண அவருக்குச் சிரத்தை பிறக்கவில்லை. பம்பாயில் சேரிகளிலும், சந்துகளிலும் சுற்றி வந்தார். பக்கத்து கிராமமொன்றுக்கும் போயிருந்தார். பம்பாய் ஆலைகளையும் போய்ப் பார்வையிட்டார். அவருக்கு அவற்றில் சிரத்தை உண்டு. சேரிகளில் கிராமவாசிகளிடமும், பெண்களிடமும் நேரிடக் கேள்விகள் கேட்டார். பிஷருக்கு இந்திய பாஷைகள் பேசத் தெரியாததால் கிராமவாசிகள் கருத்தைப் பயன் படுத்திக்கொள்ள முடியவில்லை. சில அதிகாரிகள் பம்பாய்க்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துக்குச் செல்வதற்காக ஏற்பாடு செய்தார்கள். பிஷர் போய் பார்ப்பதற்காகத்தான். "காந்திஜீ, நேரு, ஜின்னு இவர்களைப்பற்றி அக்கிராமவாசிகளுக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது" என்று எண்ணும்படி மேற்சொன்ன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கிராமத்தார்களுக்கு காங்கிரஸைப்பற்றியோ, லீகைப்பற்றியோ தெரியாது. புத்தி நுட்பமுள்ள பிஷரைச் சுலபமாக ஏமாற்ற முடியாது. இந்தியா பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என்பதை அவர் எழுதிய கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றன. பெரிய அரசியல் கூட்டங்களை அவர் கண்கூடாகப் பார்த்தவர். காந்திஜிக்கு அரசியல் துறையில் எதிரிகளாக விருப்பவர்கள் கூட மகாத்மாவை ஜனங்கள் மகா புருஷனுக கொண்டாடுகின்றனர் என்று அவரிடம் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியா வந்ததேன்?

கேள்விகள் கேட்க பிஷர் சளைக்கவே மாட்டார். சில சமயங்களில் பள்ளிக்கூட உபாத்தியாயர்களைப் போல நடப்பார். யாரையும் குறுக்கிட்டுப் பேசவிடமாட்டார். யுத்தப் பிரசாரம் செய்துவிட்டு கட்டுரைகள் எழுதி பணம் சம்பாதிக்க வந்திருப்பதாக பலர் அவரைப்பற்றி நினைத்தார்கள், இந்தியாபற்றி உண்மை விவரம் சேகரிக்கவே வந்தார். பிரசங்கம் புரிய வரவில்லை. அரசியல்பற்றியும் அரசியல் பிரமுகர்கள்பற்றியும் தகவல் திரட்ட வேலை செய்தார். யாருடனுவது பேசிக் கொண்டிருக்கும்போது காகிதத்தில்கூட குறித்துக்கொண்டது கிடையாது' ஒழிந்த வேளையில் 'டைப்' அடிப்பார். அவ்வளவு தான்.

அரசியல் துறையில் இளம் பிராயத்திலிருப்பவர்களை அவர் அவசியம் பார்த்துப் பேசினர். பெரிய தொழில்களின் முதலாளிகளையும கண்டு பேசினர். பம்பாய் வர்த்தகப் பிரமுகர்களையும் கண்டு சம்பாஷித்தார். சுருங்கச் சொன்னல் அவர் எடுத்துக்கொண்ட வேலையைப் பரிபூர்ணமாகச் செய்துவிட்டார்.

அமெரிக்காவில் பரபரப்பு

இந்தியாபற்றி பிஷர். எழுதிய கட்டுரைகள் காரணமாக அமெரிக்கா, இங்கிலாந்து, சீன ஆகிய நாடுகளில் பரபரப்பேற்பட்டது. இது கண்டு இந்தியத் தலைவர்கள் ஆச்சரியமடைந்தனர். அமெரிக்கா போய்ச் சேரும்வரையில் அவர் தமது அபிப்பிராயம் எதையும் குறிப்பாகக்கூடச் சொல்லவில்லை. ஆச்சர்யத்துக்குக் காரணம் அதுவே பிஷர் சிறந்த பத்திரிகைக்காரர். ஜலத்திலிருந்து பாலை எப்படிப் பிரிப்பது என்பது அவருக்குத் தெரிந்திருக்கிறது.

லூயிபிஷர் பத்திரிகைக்காரர் மட்டுமல்ல; நூலாசிரியருமாவார். அவர் அரசியல் அபிப்பிராயங்களையும், உலக சம்பவங்களையும் உருவாக்க முயற்சிக்கிறார்.—"பம்பாய் க்ரானிகிள்"

எதிரி சப்மரின்களின் அட்டஹாசத்தை அடக்க அமெரிக்கர் புதிதாக ஓர் கப்பல் கண்டுபிடித்திருக்கின்றனர் இதைகண்டுபிடித்தவர் பெயர் அண்டோயின் காஸ்டா. இதிருக்கும இடத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமாம். எந்தக் கபபல்களிலும் இதை எடுததுச் செல்ல முடியும்.

ரூ. 500 இனும்!

சித் சக்தி கவசம்

இதன் உபயோகத்தால் எவ்வளவு கடினசித்தமுள்ளவர்களும் உங்களை உண்மையாக நேசிப்பார், வியாபாரத்தில் லாபம், வியாஜ்ஜியத்தில் ஜெயம், ஆரோக்கியம், ஐச்வர்யம், காதல் விஷயங்களில் வெற்றி ஏற்படடு. கிரஹதோஷங்களை நீக்கி, ராஜாங்கத்தில் கௌரவம், கீர்த்தி இஷ்டம்போல் விவாகம முதலிய ஏற்படும. புத்திர சந்தானம இல்லாதவர்கள். புருஷர்கள் ஒன்று, ஸ்திரீகள் ஒன்று ஆக இரண்டு கவசம தரிக்க வேண்டும். விலை செப்பு கேஸ் ரூ. 1-15 0 (மூன்று ரூ 5.) வெள்ளி கேஸ் ரூ 2-12-0 தங்க கேஸ் ரூ. 5-15-0 ஸ்பெஷல் நெ.5 ரூ. 6-12 0 தபால் சார்ஜ் பிரத்யேகம.

உண்மையில்லையென நிரூபித்தால் ரூ 500 வெகுமதி. பலனளிக்காவிடில் விலை வாபீஸ்

SHRI ANAND SWAMI
Post Box 61. (S M) LAHORE.

(E A B)

வாசனை கூந்தல் தைலம், சுண்ணும்பு வாசனை, தாம்பூல மாத்திரை. இவை 3 புட்டியும் தபால் செலவுடன் ரூ. 1-8-0.

'சிசு ரக்ஷணி' இசிவு, இளம்பிள்ளை வாதம், வயிற்றுக் கட்டி இவற்றின் பாதுகாப்பும், பரிகாரமும் கைகண்ட ஔஷதம். தபால் செலவுடன் புட்டி ரூ. 2—14—0.

(முன் பணம் மணியார்டர் செய்யவும்)

எனது 3-வயது குழந்தையின் வயிற்றுக்கட்டி ஒரே புட்டி 'சிசு ரக்ஷணி'யால் பூராவும் குணமாயிற்று. வி. ராமசந்திரன், பல்லாரி.

ஏ. எஸ். டெபோ,
76, கொன்னூர் ஹைரோட்,
பேரம்பூர், மதராஸ்.

நரையை ஒழியுங்கள்.

தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்தக் கறுப்பு (IVORY BLACK) சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.

APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER, Coimbatore.



'மித்திரன்' காரியாலய சூப்பிரன்டெண்டு ஸ்ரீ வேணுகோபால் பிள்ளையின் ஒரே குமாரனன ஸ்ரீ சிட்டிபாபு சமீபத்தில் காலமானர்.

★ லண்டனிலுள்ள ஒரு சிற்பசாலை ★



லண்டனில் களிமண், மரம், ஆகியவற்றைக் கொண்டு சிற்பங்களைத் தயாரிக்கக்கூடிய பல நிபுணர்களிருக்கின்றனர். மிஸ்டர் பார்ட்டன் என்பவர் தாம் செய்த பொம்மையொன்றை கடைசியாகச் சரி பார்க்கிறார். அவர் செய்த இதர பொம்மைகளையும் படத்தில் காணலாம்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

50 லட்சம் கார்களுக்கு லாயம்!

அமெரிக்காவில் பெட்ரோலுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கிச் சொல்லத்தரமாயில்லை. கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் சரக்கேற்றிச் செல்லுபவை தவிர மற்றெல்லா யுத்தக் கார்களுக்கும் ஒரே ஒரு பெட்ரோல் கூப்பன்தான் இனி கொடுக்கப்படும். இதனுல் சுமார் 50 லட்சம் கார்கள் வெளிக்கிளம்பாமல் லாயங்களில் அடைபட்டு விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

ஜப்பான் வாளாவிருப்பதன் மர்மம்!

ஜப்பானின் அந்தரங்க எண்ணமென்ன? என்ற தலைப்புடன் ஈவனிங் ஸ்டாண்டர்ட் பத்திரிகையின் ராணுவ நிருபர் ஜப்பானின் யுத்த முறையை ஆராய்ந்திருக்கிறார்.

"ஜப்பான் தற்போது வாளாவிருப்பதை நேச நாடுகள் ஆழ்ந்த சந்தேகத்துடன் கவனித்து வரவேண்டும்."

என்பதே அந்நிருபர் கூறியுள்ள முடிவு.

அவர் கட்டுரையின் சாரம் வருமாறு:—

நாஜிகளுக்கு உதவிகரமாக அவர்கள் சொன்னபடி நடப்பதென்பது ஜப்பானியரின் கருத்தல்ல தூரக்கிழக்கில் ராணுவ-கடற்படை பலத்தில் நிகரற்ற நாடாக ஊன்றிக் கொள்ளவே ஜப்பான் மற்ற அச்சு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

ஜப்பானியத் திட்டத்தில் முதல் கட்டம் தென் பஸிபிக்கிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்கப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொள்ளல். முதல் கட்டம் பற்றிய போர் நடவடிக்கைகள் முடியுமுன்பே இரண்டாவது கட்டத்தைத் துவக்கினர்' அவர்கள் ஜாவாவையும் பர்மாவையும் ஆக்கிரமித்துக் கொண்டதுடன் ஆஸ்திரேலியாவைச் சுற்றிய தீவுகளையும் கைப்பற்றலாயினர்.

டன்கிர்க்குக்குப் பின் ஹிட்லருக்கு எவ்வளவு முக்கியமான ஒரு பிரச்னை ஏற்பட்டதோ அவ்வளவு முக்கியமான ஒருபிரச்னை ஜப்பானியருக்கு சென்ற ஏப்ரல் மாதம் ஏற்பட்டது ஹிட்லரைப் போலவே ஜப்பானியரும் பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். வங்காளக் கடல், பவழக்கடல் இவற்றிலும் மிட்வேக்கருகிலும் ஜப்பானியக் கடற்படை நேசக் கடற்படையைப் பதம் பார்த்த பொழுது எதிரிகளுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது. ஆனல் அவர்கள் தங்களுடைய பிரதேசங்களைப் பாதுகாத்துக்கொள்ள இந்த 'தியாகம்' செய்தாக வேண்டியிருந்தது. அப்பிரதேசங்களுக்குள் அவர்கள் வாளாவிருந்து வரவில்லை அவர்களுடைய துருப்புகள் எதிர்காலப் போராட்டங்களுக்காகப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது.

சீனுவிலிருந்தோ இந்தியாவிலிருந்தோ யாரும் தங்களைத் தாக்க முடியாதென்ற உறுதி ஜப்பானியருக்கு ஏற்படும், வரை அவர்கள் கவலையற்றிருப்பதற்கில்லை. பஸிபிக்கிலும், ஆசியாவிலும் அவர்கள் இன்னும் ஊன்றிக் கொண்டு விடவில்லை. புலி பாய்வதற்கு முன் பதுங்குவதுண்டு. ஜப்பானின் திட்டத்தில் இதுதான் நான்காவது கட்டம்.

* * * *

டியுனிஸியாவில் பெரிய போருக்கு முஸ்தீப்பு

டியுனிஸியப் போர் முனையிலுள்ள ராய்ட்டரின் விசேஷ நிருபர் அறிவிப்பதாவது:—

விரைவில் துவங்கவிருக்கும் பெரிய தாக்குதலை முன்னிட்டு நேசக் கட்சியைச் சேர்ந்த எல்லா படைகளும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜெர்மனியரும் முஸ்திப்பு செய்து கொண்டு வருவதாக தெரிகிறது. அவர்கள் தங்கள் டாங்கிப் படையை துரிதமாக வலுப்படுத்த முயன்று வருகின்றனர்.

* * *

ஸ்பெயின்-போர்ச்சுகல் ஐக்கியம்

ஸ்பானிய அந்நிய நாட்டு மந்திரியான ஜோர்டானு ஒரு விருந்தில் பேசுகையில், போர்ச்சுகல்-ஸ்பெயின் ஐக்கியம் ஏற்பட்டிருப்பதாக அறிவித்தார். சமாதானத்தை நிலைநிறுத்தி மற்ற தேசங்களின் போக்கை மாற்றக் கூடிய சக்தி அவ்வைக்கியத்திற்கு உண்டென அவர் அறிவித்தார்.

* * * *

ரஷ்ய எல்லையில் 10 லக்ஷம் ஜப்பானியர்

மஞ்சூரியாவிலிருந்து வந்த ஒரு பிரயாணி கூறிவதாவது:—

ஜப்பானியர் சோவியத் எல்லையில் சுமார் 10 லக்ஷம் முதல்தரமான ஜப்பானியத் துருப்புகளை நிறுத்தி வைத்திருக்கின்றனர்,

இப்போது ஜப்பானியருக்கு மஞ்சூரியாவில் ராணுவத் தளவாடங்கள் செல்லக்கூடிய 30,000 மைல் நீளமுள்ள ரஸ்தாக்களும் 7500 மைல் நீளமுள்ள ரயில் பாதைகளும் இருக்கின்றன. யாலு என்ற நதிக்குக் குறுக்கே நான்கு பாலங்கள் இருக்கின்றன. மஞ்சூரியாவுக்கும, கொரியாவுக்கும் இடையேயுள்ள இத்தொடர்புகள் மூலம் ஜப்பானிய-ரஷ்ய எல்லைக்கு துரிதமாக ஜப்பானிய துருப்புகளைக் கொண்டு செல்லக்கூடும்.

நான் வாங்கின சைக்கிள்!

★

ஸ்ரீ ஆர். எதிராஜ்

நான் ஒரு மிராசுதாருடைய கணக்குப் பிள்ளை. எனக்குக் கொடுக்கும் மாதச் சம்பளமான 15 ரூபாயையும் ஒரு காலணுகூட எடுக்காமல் என் மனைவியிடம் கொடுத்து விடவேண்டும், தப்பித் தவறி சம்பளத்தில் ஒரு காலணு எடுத்துவிட்டேனுனல் அன்று வீட்டில் ஒரே அமர்க்களம்தான். மாதம் ஒரு முறை என் பொடிச் செலவுக்காக தயவாய்க் கொடுக்கும் மூன்று அணுவுக்கு மேல் ஒரு தம்படிகூட என் மனைவி எனக்குக் கொடுக்கமாட்டாள். என் பெற்றோர்கள் இப்பேர்ப்பட்ட குணவதியைப் பிடித்து என் தலையில் கட்டினுர்கள் இனி என்ன செய்ய முடியும்?

என் வீட்டுக்கும் நான் வேலை செய்யும் இடத்திற்கும் 3 மைல் தூரம் இருக்கும். காற்று மழை பெய்தாலும் பனி பெய்து கொண்டிருந்தாலும் காலை ஐந்து மணிக்கெல்லாம் மிராசுதார் வீட்டிற்கு கால் நடையாய் போய்ச் சேர்ந்து விடுவேன். இப்படி போவது எனக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது, என்ன செய்வது? அப்படி ஐந்து மணிக்கெல்லாம் அங்கு போகாவிட்டால் வேறொரு ஆளை வைத்துக்கொள்வதாக மிராசுதார் பல தடவைகளில் சொல்லி இருக்கிறார்.

ஒரு நாள் என் நண்பன் ஒருவன் என்னைப் பார்ப்பதற்காகத் தன் சைக்கிளுடன் என் வீட்டுக்கு வந்திருந்தான். என் யோக க்ஷேமம் எல்லாம விசாரித்த பிறகு 'நீ அவ்வளவு தூரம் வேலைக்கு நடந்து போவது மிகவும் கஷ்டமாய் இருக்குமே! ஒரு சைக்கில வாங்கிக்கொண்டால் ஐந்து நிமிஷத்தில் போய்ச் சேர்ந்துவிடலாமே' என்று பேச்சோடுபேச்சாக என் நன்மையில் சிரத்தை கொண்டு ஓர் யோசனை சொன்னுன். அது நடக்க எவ்வளவு சிரமப்பட்டுப் போகும் என்பதை அவன் கண்டானு? நான் தினசரி பொடிக்குக காசு பெறப்படும் பாட்டை வெளியில் சொல்லிக் கொள்ளும்படியா இருக்கிறது? அவனுக்குத்தோன்றியதைச் சொல்லிப் போனுன். எனக்கு ஆசைதான் சைக்கிலில் போக. ஆனுல மறு நிமிஷமே என் மனைவியின ஞாபகம் வரவே என் ஆசை எல்லாம வீண் என்று தோன்றிற்று. இருந்தாலும் எப்படியேனும் ஒரு சைக்கிள் வாங்கியே தீருவது என்று திர்மானித்துக் கொண்டு சமயம் பார்த்திருந்தேன்.

ஒரு நாள் என் மனைவி சந்தோஷமாய் இருக்கையில் என் விருப்பத்தை தெரிவித்தேன்.

"நன்ருய் இருக்கிறது! சைக்கிள் வேண்டுமோ? எலலோரும் சைககிளில்தான் வேலைக்குப் போகிறுர்களோ? நாம் பிழைக்கிற பிழைப்புக்கு சைக்கிள் ஒன்றுதான் குறைவாய் இருக்கிறதாக்கும்," என்று சொல்லி என் மேல் சீறி விழுநதாள்.

உடனே நான் மெள்ள வெளியில நழுவி விட்டேன். அடுத்த மாதம் முதல் தேதி சம்பளம் வாங்கினதும் எனக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. அதன்படியே செய்வதென்று தீர்மானித்துக் கொண்டு வீட்டுக்குப் போய் 15-ரூபாயையும் என் மனைவியிடம கொடுத்தேன். அவள் ரூபாய்களை எண்ணிப் பார்தத பிறகு 'பெட்டியில் வைத்துப் பூட்டிச் சாவியை இடுபபில் சொருகிக் கொண்டாள் இதை எல்லாம் அவளுக்குத் தெரியாமல் உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

அன்றிரவு நடு நிசியில் மெள்ள எழுந்து என் மனைவி தூங்குகின்ருளா என்று பாந்த்தேன். என் அதிர்ஷ்ட வசத்தால் நன்ருய்த் தூஙகிக் கொண்டிருந்தாள், அவளிடமிருந்த சாவியை மிகவும் ஜாக்கிரதையாக எடுத்துப் பெட்டியைத் திறந்து நான் கொடுத்திருந்த பணத்தை எடுத்துக் கொண்டு போய்த் தோட்டத்தில் புதைத்து விட்டு மீண்டும் இருந்த இடத்திலேயே வைத்து விட்டு ஒன்றும தெரியாதவனைப் போல் படுத்துக் கொண்டேன்.

மறு நாள் வேலைக்குப் போய் மாலை ஏழுமணிக்கு திகிலுடனே வீட்டுக்குள் நுழைந்தேன். வீடு முழுவதும் ஒரே அமளி. என் மனைவி என்னைப் பார்த்தவுடனே "நேற்று நீங்கள் கொடுத்த ரூபாயை இரவில் யாரோ திருடர்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள், காலையில் பாலகாரனுக்குப் பணம் கொடுக்கலாமென்று பாாத்த பொழுது பணத்தைக் காணோம். நீங்கள் ஒரு சமயம..." என்று கேட்டாள். தைரியமாக "நான் ஏன எடுக்கப் போகிறேன்" என்று நான் ஒரு போடு போட்டேன். ஒரு வாரம் கழித்து, புதைத்து வைத்திருந்த ரூபாயை எடுத்துக்கொண்டு ஒரு சைக்கிள் கமபெனிக்குப் போய் ரூ. 35 விலையில் சைக்கிளைப் பார்த்தேன். தவணையில் அடுத்த மாதம் தருவதாகச் சொல்லி கடைக்காரனிடம் ரூ. 15 நீட்டினேன். சிறிது தகராறு செய்த பின் கடைக்காரன் சைக்கிளைக் கொடுத்தான். நானும் பாக்கி ரூ. 20-க்கு பாண்டு எழுதிக் கொடுத்தேன்.

சைக்கிளுடன் வீடு வந்தேன். என் மனைவி அதைப் பார்த்தவுடனே "இது ஏது", என்ருள்? நான் முன் யோசனை செய்திருந்தபடி நண்பன ஒருவன் ஊருக்குப் போகப் போகிருன் என்றும் அவன் வருமவரைக்கும் அதை வைத்துக் கொண்டிருக்கச் சொன்னேன் என்றும் சொல்லி விஷயத்தை மழுப்பி விட்டேன.

என் மைத்துனன் ராஜு காலேஜ் விடுமுறையில் விட்டுக்கு வந்திருந்தான் ஒரு நாள் பலமான தலைவலியை முன்னிட்டு நான் வேலைக்குப் போகவில்லை. அன்று மாலை என் மனைவி என்னிடம் வந்து ராஜு சினிமாவுக்குப் போகப் போகிருனும், கொஞ்சம் உங்கள் சைககிளைக் கொடுங்கள் அவன் போய் வரட்டும் என்ருள்.

நான கொடுக்கமாட்டேனென்று எப்படிச் சொல்வது? "சரி; எடுத்துககொண்டு பத்திரமாய்ப் போய் வரச்சொல்" என்றேன்.

அவன் போன கொஞ்ச நேரத்திறகெல்லாம் வீட்டு வாசலில் ஒரே கூச்சலாய் இருந்தது. என்ன வென்று நானும் என் மனைவியும் வெளியில் வந்து பார்த்த பொழுது என்னைத் தூக்கி வாரிப்போட்டாப் போலாய் விட்டது. நான் அருமையாய் வாங்கின சைக்கில் உடைந்து ஒரு கட்டை வண்டியில் அச்சு வேறு ஆணி வேறுகக் கொண்டு வரப்பட்டிருந்தது மற்ருெரு புறம் ரிக்ஷாவில் என் மைத்துனன் ராஜு முகத்திலும் கால் கைகளிலும் ரத்தக் காயங்களுடன் உடகார்ந்திருந்தான. திரளான ஜனங்களும ஒரு கான்ஸ்டேபிளும் கூடியிருந்தார்கள்.

விசாரித்ததில் ராஜு சைக்கிலில் போய்க் கொண்டிருந்த பொழுது எதிரில் வந்த ஒரு லாரிமீது மோதியதால் இக்கதி நேர்ந்ததென்று தெரிய வந்தது.

இச்சமயத்தில் ஒருவன் என்னிடம் வந்து ஒரு கவரைக் கொடுத்தான.

பிரித்தேன், சைக்கிள் கம்பெனி பாககிக்காக நோட்டீஸ்! ஆளும் அனுப்பப்பட்டிருந்தான். என்ன கடிதம்? என்று என் மனைவி கேட்டாள், இந்த சந்தர்ப்பத்தில்.

(1) என் மனைவிக்குப் பதில் சொலவதா?

(2) கடனுக்குப் பதில் சொல்வதா?

(3) சைக்கிள் ஏற்றிவந்த கட்டை வண்டிக்கும் என் மைத்துனன் ஏறிவந்த ரிக்ஷாவுக்கும் வாடகை கொடுபபதா?

(4) அடிபட்டிருக்கும் என் மைத்துனனுக்கு சிகிச்சை செய்வதா?

(5) உடைந்திருக்கும் என் அருமை சைக்கிளைப் பார்ப்பதா?

இந்த கேள்விகளுக்கு ஜவாப் சொல்லுவதற்குள் 'சைக்கிள் விடத்தெரியாதவனிடம அதைக் கொடுக்கலாமா?' என்று ஒருவர் கேள்வி கேட்க ஆரம்பிததார். உடனே என் அருமை மைத்துனனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்படியும் மறற விஷயங்களை அப்புறம் பார்க்கலாம் என்ருர் இன்னொருவர். பணத்தைக் கொடுத்துவிட்டால் நான் போய்விடுவேனே! என்ருன் சைக்கிள்காரன். இதில் மனைவியின் குறுக்குக் கேள்விகள். வேறு! ஒரே குழப்பம்! இதற்கு யாரை நொந்துகொள்வது? இது என் தலைச் சுழியின் பலன். அட... சைக்கிள்தான் முறிந்து போயிற்றே. யென்ருல் பாக்கிப் பணத்துக்காக கடைக்காரன் [illegible] போட்டு விட்டான்! என் மைத்துனன் அஜாக்கிரதையாக சைக்கிளை விட்டு லாரிமீது மோதியதற்காக மைத்துனன் மீது போலீஸ் குற்றச்சாட்டு இதெல்லாம் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒரு சைக்கிளுக்குப் பதிலாக இன்னும் 2 சைக்கிள்கள் வேண்டுமானுலும் முறியட்டும்! 'கேஸ்'கள் இல்லாமலிருந்தால் போதும்! என்ற நிலைமை வந்து விட்டது. பட்ட கடனைத் தீர்க்க இன்னும் வழி தேடிக் கொண்டிருக்கிறேன்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி. குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளை
(ஆர். ஐ. யம். பி.) அவர்களின்

நெக்டார்	5 அவு. புட்டி 1க்கு	1-4-0
கிரைப் வாட்டர்	5 ,, ,, ,,	1-4-0
ஓமவாட்டர்	24 ,, ,, ,,	1-2-0
இங்கிலீஷ் வெனிசர்	24 ,, ,, ,,	1-4-0
சர்ம வியாதி நிவாரணி	100 மாத்திரை	1-0-0
பற்பொடி	20 பொட்லம்	1-4-0
கால்ரா பவுடர்	6 வேளை மருந்து	1-0-0
சுவர்ணுள் சம்மர் ஆயில்	4 அவு. பு. 1க்கு	2-0-0
பாவலர் ரிடைனே பில்ஸ்	20க்கு	1-4-0

தபாற்செலவு வேறு. மருந்தின் பாதிக்கிரயம் முன் பணமாக அனுப்பப்படவேண்டும்.

கிடைக்குமிடம் :
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயுபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்